பல்கலைக்கழக மானியக்குழு (UGC) அங்கீகாரம் பெற்ற மாதஇதழ்
New Centurian Ungal Noolagam ISSN 2394-7535-122

நியூ செஞ்சுரியின்

# உங்கள் நூலகம்

மாத இதழ்

New Centurian Ungal Noolagam (Tamil English - Bilingual Monthly)


| மலர் : 18 | இதழ் : 04 | www.ncbhpublisher.in | ஜூலை 2025 | விலை | ₹ 45/- | ஆண்டு சந்தா | ₹ 540/- |
|---|---|---|---|---|---|---|---|
| Vol : 18 | Issue : 04 | | July 2025 | Price | | Annual Subscription | |




நியூ செஞ்சுரியின் புதிய வெளியீடு

# இறையன்பு

## ஓராண்டு உரைகள்

### 4 தொகுதிகள்




**கெட்டி அட்டை 1800 பக்கங்கள் ரூ 1750/–**

## நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்.,

41-பி,சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட், அம்பத்தூர், சென்னை – 600 050.
☎ 044 - 26251968, 26258410, | www.ncbhpublisher.in | email: info@ncbh.in

நியூ செஞ்சுரி புத்தக நிறுவனத்தின் அனைத்து கிளைகளிலும் மற்றும் புத்தகக் கண்காட்சி அரங்குகளிலும் கிடைக்கும்.




கற்றது கைம்மண்ணளவு
கல்லாதது உலகளவு

**நியூ செஞ்சுரியின்**

# உங்கள் நூலகம்

**மாத இதழ்**
*திருவள்ளுவராண்டு 2055*
*மலர் - 18 இதழ் - 04 - ஜூலை 2025*

ஆசிரியர்
**த.ஸ்டாலின் குணசேகரன்**



ஆசிரியர் குழு
*க.சந்தானம்*
*பேராசிரியர் ஆ.சிவசுப்பிரமணியன்*
*முனைவர் ச.சுபாஷ் சந்திரபோஸ்*
*முனைவர் ந.முத்துமோகன்*
*முனைவர் மு.இராமசுவாமி*
*முனைவர் நா.இராமச்சந்திரன்*
*முனைவர் பா.ஆனந்தகுமார்*
*முனைவர் ஞா.ஸ்டீபன்*
*ப.கு.ராஜன்*
*முனைவர் இரா.அறவேந்தன்*
*முனைவர் இரா.காமராசு*
*முனைவர் உ.அலிபாவா*

இதழ் வடிவமைப்பு
***கா. குணசேகரன்***



நியூ செஞ்சுரி வாசகர் சங்கம்
பதிவு எண் : 21/2005/ 11/2/2005
16 (142). ஜானி ஜான்கான் ரோடு.
இராயப்பேட்டை. சென்னை - 600 014
ungalnoolagam@gmail.com
இணைய தள முகவரி: www.ncbhpublisher.in

தனி இதழ் ₹ 45.00. ஆண்டு சந்தா ₹ 540.00
மாணவர்களுக்கு ₹ 500.00
ஆயுள் சந்தா ₹ 5400.00
அயல்நாடு (ஆண்டு சந்தா) ₹ 4050.00
*சந்தா தொகையை*
**New Century Reader's Sangam**
**Central Bank of India**
**Ambattur Branch. Chennai - 600 050**
**A/c.No. 1035249018**
**IFSC Code : CBIN0282161**
*என்ற வங்கிக் கணக்கில் செலுத்தலாம்.*

உங்கள் நூலகம் பற்றிய விமர்சனக் கடிதங்கள்,
உங்கள் நூலகத்திற்கான படைப்புகள், கட்டுரைகள்,
நூல் விமர்சனங்கள், மதிப்புரைக்கான நூல்கள்
ஆகியவற்றைக் கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்புமாறு வேண்டுகிறோம்.

**ஆசிரியர்**
**உங்கள் நூலகம்**
**நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், (பி) லிட்.,**
**41-பி. சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட்.**
**அம்பத்தூர். சென்னை - 600 050.**
**தொலைபேசி எண் : 044-26251968, 26258410**


## உள்ளே...


1 சிரமம் இல்லாமல் சிகரம் இல்லை
ஆசிரியர் குழு.... 04

2 இப்போது, மக்கள்! - 21 ஆம் நூற்றாண்டில்
ப.கு.ராஜன்.... 06

3 நூற்றாண்டு காணும் பேராசிரியர் கா. மீனாட்சிசுந்தரம்
சிற்பி பாலசுப்பிரமணியம்.... 13

4 காங்கிரசு – காந்தி – தீண்டப்படாதோர்: அண்ணல் அம்பேத்கர் உரையாடல்கள்
வீ.அரசு.... 19

5 தொல்கபிலர் தமிழ் அறிவு மரபின் தந்தை
கணியன்பாலன் .... 27

6 இறையன்பு ஓராண்டு உரைகள் நிகழ்த்தும் கட்டமைப்பும் கட்டுடைப்பும்
முனைவர் ஜா.சலேத் .... 32

7 பன்முகம் கொண்ட பா.வே.மாணிக்க நாயக்கர்
டாக்டர் சு.நரேந்திரன்.... 40

8 சமகாலப் பிரச்சினைகளைப் பேசும் நாவல்
ஈரோடு சர்மிளா .... 44

9 நீதி நெறிக்கதைகளைப் போலவே மீளவும் எழுதவேண்டியதில்லை
விஷ்ணுபுரம் சரவணன் .... 46

10 இடதுசாரி இலக்கிய முன்னோடி பி.கேசவதேவ் எழுத்து
வே. குமரவேல் .... 50

11 மிகவும் கவனமாக எழுத்தைக் கையாளுகிறேன்
லட்சுமிஹர்.... 54

12 மரணத்தில் வீசப்படும் பூக்களுக்கு வாசம் இல்லை
யாழ் எஸ் ராகவன் .... 56

13 ஐங்குறுநூற்றுக் 'கருத்துரை' எனும் எடுத்துரைப்புக் கருவி
ம.லோகேஸ்வரன் .... 59

14 பாரதியின் ஜப்பானிய தரிசனம்
கு. முதற்பாவலர் .... 63

15 தமிழர் வாழ்வில் நிகழ்த்துக் கலைகளின்.......
சி. ஆர்த்தி, முனைவர் நா. தனராசன், முனைவர் இல. பொம்மி.... 66

16 DESTIGMATISING DISABILITY N FIRDAUS KANGA'S TRYING TO GROWS.
G.Krishnaveni & Dr. B.Winmayil .... 70





# சிரமம் இல்லாமல் சிகரம் இல்லை

தமிழ்நாடு மாநிலம் முழுவதிலுமுள்ள கல்விநிலைய நூலகங்களின் மீது பல்கலைக்கழக மானியக்குழுவும், அரசும் தனிக்கவனம் செலுத்த வேண்டும்.

பள்ளி, கல்லூரிகளின் இதயப் பகுதியாக இருக்க வேண்டியவை அவற்றின் நூலகங்களே.

சில கல்லூரி நூலகங்களுக்குப் புதிய நூல்கள் வாங்கப்பட்டு பத்து ஆண்டுகள், பதினைந்து ஆண்டுகள் ஆகின்றன. பழைய நூல்களை வைத்துக் கொண்டு அந்நூலகங்கள் காலங்கழிக்கின்றன.

மாணவர்களை பாடப்புத்தகங்களைத் தாண்டி பொது நூல்களை வாசிக்க வைப்பது அப்படியொன்றும் சுலபமில்லை. ஆசிரியர் வழிகாட்டுதல், பெற்றோர் ஒத்துழைப்பு என்று பல்வகை முயற்சிகளும் முன்னெடுப்புகளும் தேவைப்படுகின்றன. மாநிலமெங்கும் புத்தகத்திருவிழாக்கள் நடத்தப்படுவதும் வாசிப்பின் முக்கியத்துவம் பற்றி சொற்பொழிவுகள் நிகழ்த்தப்படுவதும் ஓரளவு வாசிப்புப் பழக்கத்தைத் தூண்டுகின்றன.

கல்லூரிகளுக்கு பல்கலைக்கழக மானியக்குழுவின் சார்பில் நூலகங்களுக்குப் புத்தகங்கள் வழங்கி வந்தனர். நிதி ஒதுக்கினர். பல ஆண்டுகளுக்கு முன்பே இத்திட்டத்தை யூஜிசி கைவிட்டுவிட்டது.

அரசு உதவிபெறும் கல்லூரிகளில் நூலக மேம்பாட்டுக்கு என்று ஆண்டுதோறும் மாணவர்களிடம் சொற்பத் தொகை வசூலிக்கப்படுகிறது. அத்தொகை புதிதாகப் புத்தகங்கள் வாங்குவதற்குப் பயன்படுத்தப் படுவதில்லை, அத்தொகை அதற்கான அளவுக்கு இருக்காது. நான்கைந்து செய்தித்தாள்கள் வாங்கிப் போடுவதற்கும் நூலகம் தொடர்புள்ள சில்லறைச் செலவுகள் செய்யப்படுவதற்கும் தான் அச்சிறு தொகை பயன்படுகிறது.

நூலகர்களை ‘ஆசிரியர்களின் ஆசிரியர்கள்’ என்பர். ஆனால் பல பள்ளி, கல்லூரிகளில் நூலகங்களே இல்லை. நூலகர் பணியிடம் காலியாகவே உள்ளது.

சில கல்வி நிறுவனங்களில் மிகவும் குறைவான சம்பளத்தைக் கொடுத்து போதுமான கல்வித்தகுதியும் அனுபவமும் இல்லாத நூலகர்களை நியமித்துள்ளனர். அவர்கள் பெயரளவிற்கான நூலகர்களாகவே விளங்குகின்றனர். கேட்டால் நிதி ஆதாரம் இல்லை என்கிறது கல்லூரி நிர்வாகம்.

மாணவர்களிடையே அவர்கள் பயிலுகிற கல்வி நிலையங்களிலுள்ள நூலகங்களைப் பயன்படுத்த வேண்டும் என்ற சிந்தனையை எப்பாடுபட்டாவது விதைக்க வேண்டும். அது சற்று சிரமம்தான் என்றாலும் கல்வித்துறை, நிர்வாகம், முதல்வர், தலைமையாசிரியர், ஆசிரியர் என அனைவரும் ஒருங்கிணைந்து உணர்வுப்பூர்வமான முயற்சிகள் மேற்கொண்டால் முன்னேற்றம் ஏற்படும்.

இவற்றிற்கெல்லாம் அடிப்படை அந்நிறுவன நூலகம் உயிரோட்டத்துடன் செயல்பட வேண்டும். கல்வித்துறை புத்தகங்கள் நூலகங்களுக்குக் கிடைக்கப் பெற வழிவகை செய்ய வேண்டும். தலைமையாசிரியர் மாணவர்களிடையே உரியவர்களை வைத்து உரைநிகழ்த்த வைத்தோ, வேறுபல வாசிப்பு விழிப்புணர்வு முயற்சிகளை மேற்கொண்டோ வாசிப்புச் சுவையை ஏற்படுத்த புதுமையான முன்னெடுப்புகளைச் செய்ய வேண்டும். ஆசிரியர் எந்தப் பாடம் எடுப்பவராக இருந்தாலும் மாணவர்களுக்கு உகந்தது என தான் கருதக்கூடிய பொது நூல்களை வகுப்பறையில் சில நிமிடங்களேனும் ஒதுக்கி வலுவாக அறிமுகப்படுத்த வேண்டும்.

முத்துப்பேட்டையிலுள்ள பெண்கள் பயிலும் தனியார் பள்ளியொன்றில் செயல்படும் நூலகத்தில் மாணவி கேட்கும் நூல் இல்லையென்றால் ‘இல்லை’ என்று மட்டும் சொல்லி அனுப்பப்படுவதில்லை. அங்கு பணி புரியும் நூலகர் அம்மாணவிக்கு ஒரு படிவம் கொடுக்கிறார், அப்படிவத்தை அம்மாணவி பூர்த்தி செய்து கொடுக்கிறார். அது அப்பள்ளியின் தாளாளருக்கு உடனே மின்னஞ்சலில் அனுப்பப்படுகிறது. அந்நூல் உலகின் எந்த மூலையில் இருந்தாலும், அரிதினும் அரிதான நூலாக இருந்தாலும் முயற்சியெடுத்து வாங்கியனுப்பப்படுகிறது. விரைவில் அந்நூல் அந்நூலகத்திற்கு வந்து சேருமாறு வழிவகை செய்யப்படுகிறது.

ஒரு சமூகத்தையே அறிவார்ந்த சமூகமாக ஆக்க வேண்டுமென்றால் அது ஒரு நாளில்,



ஒரு மனிதரால், ஒரு பகுதியில், ஒரு நிறுவனத்தால் நடைபெறுவதில்லை. சமூகமே அத்திசை நோக்கிச் சிந்திக்க வேண்டும். நகர வேண்டும்.

தமிழ்நாடு முழுவதிலுமுள்ள பள்ளி, கல்லூரி நூலகங்களின் தரம், தகுதி, செயல்பாடு பற்றி ஆழமாக ஆய்வு செய்ய வேண்டும். அந்நூலகங்களுக்கு உயிர் கொடுக்க வேண்டும். சிறப்பாகச் செயல்படும் நூலகங்களுக்கு ஊக்கம் அளிக்க வேண்டும். அவ்வாறு செயல்படாத நூலகங்களின் மீது தனிக்கவனம் செலுத்த வேண்டும்.

இன்றைய மாணவர் உலகம் நூலகங்களுக்குள் நுழைய மறுக்கிறது என்று சொல்லிப் புலம்புவதைவிட அவர்களை வாசிக்க வைப்பது எப்படி என்பது குறித்து புதிய கோணங்களில் யோசிக்க வேண்டும்.

***சிரமம் இல்லாமல் சிகரம் இல்லை.***

●

**ஆசிரியர் குழு**

## படித்துப் பாருங்களேன்...



ப.கு.ராஜன்

# இப்போது, மக்கள்! – 21 ஆம் நூற்றாண்டில் புரட்சி

## ழான் லுக் மெலென்ஸோன்

**Now, the People! - Revolution in the 21st Century**
**Jean-Luc Melenchon**

**(Founder of La France Insoumise and the Leader of French Left)**
**Verso - London+New York - 2025**

**ழான்–லுக் மெலென்ஸோன்**

நூலை அறிமுகம் செய்யும் முன் நூலாசிரியரை அறிமுகம் செய்து வைக்க வேண்டியுள்ளது. ழான்-லுக் மெலன்ஸோன் ஃபிரான்ஸ் நாட்டின் ‘புதிய மக்கள் முன்னணி’ (Nouveau Front populaire) என்ற இடதுசாரி அணியின் மக்கள் செல்வாக்கு மிக்க தலைவர். முன்னணியின் ஆகப்பெரிய கட்சியான எல்.எஃப்.ஐ (LFI - La France Insoumise - France Unbowed) எனப்படும் ‘தலைவணங்கா ஃபிரான்ஸ்’ எனும் வித்தியாசமான பெயரைக் கொண்ட புதிய இடதுசாரிக் கட்சியின் தலைவர்.



மெலன்ஸோன் 1951 ஆம் ஆண்டில் மொரோக்கோ நாட்டின் டாஞ்சியர் நகரில் பிறந்தார். தந்தை ஸ்பானிய வம்சாவளியைச் சேர்ந்தவர். தாய் ஸ்பானிய, இத்தாலிய-சிசிலியன் கலப்பு வம்சா வளியினர். தந்தை போஸ்ட் மாஸ்டர்; தாய் தொடக்கப் பள்ளி ஆசிரியர் என நடுத்தர வர்க்க குடும்பம். 10 வயதில் குடும்பம் பிரான்சில் குடியேறியது. ஃபிரான்சின் வேறு வேறு நகரங்களில் பள்ளிக் கல்வியையும் பல்கலைக்கழகக் கல்வியையும் கற்று தத்துவத்தில் பட்டம் பெற்றார். பின் கல்வியியலிலும் பட்டம் பெற்று சில ஆண்டுகள் (1972-76) ஆசிரியராகப் பணியாற்றினார்.

மாணவராக இருந்தபோது ஒரு சிறிய ட்ராட்ஸ்கிய கட்சியின் உறுப்பினராக இருந்தார். 1968 ஆம் ஆண்டு ஃபிரெஞ்சு மாணவர் போராட்டங்களின் போது (பார்க்க : ‘தெருச்சண்டை ஆண்டுகள்’ - தாரிக் அலி - தமிழில் : க.பூரண சந்திரன் - NCBH வெளியீடு.) ட்ராட்ஸ்கிய இயக்கங்களின் குறுங்குழு வாதங்கள், ஜனநாயக மறுப்பு ஆகியவற்றில் மனம் வெறுத்து ட்ராட்ஸ்கியகக் கட்சியில் இருந்தும், கருத்தியலில் இருந்தும் வெளிவந்தார். 1968 ஆம் ஆண்டு செக்கோஸ்லோவாகியாவில் நடந்த சோசலிசச் சீர்திருத்தங்களின் மீது அன்றைய சோவியத் யூனியன் படையெழுப்பித் தாக்குதல் நடத்தியது. பிராக் வசந்தம் (Prague Spring) எனும் மலர்ச்சி சோவியத் டாங்குகளின் கீழ் நசுங்கியது. இந்த வரலாற்றுப் பிழை ஐரோப்பா முழுவதும் மரபார்ந்த கம்யூனிஸ்ட் கட்சிகளில் இருந்த பலரையும் அதிர்ச்சிக்கு


உள்ளாக்கி அந்நியப்படுத்தியது. மெலென்ஸோன் போன்ற பல இடதுசாரிகளையும் மரபார்ந்த கம்யூனிஸ்ட் கட்சிகளிடமிருந்து தள்ளி நிறுத்தியது. ஐரோப்பாவில் செல்வாக்குடன் விளங்கிய கம்யூனிஸ்ட் கட்சிகள் மக்களின் ஜனநாயக உணர்வுகளுக்கு இடம் கொடுக்காமல் தனிமைப்பட்டு சிறுத்து குறுங்குழுக்களாக மாறும் போக்கு இதிலிருந்து வேகம் கொண்டு நடந்தது.

அவரைப் போன்ற வேறுபலரைப் போல மெலென்ஸோனும் அன்று நம்பிக்கை அளிப்பதாக இருந்த ஃபிரான்சுவா மித்ரன் (Francois Mitterrand) தலைமையிலான ஃபிரெஞ்சு சோசலிஸ்ட் கட்சியில் உறுப்பினராக ஆனார். கட்சியின் சார்பாக 1986, 1995, 2004 தேர்தல்களில் வெற்றிபெற்று பாராளுமன்ற உறுப்பினராகச் செயல்பட்டார். லயனல் யோஸ்பின் (Lionel Jospin) சோசலிசக் கட்சியின் பிரதமராக ஆனபோது அவரது அமைச்சரவையில் தொழிற்பயிற்சி கல்வி அமைச்சராக பணிபுரிந்தார்.

ரொனால்ட் ரீகன், மார்கரெட் தாட்சர் ஆகியோரின் நவதாராளவாதம் கோலோச்சிய காலத்தில், சோவியத் சீர்குலைவிற்குப் பிறகு ஃபிரெஞ்சு சோசலிஸ்ட் கட்சி, பிரிட்டனின் தொழிலாளர் கட்சி, அமெரிக்காவின் ஜனநாயகக் கட்சி, ஜெர்மனியின் சமூக ஜனநாயகக் கட்சி ஆகியவை வலதுசாரிக் கட்சிகளாக முழுமையாக பரிணமித்தன. சோசலிசத்தின் மீதும் ஜனநாயகத்தின் மீதும் பற்று கொண்ட பலரும் இதுபோன்ற கட்சிகளில் இருந்து விலகினர். சோவியத் வீழ்ச்சியில் சரியான பாடம் கற்காமல் பழைய பாணியில் தொடர்ந்த மரபார்ந்த கம்யூனிஸ்ட் கட்சிகளில் இருந்தும் பலரும் வெளியேறினர்.

**புதிய இடதுசாரிக் கட்சிகள்**

இந்த இரண்டு நீரோடைகளும் ஒன்றிணைந்து தான் ஐரோப்பாவில் பல நாடுகளில் புதிய இடதுசாரிக் கட்சிகள் உருவாயின. ஜெர்மனியில் 'இடது கட்சி' (Die Linke), இத்தாலியில் 'இத்தாலிய இடது கட்சி' (Sinistra Italiana), கிரீசில் 'ஸிரீஸா' (Syriza), ஸ்பெயினில் 'பொடெமாஸ்' (Podemos) போன்ற கட்சிகள் உருவாயின. 2008இல் ஃபிரான்சில் உருவான 'இடது கட்சி' (Parte de Gauche) இல் (ஆம் பெயரே இடது கட்சி!) மெலென்ஸோன் முக்கியமான தலைவராக இருந்தார். கட்சி பல்வேறு இடது குழுக்களையும் இணைத்து 2016 ஆம் ஆண்டில் இருந்து 'ல பிரான்ஸ் இன்சோமிஸ்' (LFI- La France Insoumise - தலைவணங்கா ஃபிரான்ஸ்) என்ற பெயரில் சிறப்பாக இயங்கி வருகிறது.




மெலென்ஸோன், 2009, 2014 ஆண்டுகளில் ஐரோப்பிய பாராளுமன்றத்திற்கு தேர்ந்தெடுக்கப்பட்டு பணியாற்றினார். 2012 முதல் 4 முறை ஃபிரெஞ்சு அதிபர் தேர்தலில் எல்.எஃப்.ஐ கட்சியின் வேட்பாளராக பங்கு பெற்றார். ஒவ்வொரு தேர்தலிலும் முந்தைய தேர்தலில் பெற்ற வாக்குகளை விட அதிக வாக்குகள் பெற்றார். கட்சியின் செல்வாக்கு தொடர்ந்து அதிகரித்து வந்ததை இது காட்டியது எனலாம்.

**புதிய இடதுசாரிகளும் புதிய ஃபாசிஸ்ட்டுகளும்**

புதிய இடதுசாரிகள் இவ்வாறு வளர்ந்து வந்த போது மறுமுனையில் நவ ஃபாஸிச அதிதீவிர வலதுசாரிக் கட்சிகளும் வளர்ந்து வந்தன. ஜெர்மனியில் ஏ.எஃப்.டி, (Afd), பிரிட்டனில் யு.கே. இண்டிபெண்டண்ட் கட்சி (UKIP), இத்தாலியில் இன்று பிரதமராக இருக்கும் ஜார்ஜியோ மெலோனியின் 'இத்தாலிய சகோதரர் கட்சி' (FdI - Fratelli d' Italia) ஆகியவை போல ஃபிரான்ஸில் லா பென் அம்மையாரின் 'தேசிய அணிவகுப்பு' (Rassemblement national) வளர்ந்து வந்தது.

1922 ஆம் ஆண்டு நடந்த பிரெஞ்சு அதிபர் தேர்தலில் ஃபிரான்சின் நவ ஃபாஸிசக் கட்சி இரண்டாவது இடத்திற்கு வந்துவிட்டது. 1936 இல் ஹிட்லர் தேர்தலில் வெற்றி பெற்றுதான் முதலில் அதிபரானார். கட்சிகள், அதன் தன்மை, அதிபர் வேட்பாளர் அவர்கள் பெற்ற வாக்கு சதவீதம் ஆகியவை பின் வருமாறு இருந்தன.

| அதிபர் வேட்பாளர் | கட்சி / தன்மை | வாக்கு % |
|---|---|---|
| இமானுவெல் மெக்ரோன் | என் மார்ச்ச் - தீவிர வலதுசாரி | 28.5 |
| லா-பென் | தேசிய அணிவகுப்பு- ஃபாசிஸ்ட் | 23.7 |
| ழான்-லுக் மெலென்ஸோன் | எல்.எஃப்.ஐ - புதிய இடதுசாரி | 20.3 |
| எரிக் ஜாமூர் | ரி கான்கியூட் - அதி தீவிர வலதுசாரி | 7.0 |
| பெக்ராஸ் | குடியரசுக் கட்சி - வலதுசாரி | 4.8 |
| யானிக் ஜாதோ | யூரோப் எக்காலஜி- இடதுசாரி (பசுமைக் கட்சி) | 4.3 |
| ழான் லாசல் | எதிர்ப்பணி - மையம் | 3.0 |
| ஃபேபியன் ரூஸோ | ஃபிரெஞ்சு கம்யூனிஸ்ட் கட்சி | 2.6 |
| டூபாண்ட் ஐக்னன் | டி.எல்.எஃப் - தீவிர வலதுசாரி | 2.2 |
| ஆனி ஹிடால்கோ | சோசலிஸ்ட் கட்சி - இடதுசாரி | 2.0 |
| பிலிப் பூட்டோ | நியூ ஆண்டி கேப்பிடலிஸ்ட் - ட்ராட்ஸ்கிய இடதுசாரி | 0.77 |
| நட்டாலி ஆர்த்தோ | உழைப்பாளர் போராட்டம் - டிராட்ஸ்கிய இடதுசாரி | 0.57 |

இடதுசாரிகளின் ஒற்றுமையின்மை காரணமாக மெலென்ஸோன் மூன்றாவது இடத்தில் இருந்தார். அவருக்கும் ஃபாசிஸக் கட்சியின் லா - பென்னுக்கும் இடையே வாக்கு வித்தியாசம் வெறும் 3.4% தான். இரண்டாவது சுற்றில் தீவிர வலதுசாரியான மெக்ரோன், ஃபாசிஸ்ட்டான லா-பென் ஆகியோர் போட்டியிட்டனர். முதல் சுற்றில் மெலென்ஸோன் தோற்கக் காரணமாக இருந்த இடதுசாரிகள் ஃபாசிஸ்ட்டைத் தோற்கடிக்க வேண்டும் என்பதற்காக தீவிர வலதுசாரியான மெக்ரோன் ஆதரவு எடுக்கும் நகை முரண் நிலை வந்தது.

### புதிய மக்கள் முன்னணி

சிறிது காலம் கடந்த ஞானம் என்றாலும் இதில் பாடம் கற்ற இடதுசாரிகள், ஒருங்கிணைந்து 'புதிய மக்கள் முன்னணி' (NFP- Nouveau Front populaire) அமைத்தனர். 2024 ஆம் ஆண்டு நடந்த ஃபிரெஞ்சு பாராளுமன்றத் தேர்தலில் மொத்தமுள்ள 577 இடங்களில் 180 இடங்களில் வெற்றி பெற்றனர். பெரும்பான்மை இல்லை என்றாலும் முதலிடம் பெற்றனர். ஃபாசிஸ்ட் கட்சியின் வேட்பாளர் பிரதமராவதைத் தடுத்து நிறுத்தியுள்ளனர்.

இன்றைய ஐரோப்பாவின் முக்கியமான இடதுசாரி அணியாக மெலென்ஸோன் தலைமையிலான எல்.எஃப்.ஐ ஆகியுள்ளது; முக்கியமான இடதுசாரிக் குரலாக மெலென்ஸோன் குரல் எழுந்துள்ளது.

### அடிப்படை பிரச்சினை முதலாளித்துவமே

மெலென்ஸோன் இன்றைய உலகு குறித்த தன்னுடைய புரிதல், இன்றைக்கு ஐரோப்பிய இடதுசாரிகள் முன்னெடுக்க வேண்டிய இயக்கங்கள், உலகமெங்கும் சோசலிசத்தையும் ஜனநாயகத்தையும் சமூக நீதியையும் நேசிக்கும் மக்களும் இயக்கங்களும் கவனத்தில் கொள்ள வேண்டியவை ஆகியவை குறித்து விளக்கி எழுதியுள்ள நூலே, '21 ஆம் நூற்றாண்டில் புரட்சி' எனும் இந்த நூல்.

இந்த 21 ஆம் நூற்றாண்டிலும் உலக மக்கள் வாழ்வைச் சீரழிக்கும் அடிப்படை பிரச்சனை முதலாளித்துவம்தான். அதனைத் தாண்டாமல் இன்றைய பிரச்சனைகள் எதனையும் முழுமையாக தீர்க்க முடியாது என்பதில் இந்த புதிய இடதுசாரிகளுக்கு மாற்றுக் கருத்து இல்லை. இது மெலென்ஸோனின் நூல் முழுவதும் அடிப்படை நாதமாகவே உள்ளது. முதலாளித்துவம் குறித்து மார்க்ஸ் அளித்த அடிப்படையான விளக்கங்கள் இன்றைக்கும் பொருத்தப்பாடு உடையவைதான் என்பதிலும் மெலென்ஸோன் நூல் முழுமையான உடன்பாட்டோடுதான் இருக்கிறது.

முதலாளித்துவத்தை தூக்கி எறிந்து சோசலிசத்தை அதன் இடத்தில் அமர்த்துவதற்கு ஒரு மாத்திரை குறைவான திட்டம், நிகழ்ச்சி நிரல், நடவடிக்கை ஆகியவற்றை நாங்கள் ஏற்றுக் கொள்ள மாட்டோம்; அத்தகையோரோடு ஒட்டுமில்லை, உறவும் இல்லை என்ற வறட்டுவாதம் மெலென்ஸோனுக்கு ஏற்புடையது இல்லை. அது மாமேதை கார்ல்

மார்க்ஸிற்கும் ஏற்புடையது இல்லை என்பதை மார்க்ஸியத்தை ஆழ்ந்து கற்றவர்கள் அறிவார்கள்.

புரட்சிக்கு ஒரு மாத்திரை குறைவான எதனையும் நாங்கள் ஏற்றுக்கொள்ள மாட்டோம் என்று கூறிய பிரெஞ்சு சோசலிஸ்ட்களை புரட்சிகர வாய்ப்பந்தல் வீரர்கள் என்றார் மார்க்ஸ். ‘அவர்களும் தங்களை மார்க்சிஸ்ட்டுகள் என்று சொல்லிக் கொள்கிறார்களே’ என்று கேட்டபோதுதான் ‘யாரெல்லாம் மார்க்சிஸ்ட் என்று எனக்குத் தெரியாது ஆனால் இவர்களெல்லாம் மார்க்சிஸ்ட்டுகள் என்றால் நான் மார்க்சிஸ்ட் அல்ல’ என்றார். (எட்வர்ட் பெர்ன்ஸ்டைனுக்கு எங்கல்ஸ் எழுதிய கடிதம், நவம்பர் 1882 - Marx-Engels Collected Works - Vol. 46 - Page 356)

## மொழிபெயர்ப்பாளரின் முன்னுரை

ஐந்து அத்தியாயங்கள், ஒரு அறிமுகம், ஒரு மொழிபெயர்ப்பாளரின் முன்னுரை ஆகியவற்றோடு 397 பக்கங்கள் கொண்ட நூல். முன்னுரை எழுதிய டேவிட் பிராடர், மெலென்ஸோன் குறித்தும் அவரது கட்சியான எல்.எஃப்.ஐ (கட்சியின் பெயரை, ‘கலகத்தில் ஃபிரான்ஸ்’ என அவர் மொழிபெயர்க்கின்றார்!) குறித்தும் ஒரு நீண்ட அறிமுகம் செய்கின்றார். அந்த நீண்ட அறிமுகம், நூலில் மெலன்ஸோன் கூறும் கருத்துகளை உலகம் இதுவரை அதிகம் பொருட்படுத்தவில்லை; ஆனால் அவை கட்டாயம் ஆழ்ந்து பரிசீலிக்கப்பட வேண்டியவை என்பதை நமக்கு உணர்த்துகின்றது. இன்றைய ஐரோப்பாவின் மக்கள் செல்வாக்குள்ள முன்னணி இடதுசாரி என்பதால் அவரது கருத்துக்கள் முக்கியத்துவம் பெறுகின்றன என கருதிவிடக் கூடாது. அவரது கருத்துக்களின் உண்மைத் தன்மை, எதார்த்தம், நடைமுறை சாத்தியங்கள் ஆகியவையே அவரை முன்னணி இடதுசாரி ஆக்கியுள்ளது என்பதைப் புரிந்து கொள்ள நூலை மொழிபெயர்த்த டேவிட் பிராடர் தனது முன்னுரை மூலம் உதவுகின்றார்.

## மெலென்ஸோனின் நூலறிமுகம்

மெலென்ஸோன், வரலாறு நெடுக அந்தந்த யுகத்தின் நிகழ்வுப் போக்குகளின் அரசியல் வெளிப்பாட்டை பிரான்ஸ் வழங்கி உள்ளது என்கிறார். ஜெர்மன் தத்துவம், ஆங்கில அரசியல் பொருளாதாரம் ஆகியவற்றுடன் பிரெஞ்சு அரசியல் புரட்சி கருத்தியலும் இணைந்ததுதான் மார்க்ஸியம் என்ற புரிதல் உள்ளவர்களுக்கு இதனை ஏற்றுக் கொள்வதில் ஏதும் பிரச்சினை இருக்காது. நவீன யுகம் பிரெஞ்சுப் புரட்சியில் தொடங்கியது என்றார் ஜெர்மன் மகாகவி கோத்தே. 1871 ஆம் ஆண்டு பாரிஸ் கம்யூனில்தான் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் என்ற கருத்தியலின் நடைமுறை சட்டகம் தெரியவந்தது என்ற மார்க்ஸின் கருத்து ஆகியவற்றை விதந்தோதும் மெலென்ஸோன், இன்றைய புதிய யுகத்திற்குரிய அரசியல் சட்டத்தை நாம்தான் கண்டறிய வேண்டும் என்கிறார். மார்க்ஸியம் என்பது மாமேதை மார்க்ஸ் அருளிச் சென்றதல்ல; அது அவர் தொடங்கி வைத்த சமூக அறிவியல்; நமது மண்ணிற்கும் நமது காலத்திற்கும் உரிய புத்தாக்கத்தை, நடைமுறையை நாம்தான் உருவாக்க வேண்டும் என்ற அறிவியல் சோசலிஸ அணுகுமுறையே மெலென்ஸோனின் அணுகுமுறை என்பதை நாம் புரிந்து கொள்ள முடிகின்றது. அத்தகைய புத்தாக்கத்தை கோரும் இன்றைய கள நிலவரம், உலக நிலவரம் என்ன என்பதை ‘புதிய யுகத்தின் ஒளியும் உக்கிரமும்’ என்ற இந்த அறிமுகத்தில் விளக்குகின்றார்.

## முதலாளித்துவத்தின் கால–வெளி ஆதிக்கம்

காலமும் வெளியும் இந்தப் பேரண்டத்தின் நாடகம் நடக்கும் அரங்கு அல்ல; அவை இந்த பேரண்ட நாடகத்தின் கதாபாத்திரங்கள்தான் என்பதை ஐன்ஸ்டினிய இயற்பியல் எடுத்துரைத்தது. காலமும் வெளியும் முதலாளித்துவம் இயங்கும் காலப்பரப்பு அல்ல; அவை முதலாளித்துவத்தின் இரும்புப் பிடிக்குள் இருந்து நம்மை முதலாளித்துவ கட்டுப்பாட்டில் இருக்கும் அவற்றோடு ஒத்தியங்க வைத்துள்ளது என அவர் விளக்குவது புத்தாக்கம்; ஆனால் நவீன முதலாளித்துவத்தில் இயங்கும் எவரும் புரிந்து கொள்ளக் கூடியது. 21ஆம் நூற்றாண்டின் புதிய நிலைகளை புரிந்து கொள்வதற்கும் அதற்கேற்ற நடைமுறையை வகுப்பதற்குமான கோட்பாட்டு முயற்சியே இந்த நூல் என மெலென்ஸோன் கூறுகின்றார். நமது பணி மாற்றத்தை கொண்டு வருவதுதான்; ஆனால் அதற்கு சூழலை புரிந்து கொள்வது முன் நிபந்தனை என்பது, ‘நடைமுறை இல்லாத கோட்பாடு மலட்டுத்தனமானது; கோட்பாடு இல்லாத நடைமுறை குருட்டுத்தனமானது’ என்ற லெனின் சொற்றொடரையே நினைவுபடுத்துகின்றது.

“ சென்ற நூற்றாண்டில் ஒரு இளைஞனாக எனது அரசியல் செயல்பாட்டின் போது மார்க்ஸியம் எல்லா கதவுகளுக்கும் திறவுகோலாக இருந்தது. மிகவும் குழப்பமான யதார்த்தத்தையும் வகை விரிக்கவும் ஒழுங்குபடுத்தவும் விளக்கவும் தேவைப்படும் பகுப்பாய்வு நுண்ணோக்கியாக மார்க்ஸியம் விளங்கியது. எதார்த்தத்தின் சலித்தெடுக்கும் தேர்வில் தேறிநின்ற அதன் பகுதிகளே (நிச்சயம் அதன் பெரும்பகுதி) என்னுடைய புதிய கோட்பாட்டுச் சட்ட உருவாக்கத்திற்கான

அடிப்படை.” என்ற விளக்கத்தோடுதான் தனது கருத்தை எடுத்து வைக்கின்றார் மெலென்ஸோன்.

## நிலைப்புறுத் தன்மை இன்மை

நாம் வாழும் இப்பூவுலகு நமது சமகாலத்தில் 'நிலைப்புறுத் தன்மையை' முன்பு எப்போதும் இல்லாத அளவிற்கு இழந்துள்ளது என்று கூறும் மெலென்ஸோன் அதற்கான கூறுகளை விளக்குகின்றார்.

‘எண்களின் அழுத்தம்’ அல்லது ‘அளவுகளின் விசை’ என்ற தலைப்பில் மக்கள் தொகை முதற்கொண்டு மாற்றங்களின் வேகம், அளவு மாற்றங்கள் பண்பு மாற்றங்களாக ஆகி உள்ள தன்மை, பெரு நகரங்களின் பெருக்கம் ஒவ்வொரு மானுடரும் தனித்துப் போய் ஒரு அதீத தனிநபராய் ஆகிப்போன நிலை, டிஜிட்டல் உலகின் அதீத சமூகமயம், அதீத இணைப்பு, ஒரே கணத்தில் பல இடங்களிலும் இருக்கும் நிலை எல்லாம் இணைந்து இந்த 'எண்களின் அழுத்தம்' உருவாகியுள்ளது என விளக்குகின்றார். நவீன தொழில்நுட்பத்தில் கணினி, மென்பொருள், செயற்கை நுண்ணறிவுத் துறையில் பணிபுரிபவர்கள் எளிதில் உணரக்கூடிய ஆனால் விளக்குவதற்கு சிரமப்படுவதை அவர் விளக்கியுள்ளார்.

இந்தப் புதிய உற்பத்தி, சேவைத் துறை, அதன் உலகளாவிய செயல் பரப்பு, அதன் 24/7 இயங்கு நேரம் ஆகியவை சென்ற நூற்றாண்டின் இறுதி வரையிலும் கூட நமது மனக்கண்ணின் முன் இருந்த காலவெளித் துகிலை இந்த 21ஆம் நூற்றாண்டின் உலகமய முதலாளித்துவம் முழுமையாக குலைத்துப் போட்டு இருப்பதை விளக்குகின்றார். முன் எப்போதும் இல்லாத வகையில் நமது வாழ்வின் காலவெளி நாட்பரிமாணம் முதலாளித்துவத்தின் ஆதிக்கத்தின் கீழ் சென்று விட்டதை அவர் விளக்கும் போதுதான் அதன் விபரீதமும் 21 ஆம் நூற்றாண்டில் நமது கட்டுண்ட சுதந்திரமற்ற நிலையும் நமக்கு உறைக்கின்றது.

## முதலாளித்துவத்தின் மனவெளி ஆதிக்கம்

இந்தப் புதிய சூழல் உருவாக்கியுள்ள நமது சம காலத்திற்கே உரிய நிச்சயம் இன்மை, புதிய உலகளாவிய மனவெளி ஆகியவை விளக்கத்தின் உச்சம். மானுட சமூகத்தில் மனவெளி என்பது புதிதாக உருவாகும் பண்பு (Emerging Property). இன்றைய 21 ஆம் நூற்றாண்டில் நிலவும் மானுட கலாச்சாரம் மனவெளியில் என்றும் இல்லாத அளவுகளில் தாக்கம் கொண்டுள்ளது. மனவெளியின் உருவாக்கம் மேலாதிக்கம் செலுத்தும் கலாச்சாரத்தால் பெரிதும் உருவாக்கப்படுகின்றது. முதலாளித்துவ சமூகத்தில் அதன் கலாச்சாரமே மேலாதிக்கம் செலுத்தும் கலாச்சாரம். ஆனால் இந்தக் கலாச்சாரம் முழுக்க முழுக்க உற்பத்தி முறைபாட்டால் மட்டும் கட்டியமைக்கப்படுவதில்லை. சிறிது நெகிழ்ச்சித் தன்மை உள்ள உறவே உள்ளது என விளக்குகின்றார். இந்த 21 ஆம் நூற்றாண்டின் ஞானப்பரப்பு இந்த மனவெளியைக் கட்டியமைப்பதில் ஒரு முக்கியமான பங்கு ஆற்றுகின்றது. நவீன காலத்தில் இந்த ஞானப்பரப்பிற்கு ஜனநாயக ரீதியாக இருக்கும் அணுகல் சாத்தியம் சில திறப்புகளை சாத்தியமாக்குகின்றது என்கிறார். இந்த திறப்பிற்கு எதிராக ஞானப்பரப்பின் ஏகபோகத்திற்கு முதலாளித்துவம் தொடர்ந்து முயற்சிக்கின்றது. கூகுள், ஃபேஸ்புக், அமேஸான், மைக்ரோசாஃப்ட், ஆப்பிள் ஆகியவை இதன் வெளிப்பாடுதான். இதனைக் கூறும் மெலென்ஸோன் மெய்நிகர் பரப்பில் மானுடத்தின் மொத்த ஞானத்தையும் இந்த நவமுதலாளித்துவ நிறுவனங்கள் தம் தனியுடைமையாக்கிக் கொள்ள முயல்வதை விளக்குகின்றார்.

இதனை விளக்கும் மெலென்ஸோன், நமது விருப்பத் தேர்வு சாத்தியமற்ற அடிமைத் தனத்தில் உழலும் நாம் மானுடம் உள்ளிட்ட உயிரினங்களின் இருப்புரிமையை எவ்வாறு நிலை நாட்டுவது என்ற அடுத்த கட்ட ஆய்வில் நுழைகின்றார்.

## முதலாளித்துவ நிச்சயமின்மை

உலகமும் அதில் மானுட வாழ்வும் எப்போதும் நிச்சயமின்மையை சந்தித்து வந்திருக்கிறது என்றாலும் கூட இந்த 21 ஆம் நூற்றாண்டில், இந்த உலகம் மானுட சமூகம் காணும் நிச்சயமின்மை அதன் முந்தைய காலகட்டங்களின் நிச்சயமின்மையிலிருந்து வேறுபாடு கொண்டது என்பது அவரது கூற்று. இந்த 21 ஆம் நூற்றாண்டிற்கு உரிய அந்த நிச்சயம் இன்மையின் கூறுகள் என்ன என்பதனை பல உதாரணங்களோடு அவர் விளக்குகின்றார். இந்த நிச்சயமின்மை 21 ஆம் நூற்றாண்டில் மானுட சமூகம் அடைந்திருக்கின்ற இன்றைய மனவெளியில் என்றும் இல்லாத அளவுகளில் தாக்கம் கொண்டிருக்கிறது என்பதனையும் பல்வேறு தரவுகளோடு அவர் விளக்குகின்றார்.

இன்றைய உலகில் முதலாளித்துவத்தின் கீழ் தொழிலாளர்கள் சுதந்திரத் தொழிலாளர்களாக இருப்பார்கள் என்பது உண்மைதான் என்றாலும் கூட நம்முடைய விருப்பத் தேர்வுக்கு சாத்தியமற்ற ஒரு அடிமைத்தனத்தின் கீழ் நாம் இருப்பது எப்படி என்பதை அவர் விவரிக்கின்றார்.

### சூழல் சமநிலையின்மை

முதலாளித்துவம் உள்ளார்ந்த வகையில் சூழல் சமநிலைக்கு எதிரானது. அதிலும் இன்றைய நவ தாராளவாதம் இதனை எதேச்சதிகார முறையில் கொண்டு செலுத்துகிறது. சூழல்பேரழிவு மற்றும் சமூகப் பேரழிவு ஏற்படுத்தும் நடவடிக்கைகளை எதிர்த்து நிற்கும் போது, தன்னுடைய லாப நோக்கத்திற்காக அதனைச் சார்ந்து இருக்கும் நவ தாராளவாதம், எதிர்ப்புகளின் மீது கடுமையான தாக்குதல்களை நடத்துகின்றது. இரண்டு தாக்கங்கள் ஒன்றிலிருந்து ஒன்று பிரிக்க முடியாதவை. சூழல் பேரிடரும் சமூகப் பேரிடரும் ஒன்றோடொன்று கைகோர்த்து நடக்கின்றது. முதலாளித்துவம் தான் இயங்குவதற்கு அடிப்படையான இயற்கை மற்றும் மானுடம் ஆகிய இரண்டையும் பெரும் சேதாரத்துக்கு உள்ளாக்குகிறது என்ற மார்க்ஸின் கூற்றுக்கு நெருக்கமானதாகவே மெலென்ஸோனும் கூறுகின்றார். முதலாளித்துவம் பொருளாதார ரீதியாக மட்டுமல்ல அது சமூக ரீதியாகவும் சூழல் ரீதியாகவும் நிலைப்புரு வகையில் இயங்கும் வல்லமையற்றது என்பது தெளிவாகி வருகிறது. ஆனால் இந்தக் கருத்தும் தெளிவும் பரவலாக மக்களை சென்று சேர்ந்து விடாமல் இருக்க முதலாளித்துவம் சகல சாம, பேத, தான தண்டங்களையும் பிரயோகம் செய்கின்றது என்பதனை அவர் விளக்குவதை நாம் எளிதில் ஏற்றுக்கொள்ள முடிகிறது.

இப்படி 21 ஆம் நூற்றாண்டின் புதிதாக சேர்ந்துள்ள பிரச்சனைகள், சிக்கல்கள் ஆகியவற்றை எவ்வாறு எதிர்கொள்வது என்பதைப் பற்றிய ஆய்வுக்கு ஒரு முன்னோட்டமாக இந்த சமூக முரண்பாடுகளின் புதிய அடிப்படைகளும் அவற்றைக் கொண்டு செல்லும் சக்திகளும் எவை என்பதை விளக்கும் முகமாக அவரது நூலின் இரண்டாம் பகுதி அமைகின்றது.

இந்த இரண்டாவது பகுதியின் கீழ் மாநகரம் அது உருவாகும் காரணம், அது பெருகும் போக்கு, மாநகரங்களின் உருவாக்கம் மற்றும் நகர்மயம் ஆகியவற்றுக்கும் முதலாளித்துவ உற்பத்தி முறைபாட்டிற்கும் இருக்கும் பிரிக்க இயலாத உறவு குறித்து அவர் விளக்குகின்றார் இவ்வாறு உருவாகும் இந்தப் புதிய நகர்மயம் என்பது அடிப்படையில் சமத்துவம் இல்லாததாகவும் நகருக்குள்ளேயே பல ஒதுக்கப்பட்ட பகுதிகள் இருப்பதாகவும் வளர்ந்து வருவதை அவர் விளக்குகின்றார். இது நாம் எளிதில் நம்முடைய அனுபவத்தின் மூலம் கண்டறிந்து கொள்ளக் கூடியதாக இருக்கின்றது.

### பிணையங்கள் (Networks)

இந்தப் புதிய எதார்த்தத்தில் நம்முடைய வாழ்க்கை என்பது பல்வேறு பிணையங்களினுடைய இணைப்பு முனையத்தில் நடப்பதாகத்தான் இருக்கிறது என்பதனை விளக்கும் அவர், இந்தப் பிணையங்கள் என்பவை நம்முடைய எதிர்ப்புக்கும் போராட்டத்திற்குமான பிணைப்புகளாகவும் மாற்றப்படுவது என்பதுதான் இதற்கு எதிரான போராட்டமாகவும், சூழல் மற்றும் சமூக நிலைமைகள் சீர்கெடுவதை தடுப்பதற்கான வழியாகவும் இருக்க முடியும் என்பதனை விளக்குகின்றார். இந்தப் புதிய நிலைமையில் உழைக்கும் மக்கள் தங்களுடைய பழைய பிணையங்களான தொழிற்சங்கங்கள் என்பதனை தாண்டியும் பல்வேறு வகையான புதிய வகை பிணையங்களை தமக்குள் ஏற்படுத்திக் கொள்ள வேண்டிய அவசியம் இருப்பதை அவர் எடுத்துரைக்கின்றார்.

இத்தகைய மோசமான சூழலில் இதிலிருந்து விடுபடுவது என்பதற்கு நாம் மக்களாக ஒன்றிணைவதுதான் வழி என்பதனையும் அவர் எடுத்துரைக்கின்றார். பல்வேறு பிணையங்களாக உருத்திரண்டு இருக்கும் குடிமக்கள் பகுதியினர் அந்தப் பிணையங்களின் மூலமாகவே இணைவது என்பதுதான் இன்றைய பெருநகர நகர்மய நிலைமைகளில் முதலாளித்துவத்தினுடைய இந்த ஆதிக்கத்திற்கும் அது நிகழ்ச்சி நேரலை தீர்மானிப்பதற்கும் எதிராக நடத்த வேண்டிய புரட்சிக்கு அவசியம் என்பதை அவர் விளக்குகின்றார். அவர் கூறும் இந்த புதியப் பிணையங்கள் எனப்படும் நெட்வொர்க்குகள் என்பதில் மரபார்ந்த தொழிற்சங்கங்கள் என்பவற்றுக்கு இடமில்லாமல் இல்லை. ஆனால் அது மட்டும் போதாது என்றும் அதனைத் தாண்டியும் பல்வேறு வகைகளில் மொத்த பிரச்சனைகளின் கீழ் அடக்கப்படும் மக்கள் என்ற வகையில் ஒருங்கிணைவது என்பதும்தான் சரியான எதிர்ப்பு நிலையை எடுப்பதற்கு வழி வகுக்கும் என்பதனை அவர் எடுத்துரைக்கின்றார். முழுமையாக முதலாளித்துவப் பொருள் உற்பத்தி சமூகமாக மாறிவிட்ட ஒரு நாட்டில் எப்படி எந்தப் பிணையத்தின் மூலம் இணைந்தாலும் அவ்வாறு இணைபவர்களில் பெரும்பகுதியினர் அல்லது ஆகப் பெரும்பகுதியினர் பாட்டாளி வர்க்கத்தை சார்ந்தவர்களாகத்தான் இருப்பார்கள் என்பதினால் இது பாட்டாளி வர்க்கம் என்ற வகையில் இணைவது என்பதற்கு மாறானது அல்ல, அதன் வேறு வடிவம்தான் என்பதனை நாம் புரிந்து கொள்ள முடிகின்றது.

இத்தகைய புதிய பிணையங்கள் மூலம் ஒன்றிணையும் மானுட ஒன்றிணைப்புகள் -ஆங்கிலத்தில் அவர் நெட் வொர்க்குகள் என்ற பதத்தை பயன்படுத்துகின்றார் - அடிப்படையான மாற்றத்திற்கு ஒரு புரட்சிக்கு வழி கூற வேண்டும், வழி கோல முடியும் என்பது அவரது நம்பிக்கையாக இருக்கின்றது. மரபார்ந்த புரட்சி என்பது வழக்கொழிந்து போய்விடவில்லை; ஆனால் அது ஏன் புதிய உடைகளோடு நடக்கிறது என்பதை இந்த 21ம் நூற்றாண்டிற்கானதாக அவர் விளக்குகின்றார்.

## புரட்சியின் கட்டங்கள்

இத்தகைய புரட்சி பல்வேறு கட்டங்களாக நடக்க வேண்டிய அவசியம் இருப்பதாகக் கூறும் அவர், அவை அலைமறிப்பு கட்டம், கட்டமைப்பு கட்டம், கட்டறுப்பு கட்டம் என பல கட்டங்களை தாண்டிச் செல்ல வேண்டியதையும் இயங்க வேண்டியதையும் எடுத்துரைக்கின்றார். முதலாளித்துவம் பல பிணையங்களின் வடிவில் தன்னுடைய ஆதிக்கத்தை நிலைநாட்ட முயற்சித்துக் கொண்டிருக்கும் பொழுது தன்னுடைய அடக்குமுறைகளை ஒடுக்குமுறைகளை பல்வேறு பிணையங்கள் மூலம் அதனைக் கொண்டு செலுத்துவதற்கு முயற்சி செய்யும்பொழுது அதற்கு எதிரான நடவடிக்கைகளும் அதுபோன்று பல்வேறு வகையான மக்கள் இணையங்களின் மூலம் நடக்க வேண்டும் என்பதையும் அவர் எடுத்துரைக்கின்றார்.

இந்த 21 ஆம் நூற்றாண்டு முதலாளித்துவம் உலகமயமான நிலையில் அகில உலகம் தழுவிய ஒரு சக்தியாக இயங்கிக் கொண்டிருக்கும் போது மானுடமும் அதுபோல ஒற்றை இனமாகும் போக்கில் நடை போட்டு இந்த முதலாளித்துவத்தினுடைய முயற்சிகளுக்கும் அதனுடைய அடக்குமுறைகளுக்கும் எதிராக நிற்பது என்பதுதான் ஒரு புதிய உலகைக் காண்பதற்கு சாத்தியம் என்பதனை அவர் விளக்குகின்றார்.

## நமக்கான பொருத்தப்பாடு

அவர் வெறுமனே கோட்பாடுகளை மட்டும் கூறியவர் என்ற வகையில் நாம் அவரைப் பார்க்க முடியவில்லை. அவருடைய கோட்பாடுகளின் அடிப்படையிலான நடைமுறைகள் என்பவை பெரும் வெற்றியைப் பெற்று இருக்கின்றன என்ற காரணத்தால் அவருடைய கோட்பாடுகள் நுணுகிக் கற்க வேண்டியவையாக இருக்கின்றன.

அவர் இருக்கும் மிக முன்னேறிய ஐரோப்பிய சூழலில் அவர் எடுக்கும் நடவடிக்கைகள் அவர்களது பிணைய உருவாக்கங்கள் அவை அனைத்தும் நமக்கு இந்தியாவில் முழுமையாக அப்படியே 'போலச் செய்வது' என்பதற்கு ஒத்துவராமல் இருக்கலாம். ஆனால் வெற்றிகரமாக சோசலிசம் நோக்கிய பயணத்தில் சில அடிகள் முன்னே நடந்து சென்றுள்ள ஒருவரது கோட்பாட்டு ரீதியான விளக்கம் என்ற வகையில் அவை மிகவும் கவனத்தோடு பரிசீலிக்க வேண்டியவை என்பதில் மாற்றுக் கருத்து இருக்க முடியாது. ஃபாசிச அபாயம் உலக யதார்த்தம் என்பது தெளிவாக இருக்கிறது. அந்த நிலையில் ஃபாசிசத்துக்கு எதிராக வெற்றிகரமாகப் போராடி பாசிசத்தை தடுத்து நிறுத்திய ஓர் அமைப்பின் தலைவர் என்ற வகையில் அவருடைய கருத்துக்கள் அவர்களுடைய போராட்டங்கள் பற்றிய அவரது கோட்பாட்டாக்கம் என்பது மிகுந்த முக்கியத்துவம் அடைகின்றது.

நூறாண்டு வயது கொண்ட இடதுசாரி இயக்கம் இன்று தேக்கமடைந்து நிற்கும் இந்தியா போன்ற நாடுகளில் புதிய சிந்தனைக்கும் புதிய வழிமுறைகளுக்கும் பழைய வழிமுறைகள் மற்றும் நெறிமுறைகளில் இருக்கும் போதாமை குறித்த புரிதலுக்கும் இதுபோன்று வெற்றிகரமாக செயல்பட்டுக் கொண்டிருக்கும் ஏனைய நாடுகளின் அனுபவம் என்பது ஒரு முக்கியமான பாடம் என்ற வகையில் ஒரு முக்கியமான பாடநூல் என்று இதனைக் கூற முடியும்.

வழக்கமாக அரசியல் நூல்கள் பேசும் தேய்வழக்கு மொழியில் பேசவில்லை; புதிய சொற்கள், புதிய வெளிச்சம் என்ற வகையில் அதனை உள்வாங்குவதில் பிரச்சனை இருக்கலாம்; ஆனால் அதற்காக செய்யும் முயற்சி மிகப் பயனுள்ளதாக இருக்கும் என்பதில் சந்தேகம் இல்லை. 'வழுக்கக்கூடிய செங்குத்துப் பாறையில் மனம் தளராது ஏறக் கூடியவர்களே, அதன் ஒளிமிகு சிகரங்களை அடைய முடியும்' என்று மார்க்ஸ் தன்னுடைய புகழ்பெற்ற நூலான மூலதனம் நூலின் முகவுரையில் அதைக் கற்றறிவதற்கு முயற்சி செய்பவர்களிடம் உரைப்பார். புதிய நிலைமைகளை எவ்வாறு எதிர்கொள்வது, அதற்கான புதிய வழிமுறைகள் என்ன என்பதனை அறிய முயற்சி செய்பவர்களும் அதனைத் தங்கள் மனதில் நிறுத்துவது அவசியம்.

படித்துப் பாருங்கள்.

●

**கட்டுரையாளர்: NCBH பதிப்பாசிரியர், எழுத்தாளர், செயல்பாட்டாளர்.**



# நூற்றாண்டு காணும் பேராசிரியர் கா. மீனாட்சிசுந்தரம்

தமிழ் நாட்டின் கல்விப் புலத்தில் தமிழ் இலக்கியக் கல்வியைப் புதிய திசைகளில் எடுத்துச் சென்ற காலம் சென்ற நூற்றாண்டின் மையப் பகுதி என்று கருதலாம். காப்பிய ஆராய்ச்சி, ஒப்பிலக்கியம், இலக்கியத் திறனாய்வு, தமிழ் நாட்டு வரலாறு, மொழியியல் என்று ஒரு திசை திருப்பம் தோன்றிய கால கட்டம் அது.

மகாரதர்கள் என்று அழைக்கத் தகுந்த மு. வரதராசனார், அ.சிதம்பரநாதனார், தெ.பொ. மீனாட்சிசுந்தரனார், ஔவை துரைசாமி பிள்ளை, மா. இராசமாணிக்கனார், அ.ச. ஞானசம்பந்தம் முதலிய பேராசிரியப் பெருமக்கள் இலக்கியக் கல்வியில் மாற்றத்தையும் மறுமலர்ச்சியையும் உருவாக்கிய காலப்பகுதி என்று அதனை மதிப்பிடலாம். தொட்டடுத்த தலைமுறையில் முன்னையோரின் ஆழத்தையும் வளர்ந்து வரும் இலக்கியப் பார்வைகளின் அகலத்தையும் உள்வாங்கி உயர்ந்த பேராசிரியப் பெருந்தகை கா. மீனாட்சிசுந்தரம்.

ஆசிரியப் பணி, நிர்வாகத் திறன், ஆய்வுக் கூர்மை, தளராத கல்வித் தொண்டு எனத் தாம் பணியாற்றிய துறைதோறும் உன்னதங்களைத் தொட்டவர் கா.மீ. என அன்புடன் அழைக்கப் பெற்ற கா. மீனாட்சிசுந்தரம். 1925 ஆம் ஆண்டு ஜுலை 11 ஆம் நாள் பிறந்த கா.மீ. அவர்களுக்கு இது நூற்றாண்டு கொண்டாடும் காலம். அவருடைய வாழ்வையும் பணியையும் எண்ணிப் பார்க்கும் அரிய தருணமும் கூட.



**சிற்பி பாலசுப்பிரமணியம்**

## பிறப்பும் கல்வியும்

கோயம்புத்தூருக்கு அருகில் உள்ள வெள்ளக்கிணறு என்ற சிற்றூரில் இரா. காளியப்பகவுண்டர், திருமதி காளியம்மாள் இணையருக்கு மூன்றாவது பிள்ளையாகப் பிறந்தவர் கா.மீ. தந்தையார் நடுத்தர வயதில கௌமார மடம் இராமானந்த சுவாமிகளிடம் துறவுக்குரிய உபதேசம் பெற்று, அவரால் முருகானந்த சுவாமிகள் என்ற துறவுப் பெயர் சூட்டப்பட்டுக் குடும்பத்தை விட்டு விலகித் தனியே குடிலும் கோயிலும் கட்டி வாழத் தொடங்கினார். இந்நிலையில் பிள்ளைகளை வளர்த்துக் குடும்பத்தைக் கட்டிக் காப்பது அன்னை காளியம்மாளின் பொறுப்பாயிற்று. அப்பொறுப்பைச் சிறப்புறச் செய்து வந்தார் கா.மீ அவர்களின் தாய்.

சொந்த கிராமத்துப் பள்ளியிலும் கோவை நகர் யூனியன் பள்ளியிலும் பள்ளிக் கல்வியை முடித்து, அரசு கலைக் கல்லூரியில் இடைநிலை வகுப்பிலும் பின்னர் இளங்கலை கணித வகுப்பிலும் கற்றார். கணிதம் அவருக்கு மிகுந்த விருப்பமுள்ள பாடமாக அமைந்தது. என்றாலும் பொறியியல் கல்வி பெற உரிய வழிகாட்டுதல் இல்லாது போயிற்று. அவருக்குத் தமிழ்ப் பேராசிரியராக இருந்த கோவிந்தராசனார் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் முதுகலை தமிழ் கற்க வழி காட்டினார். பேராசிரியர் அ. சிதம்பரநாதனாரின் மாணவராக இரண்டாண்டுகள் பயின்று 1950 இல் முதுகலைப் பட்டம் பெற்றார்.

## எதிர்பாராத ஆசிரியப் பணி

ஆசிரியராகப் பணியாற்றும் எதிர்பார்ப்பு ஏதுமின்றித் தம் வேளாண் பணிகளுக்கு மீண்டிருந்த கா.மீ. தாம் பயின்ற அண்ணாமலைப் பல்கலைக்கழகத்திலேயே பணியேற்கும் வாய்ப்பு எதிர்பாராமல் நேர்ந்தது. அவருடைய ஆசிரியர் தொல்காப்பியம் சேனாவரையத்தில் வல்லவராய் விளங்கிய பூவராகம் பிள்ளை மருத்துவ விடுப்பு எடுக்க முடியாமல் தவித்து மாற்று ஏற்படாகக் கா.மீ. அவர்களைப் பணியேற்கும்படி கேட்டுக் கொண்டார். ஆசிரியருக்கு உதவச் சென்ற கா.மீ. இரண்டு ஆசிரியர்கள் ஓய்வு பெற்றதால் நிரந்தரப் பணியேற்கும்படியாயிற்று.

அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் 1950 முதல் 1957 வரை ஆசிரியப் பணியாற்றினார். இடைநிலை வகுப்பு (Intermediate) முதல் முதுகலை வகுப்பு வரை பலநிலை மாணவர்களுக்குப் பாடம் நடத்த வேண்டியிருந்தது. கடமை உணர்வும், உழைப்பும், புலமைத் தேர்ச்சியும் இவரைப் புகழார்ந்த ஆசிரியராக உருவாக்கின. சிறந்த இலக்கிய உரையாளராகவும் விளங்கிய காரணத்தால் பாவேந்தர் பாரதிதாசனே தாம் நடத்திய ஒரு பாரதி விழாவுக்கு நேரில் இவரை அழைத்துச் சென்றது குறிப்பிடத்தக்க நிகழ்வாகும்.

இளம் பேராசிரியராக இருந்த போதும் ஆய்வு மனம் கொண்டவராதலால் எம்.லிட். பட்டத்துக்கு ஆய்வு செய்ய விரும்பினார். அக்காலத்தில் ஆய்வுப் பட்டங்கள் மிகமிக அரிதாக இருந்தன. இவருடைய தீராத் தாகம் கண்ட துறைத் தலைவர் சிதம்பரநாதனார் ஆய்வு நெறியாளராக இசைந்தார். பாரதியார் கவிதைகளை ஆய்வுப் பொருளாக எடுத்துக் கொண்டு ஆய்வை நிறைவு செய்த கா.மீ. அவர்களுக்கு 1957 ஆம் ஆண்டு எம். லிட். பட்டத்தை வழங்கியது அண்ணாமலைப் பல்கலைக்கழகம்.

கல்விப் புலத்தில் முதன் முதலாகப் பாரதியார் கவிதைகளை ஆய்வு செய்தவர் பேராசிரியர் கா.மீ.

## ஆசிரிய பணிக்களம் விரிகிறது

1957 இல் தமிழ்நாடு அரசு கல்லூரிப் பணிக்குத் தேர்வு செய்யப்பட்டதால் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்திலிருந்து விடைபெற்றார். 1957 முதல் 1965 வரை மாநிலக் கல்லூரியில் ஆசிரியராகவும், துறைத் தலைவராகவும் பணிபுரிந்தார். வயதில் இளையவரான இவர் தொல்காப்பியம் நடத்த வல்லவரா என்று துறைத் தலைவராக இருந்த தெ.பொ.மீ. இவர் வகுப்பிலேயே அமர்ந்து சோதனை செய்யவும் முற்பட்டார். சேனாவரையத்தைச் சிக்கலின்றி நடத்திய இவர் திறம் கண்டு மகிழ்ந்த தெ.பொ.மீ,

> **"நீங்கள் கருத்துக்களைத் தொகுத்தும் பகுத்தும் ஒன்று இரண்டு மூன்று என்று நிரல்படச் சொல்லிக் கரும்பலகையையும் பயன்படுத்துகிறீர்கள். அதனால் கேட்போர் மனதில் கருத்துக்கள் ஆழப் பதியும்."**

என்று பாராட்டினார். வசிஷ்டர் வாயால் பிரம்ம ரிஷி பட்டம் பெற்றவரானார் கா.மீ.

மாநிலக் கல்லூரியில் ஆசிரியராக இருந்த காலத்தில் தான் முனைவர் பட்ட ஆய்வைச் செய்து முடித்தார். அன்று ஆய்வாளர்களுக்கு எண்ணற்ற கட்டுப்பாடுகள் சட்ட திட்டங்களாக இருந்தன. அண்ணாமலைப் பல்கலைக்கழக மாணவர் சென்னைப் பல்கலைக்கழகத்தில் ஆய்வு செய்ய முடியாது என்பது விதி. அந்த விதியைத் தம் மதியால் கடந்தார் நம் பேராசிரியர். திருக்குறள் இருக்கைக்கு ஒரு பேராசிரியரைத் தேர்வு செய்யத் துணைவேந்தர் லட்சுமணசாமி முதலியார் தலைமையில் அறிஞர் குழு அமைக்கப்பட்டது. அறிஞர்களில் ஒருவராகக்

கா.மீ.யும் சென்றிருந்தார். பல அறிஞர்கள் தொடுத்த வினாக்களை ஆர்வமின்றிக் கேட்ட துணைவேந்தர், கா.மீ. கேட்ட கேள்வியால் உற்சாகமடைந்தார். 'சென்னைப் பல்கலைக்கழகம் திருக்குறளுக்குச் செய்த சிறப்பு என்ன?' என்பது கா.மீ. கேட்ட கேள்வி. யாருக்கும் விடை தெரியாத சூழலில், எல்லிஸ் உரையை பல்கலைக்கழகம் வெளியிட்டுள்ளது என்று கா.மீ. தெரிவித்தார். இச்செய்தி துணை வேந்தரைக் கவர்ந்ததால் பேராசிரியரிடம் மதிப்பும் அன்பும் கொண்ட அவர் கா.மீ. அவர்கள் முனைவர் பட்ட ஆய்வு செய்ய இசைவு தந்த அதிசயம் நிகழ்ந்தது.

பேராசிரியர் ரா.பி. சேதுப்பிள்ளை நெறியாளராக அமைய 'The Contribution of European Scholars to Tamil' என்ற தலைப்பில் ஆய்வு தொடங்கியது. பிள்ளையவர்கள் எதிர்பாராமல் மறைந்ததால் மா. இராசமாணிக்கனார் நெறியாளர் ஆனார். 1968 இல் முனைவர் பட்டம் கா.மீக்கு வழங்கப்பட்டது.

**பேராசிரியராக, முதல்வராக...**

மாநிலக் கல்லூரியைத் தொடர்ந்து கோவை, சேலம், திருப்பூர், தஞ்சை எனப் பல கல்லூரிகளில் தமிழ்த் துறைத் தலைவராகவும் சேலம் முதல் முதல்வராகவும் ஆசிரியப் பணி தொடர்ந்தது.

இடையே யுனெஸ்கோ உதவியுடன் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் தொடங்கப்பட்ட போது 1971 முதல் 1974 வரை முதல் ஆட்சி அலுவலராகவும் துணை இயக்குநராகவும் இருந்து அந்நிறுவனத்தை வளர்த்தார்.

1981 இல் கல்லூரிக் கல்வி இணை இயக்குநர் பொறுப்பேற்று, 1982 இல் இயக்குநராக விளங்கி 1983 இல் பணி ஓய்வு பெற்றார் கா.மீ.

**மாணவர்கள் வியந்த ஆசிரியர்**

இலக்கணப் பாடம் நடத்துவதில் வல்லவராக விளங்கியவர் கா.மீ. அவருடைய அருமை மாணாக்கர்களில் ஒருவராகத் திகழ்ந்த மொழியியல் அறிஞர் அகத்தியலிங்கம் கூறுகிறார்:

"தெளிவுடனும் திட்டத்துடனும் இலக்கண உண்மைகளைத் தெளிவாக்குவதில் சிறந்து விளங்கியவர் அவர். இலக்கணம் என்றாலே நெஞ்சை நெருடும் ஒரு நிலை. ஆனால் பேராசிரியர் கா.மீ.யின் விளக்கத்தில் இலக்கணமும் இலக்கியம் போல் இனிக்கும் ஒரு பாடமாக அமைந்திருக்கும். அதுதான் என்னையும் ஓர் இலக்கண ஆய்வாளனாக உயர்த்தியது என்று சொன்னால் மிகையாகாது."

அவருடைய மாணவராக அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் ஐந்தாண்டுகள் பயின்ற தத்துவ வித்தகரான சோ.நா. கந்தசாமி ரத்தினச் சுருக்கமாகச் சொல்லும் கருத்து ஆசிரியப் பணியில் சாதிக்க விழைவோருக்கு மந்திரமாக அமைவது.

> **"சினம் கொள்ளாச் சீரியர். மாணவர்களை நெறிப்படுத்தும் நேரியர். அவர் பேச்சு திரு.வி.க.வின் தமிழ் நலம் கெழுமியது. மு.வ.வின் இயல்புகள் பல அவரிடம் உண்டு."**

உலகறிந்த மொழியியல் அறிஞர்களில் ஒருவரும் தொல்காப்பியத்தை மொழியியல் நோக்கில் ஆழமாக ஆராய்ந்தவருமான அவருடைய நன்மாணாக்கர்களில் ஒருவரான செ.வை. சண்முகம் கா.மீ.யின் ஆசிரியத் தனித்தன்மை ஒன்றைச் சுட்டிக் காட்டுகின்றார்.

> **"அவருடைய இலக்கிய வகுப்பில் அறிவியல் மணம் கமழும் ஆம்**
>
> **இலக்கிய இலக்கண வகுப்புகளில் அறிவியல் சார்ந்த உணர்வுகள்**
>
> **கலந்து ஊட்டப்படும். காரணம் அவர் இளங்கலை அறிவியல் பாடம் கற்றவர்."**

ஒப்பிலக்கிய ஆய்வு வளர்ச்சி பெறாத ஒரு காலத்தில் முதுகலை வகுப்புகளில் புதிதாக ஒப்பிலக்கியம் என்ற பாடம் அமைந்தது. அன்று அதற்கு வாய்ப்பான கருவி நூல்கள் இருக்கவில்லை. மாநிலக் கல்லூரியில் அவருடைய மாணவராக இருந்தவரும், 'பேராசிரியப் பேரொளி' எனும் அவர் வாழ்க்கை வரலாற்றை முதன் முதல் வரைந்தவருமான பேராசிரியர் மா. இராமலிங்கம் கடுமையாக உழைத்துப் பாடம் சொல்லும் அரிய திறனை வியந்து எழுதுகின்றார்:

**"சிலப்பதிகாரமும் சிந்தாமணியும், இராமாயணமும், சூளாமணியும், மில்டனின் இழந்த துறக்கமும், கதேயின் பாஸ்டசும், ஹோமரின் இலியாதும் அவர் வகுப்பில் எல்லாமாய்க் கலந்து பிரளயமாய் வரும்... மேலை நாட்டுக் காப்பியத் திறனாய்வாளர்களை எங்களுக்கு விரிவாக முதன் முதல் அறிமுகப்படுத்தியவர் பேராசிரியர் அவர்களே."**

வகுப்பறைகளை உலகத்தரத்துக்கு உயர்த்திச் சென்ற கா.மீ.யின் ஆசிரியத்துவத்தை மிகவும் வியந்த மற்றொரு மாணவர் மார்க்சியத் திறனாய்வாளராக நாம் கொண்டாடும் பேராசிரியர் தி.சு. நடராசன் ஆவார்.

**"தமிழ்க் காப்பியங்களை மேலை நாட்டுக் காப்பியங்களோடு ஒப்பிட்டுக் கூறும் பாடத்தை கா.மீ. எங்களுக்கு நடத்தினார். அப்போது கூட அதன் அருமை தெரியவில்லை. சில ஆண்டுகள் கழித்து யோசித்துப் பார்த்தால் ஆச்சரியமாக**

**இருந்தது. 1968க்குப் பிறகு பேராசிரியர் தெ.பொ. மீ.யின் உந்துதலால் மதுரைப் பல்கலைக்கழகத்தில் ஒப்பிலக்கியம் பிரசித்தமாகத் தொடங்கிய போது கா.மீ.யின் பாடங்களை யோசித்துப்பார்த்தால் பிரமிப்பாக இருந்தது. அவர் பாடம் எடுத்த போது விரிவாக எடுத்த இரண்டு பெரிய குறிப்பேடுகள் 10, 15 ஆண்டுக் காலம் மதுரையில் பாதுகாப்பாக இருந்தன. இரண்டு மூன்று முறை திரும்பப் படித்திருக்கிறேன். அப்போதெல்லாம் கொஞ்சம் வருத்தம் வரும் – ஏன் இவர் இதனையெல்லாம் புத்தகமாகப் போடவில்லை என்று."**

இந்த வருத்தம் உண்மை தான். பல ஆய்வு நூல்களைத் தந்தவர் இலக்கியத் திறனாய்வு, ஒப்பிலக்கியம் தொடர்பான கோட்பாடுகளை அரிதின் முயன்று திரட்டியும் ஏனோ வெளியிடவில்லை.

கா.மீ.யின் ஆசிரிய மாண்புகளைத் திறனாய்வுலகில் பெரும் புகழாளர்களான பேராசிரியர் பஞ்சாங்கம், அ.அ. மணவாளன், அ. பாண்டுரங்கன் எனப் பலரும் எடுத்து மொழிந்துள்ளனர்.

### ஆராய்ச்சித் திறன்

பேராசிரியர் கா.மீ.யின் கூரிய ஆராய்ச்சித் திறனுக்கான முதல் அடையாளமாக வெளிப்பட்டது எம்.லிட். பட்டத்துக்காக அவர் செய்த பாரதியார் கவிதைகள் ஆய்வில் தான். கல்விப் புலத்தில் அவரே முதன் முதல் பாரதி ஆய்வை மேற்கொண்டவர் ஆவார். ஆங்கிலத்தில் எழுதப்பட்ட இவ்வாய்வேடு 1965 இல் பாரி நிலையத்தாலும் பின்னர் 2007 இல் என்.சி.பி.எச் நிறுவனத்தாலும் வெளியிடப்பட்டுள்ளது. (பேராசிரியரின் பல நூல்கள் என்.சி.பி.எச் நிறுவனத்தாலேயே வெளியிடப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.).

பாரதி ஆய்வான '*A Study of the Poetical works of Subramania Bharati*' பிற்கால ஆய்வுகள் பலவற்றுக்கும் முன்னோடியானது. தேசியப் பாடல்கள் சுதந்தரத்துக்குப் பின் முக்கியத்துவம் இழக்கும் என்பதை ஆவேசத்தோடு மறுக்கிறார். பாஞ்சாலி சபதம் சுதந்தரப் போரின் உருவகம் என்று இனம் காணும் கா.மீ. கவிஞர் காப்பியத்தினிடையே உணர்ச்சி வசப்பட்டுப் பாத்திரங்களை விமர்சிப்பது கலைத் திறனைக் குறைக்கிறது என்றும் சுட்டிக் காட்டுகிறார். கவித்துவம் அற்ற படைப்பாக விநாயகர் நான்மணி மாலையை விமர்சிக்கிறார். கண்ணன் பாட்டை ஆழ்வார் பாடல்களுடன் ஒப்பிடும் பேராசிரியர் அப்பாடல்களை நற்கவிதையாகக் காண்கிறார்.

குயில்பாட்டைப் பாரதியின் பாடல்களுக்குள் மணிமுடி என்று போற்றுகிற பேராசிரியர் அதன் வேதாந்தப் புதிர்களுக்கு இரண்டு தீர்வுகளை முன்வைக்கிறார். கைவல்ய நவநீதம் கூறும் மறைப்புச் சக்தியாக மாடும், விட்சேப சக்தியாகக் குரங்கும் அமையக் குயிலி தூய ஆன்மாவாகவும் கவிஞனைத் தலைவனாகவும் காண்கிறார். மற்றொரு விளக்கத்தில் குயிலி உண்மைக் கவிதையாக இருக்க மரபுக் கவிஞனாக மாடும் சொற் சிலம்பக் கவிஞனாகக் குரங்கும் விளங்குகின்றன. மெய்க்கவிஞன் போலிகளை வெல்கிறான். ஏறத்தாழ இந்த விளக்கங்களை அடியொற்றியே பல பாரதி ஆய்வுகள் பின் தொடர்ந்தன என்பது குறிப்பிடத்தக்கது.

பாரதி, பாரதிதாசன், ஔவை ஆத்திசூடிகளை ஒப்பாய்வு செய்த பேராசிரியர்,

> **"ஔவையார் தனி மனித விடுதலையைப் பாடுகிறார்; பாரதியார் அரசியல் விடுதலையைப் பாடுகிறார்; பாரதிதாசன் சமூக விடுதலையைப் பாடுகிறார்."**

என்று குறிப்பது கூர்மையான கருத்து.

பாரதியார் கவிதைகளில் ஆங்கிலக் கவிஞர்களின் தாக்கம் விரிவாக ஆராயப்படுகிறது. எழுபதாண்டுகள் முன்பே பாரதி பாடல்களை ஆழ்ந்து ஆராய்ந்திருக்கிறார் பேராசிரியர் என்பது வியப்பான செய்தி.

முனைவர் பட்ட ஆய்வான '*The Contribution of European Scholars to Tamil*' கள ஆய்வுக்கு முன் மாதிரியாக அமைகிறது. சாயர்புரம், இடையன்குடி, புன்னைக் காயல் எனத் தென் மாவட்டக் கிறித்துவ மையங்களுக்கெல்லாம் நேரில் சென்று செய்த ஆய்வு இது. ஐரோப்பியத் தமிழறிஞர் வரலாறு, அவர்கள் செய்த மொழிபெயர்ப்பு, அகராதி, தேர்ந்த தொகுப்பு (Anthology), காப்பியப் படைப்பு, இலக்கண நூல்கள், சொற்களஞ்சியங்கள், பரமார்த்த குரு கதை போன்ற உரைநடைப் படைப்புகள், வரலாற்று நூல்கள், மருத்துவம், கணிதம், முதலிய அறிவியல் நூல்கள் என விரிவான ஆராய்ச்சிக் களங்களில் பயணிக்கிறார் கா.மீ.

இந்த ஆய்வின் சிறப்புக் குறித்துத் தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் முதல் துணைவேந்தரும் பேரறிஞருமான வ.அய். சுப்பிரமணியம்,

> "Contribution of European Scholars is a Classic"

என அளித்துள்ள பாராட்டே அதன் சிறப்பை உணர்த்தும். சென்னைப் பல்கலைக்கழகம் ஆங்கில நூலையும் அதன் மொழிபெயர்ப்பான ஐரோப்பியர் தமிழ்ப் பணியையும் பாராட்டி வெளியிட்டுள்ளது.

### சிலப்பதிகார, மனோன்மணீய ஆய்வுகள்

தம் பேராசிரியர் அ.சி. செட்டியாரிடம் சிலப்பதிகாரம் பாடம் கேட்ட அனுபவமும், தாம்

மாணவர்க்குப் பாடம் நடத்திய அனுபவமும் பேராசிரியரின் சிலப்பதிகார ஆய்வுக்குக் கால்கோள் இட்டன. சிலம்பில் துணைப் பாத்திரங்கள் (ரா.பி. சேதுப்பிள்ளை அறக்கட்டளை உரை), சிலம்பில் பாத்திரங்களின் பங்கும் பண்பும் என்பன பாத்திரங்களை மையமிட்ட திறனாய்வு நூல்கள். பிற கோட்பாடுகளைப் புறத்தே இருந்து கொண்டுவந்து ஆய்வதை விட படைப்பின் அகத்தே மறைந்துள்ள கோட்பாட்டை இனம் கண்டு ஆய்வு செய்ய வேண்டும் என்பது பேராசிரியரின் கருத்து. அந்த நெறியில் தாமே சிலம்பில் கண்ட உண்மைகளின் வெளிச்சத்தில் பாத்திரப் படைப்பைக் குறித்து ஒரு கோட்பாட்டை உருவாக்கிக் கொள்கிறார்.

பாத்திரங்களை முதன்மைப் பாத்திரங்கள், துணைமைப் பாத்திரங்கள் என்று வகைப்படுத்தல் முதற் பணி. துணைமைப் பாத்திரங்களை ஒன்றிய பாத்திரங்கள், ஒட்டிய பாத்திரங்கள், ஊன்றிய பாத்திரங்கள் என்று இனம் காண்பது இரண்டாவது பணி, இந்தக் கோட்பாட்டை அடித்தளமாகக் கொண்டு சிலம்பில் ஆய்வு மேற்கொள்கிறார்.

இதே அடிப்படையில் சுந்தரம் பிள்ளையின் மனோன்மணீய நாடகத்தை ஆராய்கிற நூல்: ‘மனோன்மணீயம் சுந்தரனார் – புரட்சி, திறன்’ இந்த நூலிலும் பாத்திரங்களை ஆராய்வதுடன் மனோன்மணீய ஆசிரியர் நிகழ்த்திய புரட்சி எதுவெனவும் எடுத்துரைக்கிறார். சுந்தரனாரின் தமிழ்த்தாய் வாழ்த்து மறுமலர்ச்சி நிகழ்த்திய பெரும் புரட்சி என்று பேராசிரியர் குறிப்பிடுகிறார். தமிழ்த் தாய் என்ற உருவகம், வடமொழிக்குத் தமிழ் இளைத்ததன்று – மேம்பட்டது என்று வகுத்துரைக்கும் மொழியுணர்வு, இந்த உணர்ச்சியை நாடகத்தில் பாத்திரங்களின் மூலம் வெளிப்படுத்தும் பாங்கு இவையெல்லாம் தமிழ் மக்கள் சிந்தனையில் ஏற்படுத்திய புரட்சியாக இனம் காண்கிறார் பேராசிரியர். விரிவை என்.சி.பி.எச் வெளியிட்ட நூலில் காணலாம்.

### எழுத்துக் களம்

பேராசிரியர் கா.மீ. இலக்கியத் திறனாய்விலும், வளமான, கட்டுரை இலக்கியங்கள் படைப்பதிலும் தொடர்ந்து ஈடுபட்டதன் அடையாளமாக, பன்மையில் ஒருமை, அகராதிக்கு அப்பால், திருவள்ளுவரில் இல்லை மயக்கம், பல்நோக்குப் பார்வைகள் ஆகிய நூல்கள் அமைந்துள்ளன.

இவற்றில் திருக்குறளில் நுண்பொருள் காணும் முயற்சியைக் காண முடியும். கம்பர் காவியத்தில் புதிய பொருண்மையை அடையாளம் தெரிய முடியும். இலக்கியத்தில் பொருளாதாரம், அறிவியல் நீதிமுறை பற்றிப் புரிந்து கொள்ள முடியும். ஆன்மிகத் தெறிப்புகளையும் உணர முடியும்.

அறிவியல் குறித்த தனிக் கட்டுரைகள் மட்டுமல்லாது நூல்களை எழுதுவதிலும் கா.மீ. ஆர்வம் காட்டியுள்ளார். தமிழ்ப் பேராசிரியர்களிடையே அவரைத் தனித்து நிறுத்துவது அவருடைய அறிவியல் பார்வை. கணிப்பொறி கற்க (பதிப்பாசிரியர்), கொங்கு நாட்டில் உடல் வரைதல் கலை – பச்சை குத்தல், உடலும் மருந்தும் – 100 வினா விடைகள் முதலிய நூல்கள் பேராசிரியரின் பிறதுறை அறிவுக்கும் அறிவியல் நோக்குக்கும் சான்றாக விளங்குபவை.

சாகித்ய அகாதமிக்காக ‘தேவேந்திரநாத் தாகூர்’, ‘கம்பன்’ ஆகிய ஆங்கில நூல்களை இனிய தமிழில் மொழிபெயர்த்துத் தந்துள்ளார்.

கா.மீ.யின் படைப்புலகு திறனாய்வு, கள ஆய்வு, காப்பிய ஆய்வு, அறிவியல் பார்வை, மொழிபெயர்ப்பு எனப் பன்முக விரிவு கொண்டது.

### ஆட்சித் திறன்

பேராசிரியர் கல்வி சார்ந்த பல தலைமைப் பொறுப்புகளைத் திறம்பட ஏற்று இன்னார் இனியார் என்று பார்க்காத நேர்மைத் தடத்தில் பயணித்தவர்.

கல்லூரி முதல்வராக இருந்தபோது இந்தி எதிர்ப்புப் போராட்டத்தைச் சிக்கலின்றிக் கையாண்ட சிறப்புக்குரியவர். சேலம் அரசு கல்லூரி முதல்வராக இருந்தபோது கலவரச் சூழலையும், மாணவர் ஒழுங்கீனத்தையும் பொறுமையாகவும் துணிவாகவும் எதிர்கொண்டு அமைதியை நிலை நாட்டியவர். தனித்துத் தெரிந்த முதல்வராக இருந்தமையால் தமிழ்நாடு அரசின் சிறந்த முதல்வர் விருது பெற்றவர்.

1971 இல் கட்டடம் இல்லாமல், ஊழியர் இல்லாமல் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தின் முதல் தலைமைப் பொறுப்பு தரப்பட்டபோது அனைத்தையும் ஒழுங்குபடுத்தி பெருமுயற்சியால் கட்டட வசதி பெற்று, உரிய காலங்களில் யுனெஸ்கோ உதவி நிதியை வாங்கி, வளர்ச்சித் திட்டங்களை வகுத்து, அயல் நாட்டார் தமிழ் கற்க வசதி செய்து, நம் பேராசிரியர்களைப் பயிற்சிக்கு அயல் நாட்டுக்கு அனுப்பி அந்நிறுவனத்துக்கு அடித்தளத்தை வலுவாக்கிய நிர்வாகத் தலைமை கா.மீ. அவர்களுடையது. Journal of Tamil Studies என்ற ஆய்வு இதழை முதன்மை ஆசிரியராக இருந்து தொடங்கியவரும் கா.மீ. அவர்களே. வெற்றிடத்தில் ஒரு மாளிகை அமைத்தவர் கா.மீ.

சென்னைப் பல்கலைக்கழக ஆட்சிக் குழுவில் இரண்டு முறை உறுப்பினராக இருந்த காலத்திலும்

சாதனை மனிதராகவே கா.மீ. விளங்கினார். மால்கம் ஆதி சேஷையா துணை வேந்தராக இருந்த காலத்தில் இளங்கலை வகுப்புகளில் தமிழ்ப் பாடத்தை நீக்குவது என்ற முடிவெடுக்கும் சூழல் நேர்ந்தது. தவறான அறிவுரையால் துணைவேந்தர் இந்த முடிவுக்கு வந்தபோது கொதித்தெழுந்தார் கா.மீ. கல்வியாளர் பலரையும் கல்விக் குழு (Academic Council) உறுப்பினர்களையும் திரட்டி பேராசிரியர் போராடத் துணிந்ததை அறிந்ததும் இந்த முடிவை மாற்றிக் கொண்டார் துணைவேந்தர். கல்லூரிகளில் தமிழ்த்துறை காப்பாற்றப்படுவதற்கும், நூற்றுக்கணக்கான தமிழ்ப் பேராசிரியர்கள் இன்று பணி வாய்ப்பில் இருப்பதற்கும் கா.மீ. அவர்களே காரணம்.

1981 இல் கல்லூரிக் கல்வித் துணை இயக்குநராகவும் பின்னர் இயக்குநராகவும் பொறுப்பேற்றார் கா.மீ. ஒரு தமிழ்ப் பேராசிரியர் முதன் முதலாக இயக்குநரான சிறப்பு நிகழ்வு அது. இயக்குநரகத்தின் செயல்பாடுகள் தமிழ் மயமானது அப்போது தான். அன்று 62 அரசுக் கல்லூரிகள், 173 தனியார் கல்லூரிகள், ஏறத்தாழ 1,90,000 மாணவர்கள், 14000 ஆசிரியர்கள் ஆகிய அத்தனை பேர் கொண்ட துறையின் தலைமைப் பொறுப்பைக் கடமையுணர்வுடன் நிர்வாகம் செய்தார் ஒரு சிறிய கிராமத்தில் பிறந்து வளர்ந்த கா.மீ. அவர்கள்.

அப்பொறுப்புக் காலத்தில் நேர்மை, வாய்மை, தூய்மை என்ற முப்பெரும் கொள்கைகளின் நாயகராக விளங்கினார் பேராசிரியர். 1983 இல் பணி ஓய்வு பெற்றார்.

இத்தனை சிறப்பான ஆளுமையுடன் அவர் விளங்குவதற்கு அவருடைய துணைவியார் உளவியல் முதுகலைப் பட்டம் பெற்ற ஜெயலட்சுமி அம்மையார் காரணம் என்றால் மிகையாகாது. அவரும் Kongu Proverbs என்ற நூல் எழுதிப் பரிசும் பாராட்டும் பெற்றவர்.

**ஓய்வுக் காலம்**

ஓயாமல் உழைப்பவர்களுக்குப் பணி ஓய்வு என்பது ஏது? ஓய்வுக் காலத்தில் பன்னிரண்டாண்டுகள் பேரூர் சாந்தலிங்கர் தமிழ்க் கல்லூரியின் செயலராகப் பணியாற்றினார். அக்கல்லூரியை கலைக் கல்லூரியாக மாற்றி வணிகவியல், கணினியியல் பட்ட வகுப்புகள் கற்பிக்க ஏற்பாடு செய்தார்.

புகழ்பெற்ற கௌமார மடாலயத்தில் இரண்டு பள்ளிகளின் நிர்வாகத்தைச் சீரமைப்புச் செய்தார். கோவை பாரதிய வித்யா பவன் துணைத் தலைவராக இருந்து அங்கு தமிழ் மணம் கமழும் படிச் செய்தார். சான்றோர் பேரவை நிறுவி அறிஞர்களை உரையாற்றும்படிச் செய்து நூலாகவும் தொகுத்தளித்தார்.

வேதம் புதுப்பித்த தீரர் என்ற தலைப்பில் விவேகானந்தரையும் பாரதியாரையும் ஒப்பிட்டு அறிஞர் பலரைக் கட்டுரைகள் எழுதத் தூண்டித் தாமும் எழுதி நூலாக்கம் செய்தார்.

காலச் சக்கரத்துக்கும் கா.மீ.க்கும் ஓய்வு என்பதே இல்லை என்பதே உண்மை. ஆயினும் காலம் இப்பெருமகனுக்கு ஓய்வு தர விழைந்ததால் 2015 ஆம் ஆண்டு நவம்பர் 18 ஆம் நாள் இயற்கை எய்தினார்.

மனைவியார் முன்பே காலமாகி விட்டார். சட்டத்தில் டாக்டர் பட்டம் பெற்ற மகள் மனோன்மணீ, பொறியாளரான மகன் குகன், மற்றொரு மகன் ஆதிபகவன் தந்தையார் நினைவு போற்றி வாழ்கிறார்கள்.

**பயன் கருதா வாழ்க்கை**

அதிகாரங்களுக்கு அஞ்சாதவர்; கடமை உணர்ச்சியில் கடுகளவும் தவறாதவர்; மாணவர்கள் நன்றியுடன் நினைவு கூரும் பெரும் பேராசிரியர். என்றும் ஏழை மாணவர்க்கும் ஊழியர்களுக்கும் உற்றுழி உதவிய பெருந்தகையாளர். நூலாசிரியர், தொகுப்பாசிரியர், நிறுவனங்களை வளர்த்த ஆளுமையாளர், தமிழுக்காகப் போராடவும் தயங்காத மொழிப்பற்றாளர்.

பேராசிரியர் தி.சு. நடராசன் குறித்திருப்பது போல, ‘விண்டுரைக்க அறிய அரியதாய் விரிந்த வான வெளியென இருக்கும் பண்புகள் அனந்தம்.’

அரசினாலோ, பெருநிறுவனங்களாலோ பேராசிரியர் பெருமைப் படுத்தப்படவில்லை என்பது ஒரு பெருங்குறையே. பேராசிரியருக்குக் கிடைத்த விருதுகளில் மிகவும் குறிப்பிடத்தக்கது 2015 ஆம் ஆண்டில் மறைவுக்குச் சில மாதங்கள் முன் சாகித்ய அகாதமி அளித்த பாஷா சம்மான் விருது (2013 ஆம் ஆண்டுக்குரியது.).

பயனெண்ணாமல் உழைத்த பெரும் பேராசிரியரின் நூற்றாண்டு விழாப் பொழுதில் இச்சான்றோர் புலமையை, பெருமையை, ஆய்வின் அருமையை எண்ணி எடுத்துரைத்து மகிழ்வோமாக.

*(குறிப்பு: பேராசிரியர் மா. இராமலிங்கம் எழுதி, என்.சி.பி.எச் வெளியிட்டுள்ள ‘பேராசிரியப் பேரொளி,, நூலில் மேலும் செய்திகள் பெறலாம்).*

●

**கட்டுரையாளர்: கவிஞர், மொழிபெயர்ப்பாளர்,**
**ஓய்வு பெற்ற பேராசிரியர்.**




# காங்கிரசு – காந்தி – தீண்டப்படாதோர்: அண்ணல் அம்பேத்கர் உரையாடல்கள்


அண்ணல் அம்பேத்கர் தமது ஆய்வுத் துறையாகப் பொருளாதாரத்தையே பல்கலைக் கழகப் படிப்பிலும் ஆய்வுகளிலும் தேர்வு செய்து கொண்டார். அத்துறை தொடர்பான ஆய்வுகளையே கொலம்பியா மற்றும் பிற பல்கலைக் கழகங்களில் மேற்கொண்டார். அந்த ஆய்வுகளைப் பின்னர் நூல்களாக வெளியிட்டார். ஆனால், அவர் தமது வாழ்வோடு இரண்டறக் கலந்திருந்த சாதியம் குறித்தும் ஆய்வுகளை மேற்கொள்ளத் தொடங்கினார். அவரது அவ்வகையான ஆய்வுகளைப் பின்வருமாறு தொகுத்துக் கொள்ளலாம்.

- 1916 மே மாதம் ஒன்பதாம் நாள், கொலம்பியா பல்கலைக் கழகத்தில் நடந்த **ஏ.ஏ. கோல்டன்வைசர் மானிடவியல் கருத்தரங்கில்** அம்பேத்கர் கலந்து கொண்டார். *இந்தியாவில் சாதிகள்: அவற்றின் இயங்கியல், தோற்றம், வளர்ச்சி* என்ற பொருளில் மேற்குறித்த கருத்தரங்கில் கட்டுரை வாசித்தார். இந்த ஆய்வு பின்னர் 1917 மே மாதம் இந்தியன் ஆண்டிக்கொயரி இதழில் வெளிவந்தது. சாதி குறித்த அம்பேத்கரின் முதல் ஆய்வாக இதனைக் கருதலாம். இந்த ஆய்வில், ஐரோப்பிய, அமெரிக்க ஆய்வாளர்கள் சாதி பற்றி செய்திருக்கும் ஆய்வுகளை மதிப்பீடு செய்து, அவை அடிப்படையில் இந்தியாவில் சாதி செயல்படும் தனித்தன்மைகளை இனம் காணவில்லை என்று பதிவு செய்கிறார். சாதியின் தனித்தன்மைகளை முதன்மைப்படுத்திய ஆய்வுகளை அம்பேத்கர் செய்யத் தொடங்கினார்.

- 1936 இல் ஜாத்-பாத்-தோடக் மண்டல் எனும் அமைப்பு லாகூரில் நடத்திய மாநாட்டுக்குத் தலைமை தாங்குவதற்கு அம்பேத்கர் அழைக்கப்பட்டார். அதில் வழங்குவதற்காக *சாதியை அழித்தொழித்தல்* எனும் தலைப்பில் தலைமை உரையைத் தயாரித்தார். இந்த உரையை மாநாட்டில் நிகழ்த்துவதற்கு அமைப்பாளர்கள் விரும்பவில்லை. எனவே, அம்பேத்கர் அதனைப் பின்னர் வெளியிட்டார். இந்த உரை தொடர்பாக காந்தி வெளியிட்ட கருத்துகளை மறுத்துப் பின்னர் எழுதினார். எனவே, நூலாக வெளிவரும்போது *சாதியை அழித்தொழித்தல் (மகாத்மா காந்தியின் எதிர்வினையும் இணைந்தது)* என்று வெளியிட்டார். இந்து சாத்திரங்கள், இந்தியாவில் சமூகச் சீர்திருத்தம்,

அண்ணல் அம்பேத்கர் மக்கள் பதிப்பில் வெளியாகும் சாதியம் இந்து மதம், காந்தியம் தொகுதிகளுக்கான அறிமுகக் கட்டுரை.

கட்டுரையை விவாதித்த மக்கள் பதிப்புக் குழு தோழர்களுக்கு நன்றியுடையேன்



வீ.அரசு

இந்திய சோசலிஸ்டுகளும் சாதியும், உழைப்புப் பிரிவினையும் சாதியும் ஆகிய பல்வேறு செய்திகள் குறித்த உரையாடலாக இந்நூல் அமைந்தது.

- 1942 டிசம்பர் மாதம் கனடாவின் கியுபெக்கில், பசிபிக் உறவுக் கழகம் நடத்திய கருத்தரங்கில் அம்பேத்கர் *இந்தியாவில் தீண்டப்படாதோரின் இன்னல்கள்* எனும் பொருளில் கட்டுரை எழுதினார். இக்கட்டுரை 1943 இல் *காந்தி - தீண்டப்படாதோர் விடுதலை* என்று நூலாக வெளிவந்தது. வெளிநாட்டில் உள்ளவர்கள், இந்தியாவில் உள்ள தீண்டப்படாதோரைப் பற்றிப் புரிந்து கொள்வதற்கான ஆவணமாக இந்நூல் அமைகிறது. தீண்டப்படாதோரை சிறுபான்மை இனத்தினர் போல தனிக் கூறாகக் கருத வேண்டும். அந்த அடிப்படையில் தனித்தொகுதிகள், பிற வசதிகள் செய்துதர வேண்டும் என்பது இந்நூலின் பொருண்மையில் அமைந்துள்ளது.

- 1945 இல் *காங்கிரசும் காந்தியும் தீண்டப்படாதோருக்குச் செய்தது என்ன?* என்ற நூல் வெளி வந்தது. காங்கிரஸ் என்ற அமைப்பு தீண்டப்படாதோரை எப்படி நடத்தியது? அவர்களுக்கு என்ன செய்தது? காந்தி செல்வாக்கு மிக்க தலைவராக உருவான சூழலில் தீண்டப்படாத மக்களுக்கு என்ன செய்தார்? ஆகிய விவரணங்கள் இந்நூலில் இடம் பெற்றுள்ளன.

- 1946 இல் *சூத்திரர்கள் யார்? அவர்கள் எவ்வாறு இந்தோ-ஆரிய சமூகத்தில் நான்காம் வருணத்தவர் ஆனார்கள்* எனும் நூல் வெளிவந்தது. 'புருச சூக்தம்' சூத்திரர்களை எவ்வாறு பதிவு செய்கிறது? வர்க்கப் பிரிவினையை நியாயப்படுத்தல், சூத்திரர்களின் தோற்றம், சூத்திரர்களும் பார்ப்பனியமும், ஆரியர்களும் சூத்திரர்களும் முதலிய பல செய்திகள் இந்நூலில் இடம்பெற்றுள்ளன.

- 1948 இல் *தீண்டப்படாதோர்: அவர்கள் யார்? அவர்கள் ஏன் தீண்டப்படாதோர் ஆயினர்?* என்னும் நூல் வெளிவந்தது.

மேற்குறித்த நூல்களில், வருண உருவாக்கம், சாதி உருவாக்கம், சூத்திரர் உருவாக்கம், தீண்டப்படாதோர் உருவாக்கம் ஆகியவை குறித்து விரிவான ஆய்வுகளை அம்பேத்கர் நிகழ்த்தியுள்ளார். இந்து மதம் எனும் நிறுவனம் மேற்குறித்தப் பாகுபாடுகளுக்கு எந்தெந்த வகையில் அடிப்படையாக அமைகிறது என்பதைப் புரிந்து கொள்ள அம்பேத்கரின் இந்து மதம் பற்றிய ஆய்வுகளில் இருந்து அறிந்து கொள்ளலாம். எனவே அண்ணல் அம்பேத்கர் ஆக்கங்கள் எனும் இம்மக்கள் பதிப்பில் தொகுதி 1 தொடங்கி 19 வரை உள்ள தொகுதிகளில் சாதியம் முதன்மைப் பொருளாக அமைகிறது.

மேற்குறித்தப் பின்புலத்தில், அண்ணல் அம்பேத்கர் நிகழ்த்தியுள்ள ஆய்வில் பின்வரும் கூறுகளைக் குறித்து அறிய முடியும்

- இந்தியச் சமூகத்தில் வருணம் எனும் பொருண்மை எவ்வாறு அமைந்துள்ளது? அது எவ்வாறு தோன்றியது? அதனைக் கட்டிக் காப்பதில் இந்து மதத்தின் பங்கு எத்தகையது? இந்து சாத்திரங்கள், இலக்கியங்கள் ஆகிய பிற, வருண அமைப்பை எவ்வாறெல்லாம் பதிவு செய்திருக்கின்றன? நடைமுறைச் செயல்பாட்டில் அதன் பங்கு யாது? இந்தியச் சமூகத்தின் வளர்ச்சியின்மைக்கு வருணம் எவ்வாறு காரணமாக அமைகிறது?

- இந்தியச் சமூகத்தில் சாதி என்பதை எவ்வாறு வரையறை செய்யலாம்? வருணத்திற்கும் சாதிக்கும் என்ன தொடர்பு? வருணம்தான் சாதியை உருவாக்கியதா? உழைப்புப் பிரிவினைதான் சாதிக்கு மூலமாக அமைகிறதா? இந்தியச் சமூகத்தில் படிநிலைத் தன்மையாக அமைந்துள்ள சாதியைப் பார்ப்பனியம் எவ்வாறு காப்பாற்றுகிறது. இந்து மதத்திற்கும் சாதிக்கும் உள்ள உறவு எத்தகையது?

- சூத்திரர்கள் யார்? அவர்கள் எவ்வாறு உருவாக்கப்பட்டார்கள்? வருண அமைப்பில் சூத்திரர்கள் எவ்வாறு கட்டமைக்கப்பட்டார்கள்? பார்ப்பனியத்திற்கும் சூத்திரருக்கும் உள்ள தொடர்புகள் எவை? இந்து மதத்திற்கும் சூத்திரர்களுக்கும் உள்ள உறவு எத்தகையது? வருணம், சாதி ஆகிய கருத்துநிலைக்கும் சூத்திரர்களுக்கும் எவ்வகையான உறவு உள்ளது?

- தீண்டப்படாதோர் யார்? அவர்கள் எவ்வாறு உருவாக்கப்பட்டார்கள்? சேரி எவ்வாறு உருவானது? தீட்டு என்பதன் பொருள் என்ன? வருணத்திற்கும் தீண்டப்படாதோருக்கும் என்ன உறவு? சாதிக்கும் தீண்டப்படாதோருக்கும் என்ன தொடர்பு? இவர்களுக்கு விடுதலை இல்லையா? முதலிய கேள்விகளின் தொடர்ச்சியாகவே காங்கிரசும் காந்தியும் தீண்டப்படாதோருக்குச் செய்தது என்ன என்ற கேள்வியை எழுப்புகிறார், அம்பேத்கர்.

வருணம், சாதி, சூத்திரர், தீண்டப்படாதோர் ஆகியவை ஒன்றுடன் ஒன்று தொடர்புடையவை. இதில், இந்து மதம், பார்ப்பனியம் ஆகியவை முதன்மையான பங்களிப்பு செய்கின்றன. இதனால், இந்து மதத்திலிருந்து வெளியேறுவது ஒரே வழி என்று அம்பேத்கர் உறுதி செய்கிறார். இந்து மதம் எனும் இடத்தில் பௌத்தத்தை ஈடு செய்கிறார். அது குறித்த விரிவான ஆய்வையும் நிகழ்த்துகிறார். இந்திய சமூக அமைப்பில் நாகரிகமற்ற தன்மையாக உள்ள வருணம், சாதி, சூத்திரர், தீண்டப்படாமை முதலியவற்றை ஒழிப்பதற்கு மாற்றாக, பௌத்தத்தை முன்னிருத்துகிறார்.

சாதி அமைப்பு முறையைச் சிதைத்து இந்தியாவில் உண்மையான ஜனநாயகத்தை நிலைநாட்டக் கூடிய ஒரே ஆற்றல் தீண்டப்படாதோர், என்பதை அவர் (காந்தி) அறிவார். ஆனால், திரு. காந்தி இந்து மதமும் இந்திய சாதி அமைப்பு முறையும்

அப்படியே நிலைத்து நிற்க வேண்டும் என்று விரும்புகிறார். தீண்டப்படாதோர், இந்து மத அரவணைப்பில் கட்டுண்டு இந்துக்களாகத் தொடர்ந்து நீடிக்க வேண்டும் என்றும் திரு. காந்தி விரும்புகிறார். ஆனால், எந்த வகையில்? கூட்டாளிகளாக அல்ல, மாறாக இந்துக்களுடன் ஏனோதானோ என்ற தொடர்புடையவர்களாக. திரு. காந்தி தீண்டப்படாதோரிடம் அன்பு காட்டுகிறார். எதற்காக? ஏனென்றால், அன்பின் மூலம் அவர்களைக் கொல்லவும் இந்துக்களிடமிருந்து பிரிந்து செல்ல விரும்பும் அவர்களது இயக்கத்தை நசுக்கவுமே அவர் விரும்புகிறார். ஏமாற்று வித்தையை வெற்றிகரமாகச் செய்வதற்கு திரு. காந்தி கையாண்ட வழிகளில் “ஹரிஜன் சேவா சங்கமும்” ஒன்று (தொகுதி 16: பக் 69).

**பசிபிக் உறவுகள் கழகம்** என்னும் அமைப்பு கனடாவின் கியுபெக்கில் நடைபெறவிருந்த கருத்தரங்கம் ஒன்றுக்கு அம்பேத்கரிடம் கட்டுரை கேட்டது. இந்தியாவில் தீண்டப்படாதோர் என்னும் பொருண்மையில் அந்தக் கட்டுரை அமைந்துள்ளது. அதில் இடம் பெற்றுள்ள ஒரு பகுதிதான் மேலே உள்ளது.

அம்பேத்கர் தமது உரையாடலில் முதன்மையாக எடுத்துக் கொண்ட பொருண்மை, சாதியம் குறித்தப் பல்வேறு உரையாடல்கள் ஆகும். இதில் ‘தீட்டு’ எனும் சமூக விலக்கு மற்றும் புறக்கணிப்பு, ஒரு பிரிவு மக்களுக்கு மட்டும் பிறப்பின் அடிப்படையில், தலைமுறை தலைமுறையாக நிகழ்வதை மிக விரிவாக ஆய்வு செய்தவர் அம்பேத்கர்தான் என்று சொல்ல முடியும். இந்தப் பின்புலத்தில், மேற்குறித்த நூல்களில் சமகால இந்திய வரலாற்று நிகழ்வுகளோடு தீண்டாமை எனும் கருத்துநிலை குறித்து விரிவாகப் பேசுகிறார். இந்த உரையாடல்களைப் புரிந்து கொள்வதற்கு அம்பேத்கரின் மேற்குறித்த நூல்கள் அடிப்படை ஆவணங்களாக அமைந்துள்ளன. இவ்வகையான செய்திகளைப் பின்வருமாறு தொகுத்துக் கொள்வோம்.

- தீண்டப்படாத மக்கள், தீண்டாமை எனும் கொடுமையிலிருந்து விடுதலை பெறுவதற்குத் தேவையான அடிப்படைகள் எவையெவை?

- காங்கிரஸ் அமைப்பு உருவான காலம் முதல், காங்கிரஸ் அமைப்பில் காந்தி முதன்மை பெறும் காலம் (1919) வரை, தீண்டப்படாத மக்களை காங்கிரசு அமைப்பினர் எவ்வாறு எதிர்கொண்டனர்?

- காந்தி காங்கிரசு அமைப்பின் முதன்மைத் தலைவராக உருப்பெற்ற காலங்களில் (1919-1930) தீண்டப்படாத மக்களைக் குறித்த அவரது செயல்பாடுகளின் கருத்துநிலை எவ்வாறு இருந்தது?

- வட்டமேசை மாநாடு (1931-35) போன்ற அமைப்புகளின் மூலம் காந்தியாரின் செயல்கள் தீண்டப்படாத மக்கள் சார்ந்து எவ்வகையில் அமைந்திருந்தது?

- 1948 இல் காந்தி மறையும் வரை தீண்டப்படாத மக்களுக்காக அவரது செயல்களை (1935-1948) எவ்வாறு புரிந்து கொள்வது?

1942 இல் வெளியான *காந்தி – தீண்டப்படாதோரின் விடுதலை* எனும் பதிவு, இந்தியச் சூழலில் தீண்டாமைக்குட்படுத்தப்படும் பட்டியல் சாதி மக்கள், அதிலிருந்து விடுதலை பெறுவதற்கான தரவுகளைக் கொண்ட அடிப்படை ஆவணம் என்று சொல்ல முடியும். இந்தியாவில் தீண்டாமைக் கொடுமையை அனுபவிக்கும் மக்களின் வாழ்முறையை, உலக மக்களுக்கு அறிவுறுத்தும் வகையில் இந்த ஆவணத்தை அம்பேத்கர் உருவாக்கியுள்ளார். அமெரிக்க மண்ணில் கறுப்பின மக்கள் எதிர்கொள்ளும் அடிமை வாழ்வு, உலகின் பிற பகுதிகளில் யூதர்கள் போன்றவர்களைப் புறக்கணிக்கும் நிகழ்வுகள் முதலிய பிறவற்றை இந்தியச் சூழலில் உள்ள தீண்டப்படாதோர் வாழ்க்கை முறையோடு இணைத்து, உலகுக்கு அறிமுகப்படுத்துகிறார். இந்தியாவில் உள்ள இந்த நிலைமை, உலக அளவில் அறியப்படாதிருக்கும் தன்மையை உணர்ந்து, அதனைப் பரப்புரை செய்யும் நோக்கில்தான், உலகம் தழுவிய கருத்தரங்கில் இதனை முன்வைத்துள்ளார்.

இந்த ஆவணத்தின் முன்னுரையில் அம்பேத்கர் பதிவு செய்யும் செய்தி பின்வருமாறு அமைகிறது.

“கீழ்ப்படுத்தப்பட்ட மக்கள் தங்களைப் பிணைத்திருக்கும் அடிமைத் தளைகளை நொறுக்கியெறிந்து விடுதலை அடைவதற்கு உதவுவது போன்று, தீண்டப்படாதோரும் தங்களது அடிமைச் சங்கிலிகளை உடைத்தெறிந்து விடுதலை பெறுவதற்கு உதவ, உலகம் கடமைப்பட்டிருக்கிறது. இந்தியாவிலுள்ள தீண்டப்படாதோரின் சிக்கலுடன் ஒப்பிடும்போது அடிமைகள், கருப்பின மக்கள், யூதர்களின் சிக்கல்கள் ஆகியவை ஒன்றுமேயில்லை என்றுதான் சொல்ல வேண்டும். எனவேதான் இந்த ஆய்வுக்கட்டுரையை எழுதும்படி நான் கேட்டுக்கொள்ளப்பட்டபோது, இந்தச் சிக்கலை உலகின் கவனத்திற்குக் கொண்டுவருவதற்கு நல்லதொரு வாய்ப்பாகக் கருதி, இப்பணியை ஏற்றுக்கொண்டேன்.” (தொகுதி 16, பக். 13)

இந்த ஆவணத்தில் அம்பேத்கர் பதிவாக்கியுள்ள அடிப்படைத் தன்மைகளை பின்கண்டவாறு பதிவு செய்யலாம்

- அடிமைத்தனம், கொத்தடிமைத்தனம், பண்ணையடிமைத்தனம் ஆகியவை அவற்றின் தன்மைகளில் மாற்றம் ஏற்பட்டு மறைந்தொழிந்த நிலை உருவாகியுள்ளபோது, தீண்டாமை மட்டும் தொடருவது ஏன்?

- 1942 இல் ஜூலை மாதம் நாகபுரியில் நடந்த அனைத்திந்திய பட்டியல் வகுப்பினரின் மாநாட்டில், பல்வேறு தீர்மானங்கள் முன்மொழியப்பட்டன. அதில் இந்திய அரசமைப்புச் சட்டத்தில் தீண்டாமை

ஒழிப்புக்கான சட்ட வரையறைகள், சட்டத் திருத்தங்கள் ஆகியவை குறித்தத் தகவல்களை முன்மொழியும் நிகழ்வு நடந்தது. இதன் மூலம் அனைத்து ஒடுக்கப்பட்ட மக்களுக்கான கல்வியும் பிரதிநிதித்துவமும் வலியுறுத்தப்பட்டது.

- அரசுப் பணிகளில் பட்டியல் வகுப்பினரின் தேவைகள், எண்ணிக்கை சார்ந்து அவர்கள் நியமனம் செய்யப்பட வேண்டும். நிதித்துறை, காவல்துறை, வருவாய்த் துறை ஆகிய பிறவற்றில் பட்டியல் வகுப்பு மக்களுக்குப் பிரதிநிதித்துவம் வழங்குவது அவசியம்.

- தனித்தேர்தல், தனிக் குடியேற்றங்கள் ஆகியவை அடிப்படையான தேவைகளாகும். இதன் மூலம் பட்டியல் வகுப்பு மக்கள் சொந்த கிராமங்களை உருவாக்கி, அங்கு குடியமர்வு செய்வதற்கென, தனியான ஆணையம் ஒன்றை உருவாக்க வேண்டும்.

- தீண்டப்படாதோர் முன்வைக்கும் இந்தத் திட்டங்களைத் 'தேசியத் திட்டம் இல்லை; வட்டாரம் சார்ந்த வகுப்புவாரித் திட்டம்' என்று காங்கிரசு அமைப்பினர் ஒதுக்குகின்றனர். இது பெரும்பான்மையினர் சிறுபான்மையினரைத் தந்திரமாக அழிக்கும் திட்டம் ஆகும் என்ற புரிதல் தேவை.

- தேர்தல் முறையில், கூட்டுத் தொகுதிகளினால் தீண்டப்படாத மக்கள் அதிகாரம் பெறமுடியாது. தனித்தொகுதிகள் குறிப்பாக, பட்டியல் வகுப்பு மக்களே வாக்காளர்களாக உள்ள தொகுதிகள் உருவாக்கப்பட வேண்டும். இதன்மூலம் பட்டியல் வகுப்பு மக்கள் சனநாயக உரிமைகளைப் பெற முடியும்.

- சாதிய அமைப்பை கணக்கில் எடுத்துக் கொண்ட அரசமைப்புச் சட்டம், உருவாக்கப்பட வேண்டும். அதில் இந்துப் பெரும்பான்மையோரின் கொடுமைக்கு எதிராகப் பட்டியல் சாதி மக்களின் உரிமைகள் உறுதி செய்யப்பட வேண்டும்.

மேற்குறித்தப் பதிவுகளை செய்துள்ள அம்பேத்கர், இவ்வகையான திட்டங்கள் உருவாக்கப்பட வேண்டிய தேவை ஏன் உருவாகிறது? இதற்கு அடிப்படைக் காரணமாக அமைவது எது? இந்த ஆவணம் உயிர்ப்புடைய ஆவணமாக அமைய வேண்டியதன் தேவை ஏன்? எனப் பல்வேறு கேள்விகளை எழுப்புகிறார். இதைச் சார்ந்து அவரது பதிவாகப் பின்கண்ட செய்திகளை முன்வைக்க முடியும்.

"இந்துக்களைப் பற்றித் தெரிந்திருப்பவர்கள், இதற்கான காரணங்களை நன்கு அறிவார்கள். இந்துக்கள் மக்கி மசிந்து போன, வேரூன்றிவிட்ட பழமைவாதத்தை உள்ளியல்பாகவே பெற்றிருக்கிறார்கள்; சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவத்துக்கு அதாவது, சனநாயகத்துக்கு முரண்பட்ட ஒரு மதத்தை அவர்கள் கொண்டிருக்கிறார்கள். ஏற்றத்தாழ்வு என்பது அனைத்து இடங்களிலுமே இருந்துவருகிறது என்பதில் ஐயமில்லை. அது பெரும்பாலும் சுற்றுச்சூழல்களைப் பொறுத்துள்ளது. ஆனால், மதத்தின் ஆதரவு அதற்கு என்றுமே இருந்ததில்லை. ஆனால், இந்துக்களைச் சார்ந்த ஏற்றத்தாழ்வு முற்றிலும் வேறுபட்டது. இந்துச் சமூகத்தில் ஏற்றத்தாழ்வு நிலவிவருவது மட்டுமல்ல, இந்த ஏற்றத்தாழ்வு, இந்து மதத்தின் முறைமைப்பட்ட கருத்தியலாகவும் அமைந்துள்ளது." *(தொகுதி 16, பக் 65)*

இவ்வகையில் பிரித்தானிய இந்தியாவில் ஒடுக்கப்படும் தீண்டப்படாத மக்களின் உரிமைக்கான ஆவணங்களாக மாற்றுகளை அம்பேத்கர் உருவாக்கியுள்ளார். இதனுடைய நீட்சியாகவே அம்பேத்கரின் நூலான *காங்கிரசும் காந்தியும் தீண்டப்படாதோருக்குச் செய்தது என்ன?* என்பது அமைகிறது. உருவாக்கப்பட்ட ஒரு ஆவணத்தின் பல்வேறு பரிமாணங்கள் குறித்த உரையாடலாகவே இந்நூல் அமைகிறது.

★★★

1885 ஆம் ஆண்டு தொடங்கப்பெற்ற இந்திய தேசிய காங்கிரஸ் அமைப்பின், தொடக்க காலத்தில் தன்னாட்சி குறித்த விரிவான உரையாடல்கள் இல்லை. பின்னர் படிப்படியாகவே பிரித்தானியர் ஆட்சி அதிகாரத்திலிருந்து இந்தியா விடுபட வேண்டும் என்னும் கருத்து உருவானது. ஆனால், காங்கிரசு உருவான காலம் முதல் ஆண்டுக்கொரு முறை மாநாடு நடைபெற்றது. அதில், ஒடுக்கப்பட்ட, தீண்டாமைக் கொடுமைக்குட்படுத்தப்படும் பட்டியல் வகுப்பு மக்கள், குறித்த தீர்மானம் ஒன்றை நிறைவேற்றுவதை வழக்கமாகக் கொண்டிருந்தனர். இத்தீர்மானங்களை முன்மொழியும்போது, மத உணர்வுகளைப் புண்படுத்தாமல், மதத்தின் சிறந்த பண்புகளைக் கைவிடாமல், பட்டியல் வகுப்பு மக்களைத் தீண்டாமைக் கொடுமையிலிருந்து விடுவிக்க வேண்டும் என்றே பேசுவர். இந்தியாவிற்குப் பொறுப்பான தன்னாட்சி வரும் காலங்களில் இக்கொடுமையை அகற்றும் வாய்ப்பு உருவாகும் என்றும் பேசுவர்.

'பட்டியல் வகுப்புக் குழந்தைகளைப் பள்ளியில் சேர்க்கும்போது, தூய்மை தொடர்பான சிக்கல் உருவாகும். தூய்மை பழக்கவழக்கங்களில் பயிற்சிபெற்ற, தூய உணவு வகைகளை உண்டுவந்த குழந்தைகளுடன் ஒரே வகுப்பறையில் அமருவதற்குத் அவர்கள் தகுதி பெறவேண்டும். ஒடுக்கப்பட்ட வகுப்பினரின் உடல் தூய்மையை நாம் உயர்த்த வேண்டும். தூய்மையற்றவர்களின் நிலைக்குத் தூய்மையானவர்களை இழுத்துச் செல்லக்கூடாது' என்று கல்கத்தாவில் 1917 ஆம் ஆண்டில் நடைபெற்ற இந்திய தேசியக் காங்கிரசின் ஆண்டுக் கூட்டத்தொடருக்குத் காங்கிரஸ் தலைவராக இருந்த அன்னிபெசன்ட் அம்மையார் 1909 ஆம் ஆண்டு பதிவுசெய்திருந்தார்.

சமூகச் சீர்திருத்தம் தொடர்பான செயல்பாடுகள், காங்கிரசின் செயல்பாடுகளில் எந்த அளவில் இடம்பெற வேண்டும்? பட்டியல் சாதி மக்கள் தீண்டாமைக்கு ஆட்படுத்தப்படுவதைக் குறித்த 1886 இல் கல்கத்தாவில் நடந்த இரண்டாவது காங்கிரசு மாநாட்டில், தாதாபாய் நௌரோஜி பேசும்போது,

“என்னைவிட சமூகச் சீர்திருத்தத்திற்கான அவசியத்தை அதிகம் உணர்ந்தவர்கள் இந்திய தேசியக் காங்கிரசில் எவரும் கிடையாது என்பது உறுதி; ஆனால், மதிப்புக்குரியவர்களே, அனைத்திற்கும் உரிய நேரம், சூழ்நிலைகள், கட்சிகள், இடங்கள் இருக்கின்றன; நமது அரசியல் குறிக்கோள்களை நமது ஆட்சியாளர்களுக்கு எடுத்துரைப்பதற்காகத்தான் நாம் இங்கு ஓர் அரசியல் அமைப்பாகக் கூடியிருக்கிறோமே தவிர, சமூகச் சீர்திருத்தங்களை விவாதிப்பதற்காக அல்ல” (தொகுதி 17, பக். 37-38)

இவ்வகையில் காங்கிரசுக் கட்சி பட்டியல் வகுப்பு மக்களின் மீது நிகழ்த்தப்படும் கொடுமைகளுக்கு முகம் கொடுப்பதாக இல்லை. ஒவ்வொரு ஆண்டும் நடைபெறும் மாநாட்டிலும், இச்சிக்கல் தீர்மானமாக வரும்போது, நொண்டிச் சாக்குகளைச் சொல்லி, அதனைத் தவிர்ப்பதையே காங்கிரசு தலைவர்கள் வழக்கமாகக் கொண்டிருந்தனர். தீண்டாமைச் சிக்கல் கொடுமையானது; அதனைத் தொடர விடக் கூடாது என்று பேசியே, அந்தச் சிக்கலை ஒழிப்பதற்கான எந்த முயற்சியையும் நடைமுறைத் திட்டங்களில், காங்கிரசு கட்சி எடுக்கவில்லை. இந்திய தேசிய சமூக மாநாடு என்ற அமைப்பைத் தொடங்கி, அதிலும் தீண்டாமைச் சிக்கல் குறித்துப் பேசும்போது, “சமூகச் சீர்திருத்தங்களை அங்கீகரிக்கிறோம், ஆனால் அதற்கான இடம் காங்கிரசு கூட்டத் தொடர்கள் இல்லை” என்று கூறினர்.

1885 தொடங்கி 1917 வரை காங்கிரசு கட்சியின் நடவடிக்கைகளில் தீண்டப்படாத மக்களின் விடுதலைக்காக எவ்விதமான முயற்சியும் முன்னெடுக்கப்படவில்லை. மாறாக, அத்தன்மை சமூகக் கொடுமை என்றும் அதனை மாற்றுவதற்கான சீர்திருத்தங்களைச் செய்ய வேண்டும் என்றும் வாசகங்கள் அடங்கிய தீர்மானங்களை ஒவ்வோராண்டும் காங்கிரசு நடத்தும் மாநாட்டில் வாசிப்பதை வழக்கமாகக் கொண்டிருந்தனர். காங்கிரசு அமைப்பில் செயல்பட்டவர்கள், தீவிர இந்துமத நம்பிக்கையாளர்கள். அவர்கள், இந்து மதத்தில் உள்ள சடங்குகள், முறைமைகள் முதலியவற்றைக் கேள்வி கேட்க மனதளவில் உடன்படாதவர்கள். இந்து மதமே தீண்டாமைக் கொடுமைக்கு அடிப்படையாக அமைகிறது. எனவே, இந்து மதம் சார்ந்தவர்களிடமிருந்து, தீண்டப்படாத மக்கள், தங்களுக்கான விடுதலையை எதிர்பார்க்க முடியாது என்பதை, அம்பேத்கர் ஒவ்வொரு காங்கிரசு மாநாட்டு நிகழ்வுகளையும் அடிப்படையாகக் கொண்டு உரையாடலுக்குட்படுத்தியுள்ளார். இதற்கான விரிவான ஆவணங்களையும் பதிவு செய்துள்ளார்.

★★★

காந்தியார் 1919 முதல் காங்கிரசுக் கட்சியில் முதன்மையான தலைவராக உருவானார். திலகரின் மறைவும் 1920 இல் நிகழ்ந்தது. 1919 இல் மாண்டேகு-செம்ஸ்போர்டு சீர்திருத்தத்தின் மூலம், பிரித்தானிய அரசு, புதிய அரசியல் சட்டத்தை நடைமுறைக்குக் கொண்டு வந்தது. இதன் மூலம், இரட்டையாட்சி முறை நடைமுறைக்கு வந்தது. இந்தியர்களும் ஆட்சி அதிகாரத்தில் இடம்பெறும் வாய்ப்பு உருவானது. மாகாணங்களை, தொகுதிகளாகப் பிரித்து, அதில் தேர்தல் நடத்தி இந்தியர்கள் ஆட்சிபுரியும் சட்டமன்றங்களை உருவாக்குவது என்பதும் படிப்படியாக நடைமுறைப்படுத்தப்படும் நிலை உருவானது.

இந்தச் சூழலில்தான், காந்தி காங்கிரசுக் கட்சியில் முதன்மையான தலைவராக உருவானார். காங்கிரசுக் கட்சியின் சட்டதிட்டங்களை மாற்றத் தொடங்கினார். ஒத்துழையாமை இயக்கத்தின் மூலம் அந்நியப் பொருள் புறக்கணிப்பு போன்ற அரசியல் போராட்டங்களை முன்னெடுக்கத் தொடங்கினார். இப்போராட்டங்கள், காங்கிரசு அமைப்புக்கு ஒரு புதிய முகத்தைக் கொடுக்கத் தொடங்கின. இதுவரை செயல்பட்ட காங்கிரசுக் கட்சியின் செயல்பாடுகள் பெரிதும் மாற்றம் பெற்றன. 1922 ஆம் ஆண்டு முதல் காந்தி பல்வேறு புதிய நடவடிக்கைகளை முன்னெடுக்கத் தொடங்கினார். இந்தச் சூழலில், பிரித்தானிய அரசும் இந்தியர்களுக்கு தனியான அரசியல் சட்டங்களை உருவாக்கப் பல்வேறு குழுக்களை அமைத்தது. காங்கிரசு அமைப்பிலும் பல்வேறு குழுக்கள் உருவாக்கப்பட்டன. பிரித்தானிய அரசை நிருவாக அடிப்படையில் எதிர்கொள்வதற்கு காங்கிரசு தயாரானது. இந்திய அரசியல் வரலாற்றில் பல்வேறு புதிய நிகழ்வுகளுக்கான களம் அமைந்தது.

அண்ணல் அம்பேத்கரும் 1916 முதல் இந்தியாவின் நிகழ்வுகளில் முழு அக்கறை கொண்டவராக செயல்படத் தொடங்கினார். தனது எழுத்துக்களை அச்சிட்டு வெளியிடத் தொடங்கினார். 1918 இல் ஒடுக்கப்பட்டோருக்கான மாநாடு நாகபுரியில் நடைபெற்றது. அந்த மாநாட்டில் கலந்து கொண்டார். அதே ஆண்டில் பிரித்தானிய அரசு சவுத்பரோ சீர்திருத்தங்கள் குழு (Southborough Reforms Committee) என்ற பெயரில், ஒடுக்கப்பட்ட மக்களுக்கான உரிமைகள் குறித்து அறிய அம்பேத்கரிடம் கருத்து கேட்டது. அம்பேத்கர் விரிவான அறிக்கையை அந்தக் குழுவிற்கு வழங்கினார். 1920 இல் ஒடுக்கப்பட்டோர் உரிமைகளைப் பேசுவதற்கு மூக் நாயக் என்ற இதழைத் தொடங்கினார். பல்வேறு இடங்களில் நடந்த ஒடுக்கப்பட்டோர் மாநாடுகளில் கலந்து கொண்டார். தனது வாழ்முறையைக் களப் போராளியாகவும் வடிவமைத்துக் கொண்டார். இராயல் ஆணையம்

*(1925)*, சைமன் ஆணையம் *(1928)* ஆகியவற்றில் ஒடுக்கப்பட்ட மக்களின் நிலைமைகளை விரிவாகப் பதிவு செய்து வழங்கினார். இந்தப் பின்புலத்தில்தான் காந்தி அவர்களோடு செயல்படும் பல்வேறு தருணங்கள் உருவாயின.

அம்பேத்கருக்கும் காந்தி அவர்களுக்கும் உருவான முரண்பாடுகளை பின்வருமாறு தொகுத்துக் கொள்ள முடியும்

- தனி வாக்காளர் தொகுதியை முன்னிருத்தி அம்பேத்கர் வைத்த கோரிக்கையை காந்தி முறியடித்த பூனா ஒப்பந்தம் எனும் நிகழ்வு குறித்த உரையாடல்

- தீண்டப்படாத மக்களை சிறுபான்மையினர் போல 'தனிக்கூறாக' கருத வேண்டும். அதற்கான சட்ட வரையறைகளை உருவாக்க வேண்டும் என்பது தொடர்பான உரையாடல்கள்

- **ஹரிஜன் சேவா சங்கம்** என்ற அமைப்பு தீண்டப்படாதோருக்கு எவ்வகையான விடுதலையைத் தரும் என்ற உரையாடல்

- 'கோயில் நுழைவு' என்பது தீண்டப்படாத மக்களுக்கு எந்த வகையில் உரிமையாக அமையும் என்பது தொடர்பான உரையாடல்

- ஆதிக்க சாதி இந்துக்கள் தீண்டப்படாதோரை எவ்வாறு நடத்துகின்றனர். இதில் காந்தியார் நிலைபாடு குறித்த உரையாடல்

தீண்டப்படாத மக்களுக்கு காந்தியார் என்ன செய்தார்? என்பதை அறிவதற்கு மேற்குறித்தத் தன்மைகளில் காந்தி எவ்வாறு நடந்து கொண்டார் என்பதை அடிப்படையாகக் கொண்டு உரையாடலை நிகழ்த்தலாம். இதன் மூலம் காந்தி தீண்டப்படாத மக்களுக்கு என்ன செய்தார் என்ற புரிதல் சாத்தியமாகும்.

தீண்டப்படாதோர், தனி அரசியல் பிரிவாகச் செயல்படும் நோக்கத்தோடு, இந்தியாவில் இரட்டை ஆட்சி முறையில் உருவாக்கப்பட்ட மாகாணங்களுக்கான தேர்தலில், தங்களுக்கு தனி வாக்காளர் தொகுதிகளை ஒதுக்க வேண்டும் என்று கோரினர். இக்கோரிக்கை சைமன் ஆணையத்திடமும் *(1928)* வட்டமேசை மாநாடுகளிலும் *(1931, 1932)* முன்வைக்கப்பட்டது. இதற்கு காந்தி அவர்களின் எதிர்வினை பின்வருமாறு அமைகிறது:

"இந்துக்களுக்கும் முகமதியர்களுக்கும் சீக்கியர்களுக்கும் ஏற்புடைய எந்த ஒரு தீர்வையும் காங்கிரஸ் எப்போதுமே ஏற்றுக்கொள்ளும். ஆனால், எந்த ஒரு சமூகத்துக்கும், குறிப்பாக தீண்டப்படாதோர் எனப்படுபவர்களுக்கு தனி வாக்காளர் தொகுதிகள் வழங்கும் ஏற்பாட்டை ஏற்காது என்று ஏற்கெனவே கூறியதை மீண்டும் வலியுறுத்திக் கூற விரும்புகிறேன்.

ஏனைய சிறுபான்மையினர் முன்வைக்கும் கோரிக்கைகளைப் புரிந்துகொள்ள முடியும்; ஆனால், தீண்டப்படாதோர் சார்பில் முன்வைக்கப்படும் கோரிக்கைகள் மிகவும் ஈவுஇரக்கமற்றவையாகும். இவை தீண்டாமை எனும் கொடுமையை நிரந்தரமாக்குகின்றன. இந்தியாவுக்கு சுதந்திரம் பெறுவதற்காகக்கூட தீண்டப்படாதோரின் வாழ்வுரிமைகளை நான் பலி கொடுக்க மாட்டேன். தீண்டப்படாதோரின் மிகப்பரந்த பகுதியினரை தனிப்பட்ட முறையில் பிரதிநிதித்துவப்படுத்துவதாக நான் உரிமை கொண்டாடுகிறேன். இங்கு நான் காங்கிரஸ் சார்பில் மட்டுமே பேசவில்லை; என் சொந்த சார்பிலும் பேசுகிறேன்; தீண்டப்படாதோரிடையே ஒரு பொது வாக்கெடுப்பு நடத்தப்படுமானால், நான் மிக அதிக வாக்குகள் பெற்று முன்னணியில் இருப்பேன். தனி வாக்காளர் தொகுதியும் தனி இடஒதுக்கீடும் பழைமைவாத இந்து தருமத்துக்கே வெட்கக்கேடான, தீண்டாமை என்னும் இக்கோரக் கொடுமையை ஒழித்துக்கட்டுவதற்கு எவ்வகையிலும் உதவியாக இருக்காது என்று இந்தியாவின் மூலை முடுக்கெல்லாம் சென்று தீண்டப்படாதோருக்கு எடுத்துரைப்பேன்; அதற்காக அல்லும் பகலும் உழைப்பேன்.

தீண்டாமை எனும் இழுக்கை ஒழித்துக்கட்டுவதற்கு உறுதிகொண்டுள்ள ஏராளமான இந்து சீர்திருத்தவாதிகள் தோன்றியுள்ளனர் என்பதை இந்தக் குழுவும் முழு உலகமும் அறிந்துகொள்ளட்டும். எங்கள் பதிவேடுகளில், மக்கள்தொகைக் கணக்கெடுப்பில், தீண்டப்படாதோர் ஒரு தனி சமூகத்தினராகக் குறிக்கப்படுவதை நாங்கள் விரும்பவில்லை."

*(தொகுதி 17, பக் 144)*

காந்தி அவர்களின் மேற்குறித்த நிலைபாடு என்பது தீண்டப்படாத மக்களுக்குக் கிடைக்கவேண்டிய தனி அதிகாரத்தை மறுத்த ஒன்றாகும். இரண்டாம் வட்டமேசை மாநாட்டிற்குப் பின், தனி வாக்காளர் தொகுதி வழங்கும் பிரித்தானிய மன்னரின் அறிவிப்பைத் தொடர்ந்து, காந்தி எரவாடா சிறையில் இருந்தவாறே சாகும்வரை உண்ணாவிரதத்தை அறிவித்தார். இதன் விளைவாக, 'பூனா ஒப்பந்தம்' உருவானது. தனித்தொகுதி கோரிக்கை கைவிடப்பட்டது. காந்தி உண்ணாவிரதத்தை முடித்துக் கொண்டார் *(1932)*. இதன் மூலம் தீண்டப்படாதோருக்கு காந்தி செய்த செயலை அறிந்து கொள்ள முடிகிறது.

பூனா ஒப்பந்தம் மூலம் பெரும் தோல்வியைச் சந்தித்த அம்பேத்கர், தீண்டப்படாதோரின் தனிக் கூறுகளைப் பாதுகாப்பதற்கான தனி இயக்கம் வேண்டும் என்னும் கோரிக்கையை முன்வைத்தார். இதனை வெளிப்படுத்தும் அவரது பதிவு பின்வருமாறு அமைகிறது.

"தீண்டப்படாதோரில் பெரும்பாலோர் காங்கிரஸ்காரர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதைத் தேர்தல் முடிவுகள் பற்றிய ஆய்வு காட்டுகிறது. அவர்கள் காங்கிரசிலோ வேறு எந்த முக்கியமான அரசியல் கட்சியிலோ இணைவது

மிகவும் ஆபத்தானது; இறப்பைத் தழுவுவது போன்றது என்பது எனது உறுதியான கருத்து.

தீண்டப்படாதோர் தங்களது தவறுகளைப் பற்றிய விழிப்புணர்வைப் பேணவும் தங்களின் புரட்சிகர உணர்வினைத் தக்கவைத்துகொள்ளவும் வேண்டுமானால் அவர்களுக்கென்று ஓர் இயக்கம் வேண்டும். தீண்டப்படாதோருக்கு இழைக்கப்படும் கொடுமைகள் என்பவை ஆதிக்கச் சாதி இந்துக்களின் குற்றங்கள் என்று சாதி இந்துக்களுக்குப் புரியவைப்பதற்கு அத்தகைய இயக்கம் தேவை. முஸ்லிம்களைப் பொறுத்தவரையில் காங்கிரஸ் ஒரு தீவிரவாத இந்து அமைப்பாக இல்லாதிருக்கலாம். ஆனால், அது ஆதிக்கச் சாதி இந்துக்களைக் கொண்டிருப்பதால் அது ஆதிக்கச் சாதி வெறிகொண்ட ஓர் இந்து அமைப்பே என்பதில் ஐயமில்லை. தீண்டப்படாதோரின் இயக்கம் என்பது ஆதிக்கச் சாதி இந்துக்கள்மீது வெளிப்படையாகப் போர் தொடுப்பதையே குறிக்கும். காங்கிரசுக்குள் தீண்டப்படாதோரின் இயக்கம் செயல்படுவது முற்றிலும் இயலாததாகும். அது கட்சிக்குள் ஒருவரையொருவர் அழித்துக்கொள்ளும் உட்பகையையே குறிக்கும். காங்கிரஸ் தனது சொந்தப் பாதுகாப்பின் பொருட்டு இதனை அனுமதிக்காது.

காங்கிரசில் சேர்ந்திருக்கும் தீண்டப்படாதோர், மேலிடத்தின் ஒப்புதல் இல்லாமல் தங்களது சமூகத்தின் மேம்பாட்டிற்காக எத்தகைய இயக்கத்தையும் தமது விருப்பம்போல் முன்னின்று நடத்த முடியாது. இதன் விளைவாக எந்தெந்த மாகாணங்களில் தீண்டப்படாதோர் காங்கிரசில் இணைந்தார்களோ அந்த மாகாணங்களில் தீண்டப்படாதோர் இயக்கம் செயலிழந்து போகிறது.” *(தொகுதி 7, பக். 223)*

மேற்குறித்தப் பின்புலத்தில், 1936 இல் அம்பேத்கர் புதிய அரசியல் கட்சியைத் தொடங்கினார். **சுதந்திரத் தொழிலாளர் கட்சி** அதன் பெயர். அந்தக் கட்சியின் சார்பில் தேர்தலில் போட்டியிடவும் செய்தார். ஆனால் அது வலுவான அமைப்பாக உருப்பெற்றதாகக் கூற முடியவில்லை. இவ்வகையில் காந்தியின் செயல்பாடுகளால், தனித்த அடையாளத்தோடு செயல்படும் தீண்டப்படாதோர் அமைப்பு வெற்றிகரமாக இயங்க முடியவில்லை.

தீண்டப்படாதோரின் முன்னேற்றம் கருதி, காந்தி அவர்களின் அறிவுறுத்தலில் 1932 ஆம் ஆண்டு **தீண்டாமை எதிர்ப்புக் கழகம்** உருவானது. இந்தப் பெயரை காந்தி ஏற்றுக் கொள்ளவில்லை. பின்னர் அதன் பெயர் **தீண்டப்படாதோரின் தொண்டர்கள் கழகம்** என்று மாற்றப்பட்டது. அதனையும் காந்தி ஏற்றுக் கொள்ளாது **ஹரிஜன் சேவக் சங்கம்** என்னும் பெயரைச் சூட்டினார். இந்தப் பெயரை தீண்டப்படாதோர் ஏற்றுக் கொள்ளவில்லை. காந்தி அது குறித்துக் கவலைப்படவில்லை. இந்த அமைப்பின் செயல்பாடு குறித்து, காந்தியாரைச் சந்தித்த தாழ்த்தப்பட்டோர் தூதுக் குழுவிடம் அவர் கூறியவை

“தாழ்த்தப்பட்டோருக்கான நல்வாழ்வுப் பணி என்பது தீண்டாமை பாவத்திற்கு இந்துக்கள் செய்யவேண்டிய கழுவாயாகும். மேலும், சங்கத்துக்கு வசூலிக்கப்பட்ட பணமும் இந்துக்கள் தந்ததே ஆகும். இந்த இரண்டு கண்ணோட்டங்களிலிருந்தும் பார்க்கும்போது இந்துக்கள் மட்டுமே சங்கத்தை நிருவகிக்க வேண்டும் என்பது தெளிவு. சிந்தனை அடிப்படையிலும் சரி, உரிமை அடிப்படையிலும் சரி, சங்க நிருவாகக் குழுவில் தீண்டப்படாதோர் இடம் கோரமுடியாது.” *(தொகுதி 7, பக. 277)*.

எந்தச் சமூகப் பிரிவினருக்காக ஒரு அமைப்பு உருவாக்கப்பட்டதோ, அவர்கள் அந்த சங்க நிருவாகக் குழுவில் இடம்பெறக் கூடாது என்ற காந்தியின் தந்திரமான நிலைபாட்டை இங்கு காண்கிறோம்.

காந்தி தீண்டப்படாத மக்கள் கோயில்களுக்குள் நுழைவது குறித்துப் பேசியவையும் நேர்மையானவையாக இல்லை. அது அந்த மக்களைச் சமாதானப்படுத்தி ஏமாற்றும் செயல் என்பதை அம்பேத்கர் பின்வரும் காந்தியாரின் சொற்களின் மூலம் எடுத்துக் காட்டுகிறார்.

“தாழ்த்தப்பட்ட மக்களுக்கென்று தனிக் கோயில்கள் கட்டப்பட வேண்டும் என்பது அப்போது அவரது கருத்தாக இருந்தது. அந்த நேரத்தில் காந்தி இவ்வாறு சொன்னார்: தற்போதுள்ள எல்லாக் கோயில்களிலும் அந்தியஜாக்கள் (தீண்டப்படாதோர்) நுழைவதற்கு உரிமை வழங்குவது எவ்வாறு நடக்கக்கூடியது? சாதி மற்றும் ஆகம விதிமுறைகள் இந்து மதத்தில் முதன்மை இடம் பெற்றிருக்கும் வரை ஒவ்வொரு இந்துவும் ஒவ்வொரு கோயிலுக்குள்ளும் நுழையலாம் என்று கூறுவது இன்றைக்கு நடக்கக்கூடியதல்ல. எனவே, கோயில் நுழைவு என்பது அவரிடம் தொடக்கம் முதலே இருந்துவருகிற குறிக்கோள் அல்ல; அதனால் அது ஆன்மிக அடிப்படையானதன்று” *(தொகுதி 7, பக். 308-309)*.

தீண்டப்படாத மக்களுக்கான தனித்தொகுதி, சிறுபான்மை சமூகம் போல தனிக்கூறுகளுடன் தீண்டப்படாத மக்கள் வாழ்தல், தீண்டப்படாத மக்களுக்கான சங்கம், கோயில் வழிபாடு முதலிய அனைத்து நிலைகளிலும் காந்தி நடந்து கொண்டதைப் போலவே, ஆதிக்க சாதி இந்துக்களின் செயல்களை நோக்கி காந்தி என்ன நிலைபாடு எடுத்தார் என்பதையும் அம்பேத்கர் பின்வரும் பதிவு மூலம் வெளிப்படுத்துகிறார்.

“ஆதிக்கச் சாதி இந்துவின் ஆதிக்கத்தை எதிர்ப்பதற்கு அமைதி வழியில் இணங்கவைக்கும்

முறையைத்தான் கைக்கொள்வோம் என்று திரு காந்தியும் ஹரிஜன் சேவக் சங்கமும் தம்மைக் கட்டுப்படுத்திக்கொள்வது ஏன்? ஆதிக்கச் சாதி இந்துக்கள் இழைத்துவரும் கொடுமைகளை நேரடி நடவடிக்கை மூலம் அவர்கள் ஏன் எதிர்க்கக்கூடாது? அநீதியை எதிர்க்க முற்படும்போது, பகுத்தறிவுடனும் அறநெறியுடனும் செயல்படுவதற்கு குழுக்களுக்கு உள்ள மிகக் குறைந்த வாய்ப்புக்கூறுகளை அழித்திடாத எதிர்ப்பு முறைகளைக் கண்டறியும் சிக்கல் இருப்பது எனக்குப் புரிகிறது. ஆனால் இந்த வகையில் இடர்ப்பாடு ஏதும் இல்லை. ஏனென்றால் ஓர் எதிர்ப்பு வடிவம் என்ற முறையில் திரு காந்தி அறப்போர் அல்லது செயலற்ற எதிர்ப்பு முறையை உருவாக்கி இருக்கிறார்; அறம்சார்ந்து இதற்கு எத்தகைய எதிர்ப்பும் இருக்க முடியாது. எனவே அப்படியிருக்கும்போது, தீண்டப்படாதோருக்கு எதிரான அநீதிக்கு முடிவுகட்டுவதற்கு, ஆதிக்கச் சாதி இந்துக்களுக்கு எதிராக, அறப்போர் மேற்கொள்ளும்படி தாழ்த்தப்பட்ட மக்களை திரு காந்தி ஏன் கேட்கக்கூடாது? பிரித்தானிய ஏகாதிபத்தியத்திற்கு எதிராக அறப்போர் மேற்கொள்ளும்படி அவர் இந்திய மக்களைக் கேட்டுக்கொண்டார். தாழ்த்தப்பட்ட மக்களின் நலன்களுக்காக, ஆதிக்கச் சாதி இந்துக்களுக்கு எதிராக இதே ஆயுதத்தைப் பயன்படுத்த அவர் ஏன் விரும்பவில்லை?" (தொகுதி 7, பக் 284-285)

வருணம், சாதி, சூத்திரர் என்ற கூறுகளால் தீண்டப்படாதோர் குறித்த விரிவான ஆய்வை மேற்கொண்ட அம்பேத்கர், 'தீண்டாமை' எனும் கொடுமையால் ஒடுக்கப்படும் ஒரு பிரிவு மக்கள் குறித்து செய்த ஆய்வாக மேற்குறிப்பட்டவை அமைகின்றன. சாதி குறித்தும் சூத்திரர் குறித்தும் தனித்த விரிவான ஆய்வை மேற்கொண்ட அம்பேத்கர் அந்த வரிசையில் தீண்டப்படாதோர் குறித்த ஆய்வையும் செய்துள்ளார். இதில் காந்தி அவர்கள் இந்த மக்கள் குறித்துச் செயல்பட்ட பல்வேறு பரிமாணங்களையும் மேலே பதிவு செய்துள்ளோம். காங்கிரசு அமைப்பு இம்மக்களை எப்படி எதிர்கொண்டது? அதன் தொடர்ச்சியாக காந்தி எவ்வாறு எதிர்கொண்டார் என்ற உரையாடலை மேலே நிகழ்த்தியுள்ளோம்.

தீண்டாமை எனும் கொடிய நடைமுறையால் துன்பத்திற்குள்ளாகும் இந்திய மக்களின் விடுதலைக்கு அம்பேத்கரின் அணுகுமுறை எவ்வாறு இருந்தது? காந்தியாரின் அணுகுமுறை எப்படி இருந்தது? என்பதை காங்கிரசும் காந்தியும் தீண்டப்படாதோருக்குச் செய்தது என்ன? என்ற அம்பேத்கரின் நூல் தெளிவுபடுத்துகிறது.

தீண்டாமை இந்து மதத்தின் ஒரு பிரிவினர் மீது சுமத்தப்படும் கொடிய செயல். இந்து மதத்தினர் இதனைக் கைவிட்டு கழுவாய் தேட வேண்டும். தீண்டப்படாத மக்கள் தனிப்பட்ட முறையில் கோயில்களில் வழிபட அனுமதிக்க வேண்டும். அதனை இந்து மத ஆகம விதிகளை மீறாமல் நிகழ்த்த வேண்டும். அவர்கள் 'இறைவனின் குழந்தைகள்'. அவர்களைத் தனிப்பிரிவாகக் கருதக் கூடாது. இந்து மத நடவடிக்கைகளில் அவர்கள் இணைந்து இருக்க வேண்டும். அவர்களைத் தனிமைப்படுத்துவது இந்துமத சனாதன தருமத்துக்கு எதிரானது.

அம்பேத்கர் தீண்டப்பாடாதோரைத் தனிக்கூறாக, சிறுபான்மையினராகக் கருத வேண்டும் என்கிறார். தனி வாக்காளர் தொகுதி வேண்டும் என்கிறார். இதனை ஏற்க முடியாது. எனது உயிரைக் கொடுத்தாவது அவர்களை இந்து மதத்தில் இருந்து பிரிப்பதை ஏற்றுக் கொள்ள மாட்டேன். அவர்களை தனிமைப்படுத்தும் எந்தச் செயலையும் ஏற்றுக் கொள்ள முடியாது.

இது தீண்டப்படாதோர் குறித்த காந்தியின் அணுகுமுறை. இதன் மூலம் தீண்டாமையை குறிப்பிட்ட மனிதக் கூட்டத்தின் தன்மானச் சிக்கலாக காந்தி பார்க்கவில்லை. மாறாக, இந்து மதத்தையும் அதன் சனாதன மரபுகளையுமே முதன்மைப்படுத்துகிறார். வேலைப் பிரிவினை சார்ந்த வருணமும் அதிலிருந்து உருப்பெற்ற சாதியமும் காப்பாற்றப்பட வேண்டும் என்பது காந்தியாரின் பார்வையாக உள்ளது.

தீண்டாமை எனும் கொடுமையை உருவாக்கியதே இந்து மதம்தான். அதனைப் பரப்புபவர்கள் பார்ப்பனர்கள். இந்து மதத்திலிருந்து வெளியேறி தன்மானத்துடன் வாழ வேண்டும். இந்திய மக்கள் தொகையில் கணிசமாக உள்ள தீண்டப்படாதோர் தனி அடையாளத்துடன் வாழ வேண்டும். சனநாயகத்தில் தொழில்படும் வாக்கு சார்ந்த அதிகாரத்தில், தனி வாக்காளர் தொகுதிகளை உருவாக்க வேண்டும். தீண்டப்படாதோரை தனிக்கூறாகக் கருத வேண்டும். சிறுபான்மைச் சமூகமாகக் கருதப்படும் முஸ்லிம்கள், சீக்கியர்கள் போன்று தீண்டப்படாதோரையும் கருத வேண்டும். தீண்டப்படாதோர் விடுதலைபெற இதுவே வழி.

இது தீண்டப்படாதோரின் விடுதலை குறித்த அண்ணல் அம்பேத்கரின் கண்ணோட்டம்.

இந்திய அரசியல் வரலாற்றில் மேற்குறித்த இருவரின் கண்ணோட்டங்களையும் கவனத்தில் கொள்ளும்போது, அம்பேத்கரின் பார்வை சரியாக இருப்பதை இன்றைய நடைமுறை அரசியல் செயல்பாடுகள் உறுதிப்படுத்துவதைக் காண்கிறோம்.

*அடிப்படை ஆதார நூல்கள்: அண்ணல் அம்பேத்கர் ஆக்கங்கள் தொகுதி ஒன்று முதல் பத்தொன்பது வரை*

●

**கட்டுரையாளர்: எழுத்தாளர், ஓய்வு பெற்ற பேராசிரியர்.**

கட்டுரை



# தொல்கபிலர்
## தமிழ் அறிவு மரபின் தந்தை

தொல்கபிலர் கி.மு. 800 வாக்கில் தோன்றிய ஒரு தமிழர். அவர் தோற்றுவித்த எண்ணியம் ஒரு பொருள்முதல்வாத மெய்யியல். புறநானூறு (166) அவரை முதுமுதல்வன் எனவும் அவரது நூலை 24 கூறுகளைக் கொண்ட ஒருமுதுநூல் எனவும் குறிப்பிடுகிறது. சங்க இலக்கியத் தொகுப்புகள் அவரைத் தொல்கபிலர் என்கின்றன. சித்தர் பத்ரகிரியார் அவரை ஆதிகபிலர் என்கிறார். வடமொழி நூல்கள் அவரை கபிலர், கபிலமுனி, அசுரர் எனப் பலவாறு குறிப்பிடுகின்றன. பாகவத புராணம் அவரைக் கடவுளின் அவதாரம் என்கிறது. ஆதிசங்கரர் அவரை மகாமேதை என்கிறார். அவர் குறித்து விவேகானந்தர், “இந்தியாவில் தோன்றிய ஒவ்வொரு மெய்யியலும், ஒவ்வொரு சமயநிறுவனமும் கபிலர் என்ற மாமனிதருக்கு கடமைப்பட்டுள்ளன.... அந்தப் புகழ்மிக்க - வியப்புக்குரிய - ஒளிநிறைந்த கபிலர் இன்னும் வாழ்ந்து கொண்டிருக்கிறார்” என்கிறார்.



**கணியன்பாலன்**

பழங்கால இந்தியாவின் அறிவுலகப் படைப்புத்திறனை தனது பக்கம் ஈர்த்ததோடு, இந்தியச் சிந்தனையோட்டத்தை 1500 ஆண்டுகளாகத் தன் கட்டுப்பாட்டில் வைத்திருந்த ஒரு தத்துவமே கபிலரின் சாங்கியத் தத்துவம் எனவும் மக்கள் கபிலரை மாபெரும் சிந்தனையாளர்.... எனப் போற்றிப் புகழ்ந்தனர் எனவும் கூறுகிறார் பிரேம்நாத் பசாசு. தொல்கபிலரின் சாங்கியம் மிகத் தொன்மையானது எனவும் ஆதி காலத்தில் எண்ணிய தத்துவத்துக்கு இருந்த செல்வாக்கை மகாபாரதம் முதல் புராணங்கள் வரை அனைத்தும் ஐயத்திற்கு இடமின்றி மெய்ப்பிக்கின்றன எனவும், கீதை முதல் மனுவின் சட்ட நூல் வரை உபநிடதங்கள் உட்பட அனைத்து நூல்களும் கபிலரின் கருத்துக்களால் நிறைந்துள்ளன எனவும் கார்பே கூறுகிறார்.

மேற்கு நாடுகளில் எண்ணியம்: கிரேக்க அணுவியலின் தந்தை டெமாக்கிரட்டசு (Democretus) இந்தியா வந்து ஓகப்பயிற்சி பெற்ற இந்திய (தமிழ்) அறிவர்களைக் கண்டு மெய்யியல், அணுவியல்களைக் கற்றுச் சென்றார் என கார்ல் மார்க்சு, *Difference between Democriterean and Epicurean philosophy of Nature*

என்ற தனது கட்டுரையில் குறிப்பிட்டுள்ளார். அலெக்சாந்திரியாவின் கிலேமான், கிரேக்கர்கள் தங்களது தத்துவ சாத்திரத்தை இந்தியாவிலிருந்து திருடி வந்தவர்கள் என்கிறார். இவை போக சாங்கியத்தின் அடிப்படைகள் அனாக்சிமேந்தரசு (Anaximandre), கெராக்கிலிசு (Heraclite), எம்பிடாக்கில்சு (Empedocle), அனெக்சாகோரசு (Anaxagore), டெமாக்கிரிட்டசு (Democrite), எபிக்கூரசு (Epicure) போன்றவர்களிடமும் காணப்படுவதாக அலெய்ன் டானியலு (Alain Danielou) என்ற பிரெஞ்சு பாதிரியார் தனது இந்திய வரலாறு (Histoire de l'Inde) என்ற நூலில் கூறுகிறார். உரோம வரலாற்றாசிரியர் சுடிராபோ (Strabo), கிரேக்க அறிஞர் பித்தகோரசு இந்தியாவிற்கு வந்து ஏழிசையைக் கற்றுச் சென்றார் என்கிறார். டெமாக்கிரட்டசு, எம்ஃபிடாக்கிள்சு, பித்தகோரசு முதலான கிரேக்க அறிஞர்கள் தமிழ்நாட்டிற்கு வந்து சென்றே தம் கோட்பாடுகளை உருவாக்கிக் கொண்டனர் என்கிறார் முனைவர் க. நெடுஞ்செழியன். ஆகவே தொல்கபிலரின் எண்ணியம் 2500 ஆண்டுகளுக்கு முன்பே ஒரு உலகப் புகழ்பெற்ற பொருள்முதல்வாத மெய்யியல் பள்ளியாக இருந்துள்ளது.

சாங்கியம் எனப்படும் எண்ணியம்: தமிழ் மரபில் இருந்த எண்ணையும் எழுத்தையும் பற்றிய விளக்கங்களும், எண் (கணிதம்) கோட்பாட்டை அடியொற்றி உருவான அறிவியலும் தான் எண்ணியமாக உருவானது. தமிழ் வானியலார் பயன்படுத்திய விழுவன் குச்சிக்கு (Gnomon) இன்னொரு பெயர் சங்கு. சங்கு என்பதும் எண் குறித்த அறிவியலையே குறிக்கும். சங்கு + இயல் = சங்கியம். சமற்கிருதம் முதல் எழுத்தை நீட்டி ஒலிக்கும் என்பதால் அது சாங்கியம் என ஆனது. ஆகவே சாங்கியம் என்பதும் தமிழ்ச்சொல் தான். எண்ணிய நூலின் பெரும்பகுதி அழிந்துவிட்டது. சமற்கிருத நூல்களில், எண்ணியத்தின் எண்களைப் பற்றிய அடிப்படைக்கூறு அறவே இல்லை எனவும் உலகத் தோற்றம் குறித்த நுண்பொருள் வடிவிலான மூலப்பகுதி என்ற ஒரு சிறுபாடம் மட்டுமே சமயம் சார்ந்த பரபக்கவாதமாகக் கிடைத்துள்ளது எனவும் அதன் எண்கணிதம், வடிவியல், இயற்கணிதம், வானவியல், அணுவியலும்-அண்டவியலும், இசைக்கணிதம், கணியம் போன்றவை அனைத்தும் இல்லாது போயின எனவும் குணா கூறுகிறார்.

எண்ணியம் குறித்து வடமொழியில் சாங்கிய காரிகை, சாங்கிய சூத்திரம் போன்ற பல நூல்கள் கிடைத்துள்ள போதிலும் அவை அனைத்தும் எண்ணியத்தை ஆன்மீகமாக மாற்றும் நோக்கம் கொண்டவை. சரக சம்கிதை (தமிழ்வழிநூல்) என்ற மருத்துவ நூலும், மகாபாரதமும், பிரம்ம சூத்திரமும், அதற்கு உரை எழுதிய சங்கரர், இராமானுசர் போன்றவர்களின் உரைநூல்களும் தான் மூல எண்ணியத்தின் அந்த ஒரு சிறு கூறு குறித்த சில உண்மைகளைப் பேசியுள்ளன. இன்று பல உலகப் புகழ்பெற்ற தத்துவ அறிஞர்களும், தேவிபிரசாத் சட்டோபாத்தியாயா (உலகாயதம் நூலில்) போன்றவர்களும் சாங்கியம் குறித்து விரிவாக ஆய்வு செய்துள்ளனர். தமிழில் க. நெடுஞ்செழியன், குணா, வானமாமலை போன்றோர் எண்ணியம் குறித்து ஆய்வு செய்துள்ளனர். ‘அணுவியல் (Theory of Atom), அண்டவியல் (Theory of the Origin of Universe), திரிவாக்கம் (Theory of Evolution), இன்பவியல் (Theory of Hedonism) ஆகிய நான்கு அடிப்படைகளையும் கொண்டதுதான் எண்ணியம் எனவும் அவற்றைத் தருக்கவியல் அடிப்படையில் எண்ணியம் நிறுவியது’ எனவும் கூறுகிறார் நெடுஞ்செழியன்.

‘மூல எண்ணியத்தின் பொருள்முதல்வாதக் கண்ணோட்டம் இந்தியத் தத்துவ வரலாற்றில் ஈடிணையற்ற சிறப்பைத் தந்தது எனவும் இதன் காரணமாகத்தான் நமது தத்துவப் பாரம்பரியத்திற்கு ஆக்கபூர்வமான அறிவியலுக்கான அடிப்படைக் கருத்துக்களை சாங்கியத்தால் வழங்க முடிந்தது எனவும் இவற்றில் மிக முக்கியமானவை பொருள் பற்றிய கோட்பாடு, காரணகாரியக் கொள்கை, அறிவுக்கொள்கை, பரிணாமக் கொள்கை ஆகியன எனவும், உலகத் தத்துவ வரலாற்றில் ஆதிப் பழமையானதும் நன்கு திட்டமிட்டு வகுக்கப்பட்டதுமான நாத்திகத்தின் பிரதிநிதியாக மட்டும் எண்ணியம் விளங்கிடவில்லை, அதன் நாத்திகம் மிகத் தெளிவான அறிவியல் கண்ணோட்டத்தின் முன் மாதிரியால் அமையப்பெற்றது’ எனவும் கூறுகிறார் சட்டோபாத்தியாயா. மேலும் “எண்ணியத்தின் மூலப்படிவம் சமரசமற்ற கடவுள் மறுப்பும், பொருள்முதல்வாதமும் ஆகும். கடவுளற்ற ஆதிமூலப் பொருள் தத்துவம் என்றே எண்ணியம் நீண்டகாலமாக அழைக்கப்பட்டு வந்தது. இக்காரணத்தால்தான் அறிவியல் முன்னேற்றத்திற்கான சிந்தனை மரபாக எண்ணியம் இருக்க முடிந்தது. பருப்பொருள் கோட்பாடு; வினைக்கும் விளைபயனுக்குமான காரணத் தொடர்பு; மெய்யறிவு; பரிணாம முறை முதலியன எண்ணியக்கோட்பாட்டின் முக்கியமான கூறுகள்” என்கிறார்.

‘உலகினுடைய ஒழுங்கமைதியுடன் கூடிய படிமுறைச் செயல்பாடுகளை ஆழ்ந்து நோக்கி, அதற்கான தெளிவான விளக்கத்தைக் கூறியதால், இந்தியச் சிந்தனை மரபில் எண்ணியம் தனித்தன்மையுடன் விளங்குகிறது. எண்ணியத் தத்துவம் என்பது மெய்யறிவுச் சிந்தனை (METAPHYSICAL) மட்டுமல்ல. பிரபஞ்சத்தின் ஆற்றல்களை மாற்றுதலும், அழித்தலும், திரட்டலும் பற்றிய அறிவியல் அடிப்படையிலான விளக்கமும் ஆகும்...., இருத்தலைக் கண்ணுற்ற பின்பே கருத்து உருவாகிறது என்ற நவீனகாலப் பொருள்முதல்வாதச் சிந்தனையோடு கபிலரின் கோட்பாடுகள் ஒத்துப்போகின்றன’ எனவும் கூறுகிறார் பசாசு.

எண்ணியத்தின் சில சிறப்புக் கருத்தியல்கள்: அண்டம் பற்றிய எண்ணிய மெய்யியலின் கருத்தியல் ஒரு எளிமையான, மிக ஆழ்ந்த, தர்க்கபூர்வமான, பகுத்தறிவும் காரணகாரியக் கொள்கையும் கொண்ட ஒரு நீண்டகால மூலச்சிறப்புள்ள அறிவியல் சிந்தனை மரபால் உருவானது.

1. முதலும் இல்லை முடிவும் இல்லை: “இல்லாத ஒன்றிலிருந்து எதுவுமே உருவாகாது என்பதே எண்ணியத்தின் ஆதாரக்கொள்கை. இல்லாததை உள்ளதாக்க முடியாது, உள்ளதை முற்றிலும் இல்லாததாக்க முடியாது. ஊழி ஊழிக்காலமாய் இருந்துவரும் உலகத்தை உருவாக்குவதற்கு யாரும் தேவைப்படவில்லை. அதற்கு முதலும் இல்லை முடிவும் இல்லை என்பதனால் இல்லாததிலிருந்து ஒன்று உருவாகும் சாத்தியமில்லை என்பது மெய்யாகிறது” என எண்ணியம் கூறுகிறது

2. காரணகாரியக்கொள்கை: இக்கொள்கையின் மூலம்தான் உலகின் இறுதி உண்மையை அறிய முடியும் என எண்ணியம் கருதியது. இந்த உலகம் பொருளால் ஆனது என்பதால், இந்த உலகத்திற்கான முதற்காரணம் என்பதும் பொருளால்தான் ஆகியிருக்க முடியும். ஆகவே இந்த உலகத்திற்கு முதற் காரணமான ஆதிமூலப்பொருளும் ஒரு பொருள் தான் என்பதே இக்கொள்கை மூலம் எண்ணியம் வந்தடைந்த முடிவாகும்.

3. ஆதிமூலப்பொருள்: இதற்கு எண்ணியம், “எதுவும் உருவாகும் முன்பே இருந்தது எனவும், ஆதிமூலமாகிய முதல்நிலைப்பொருளில் இருந்து தான் நமது அண்டமும் அதில் உள்ள பொருட்களும் தோன்றின எனவும் இறுதியில் இந்த ஆதிமூலமாகிய முதல்நிலைப்பொருளுக்குள் இந்த எல்லாப் பொருட்களும் கலந்து ஒன்றிணைந்து விடும் எனவும் இந்த ஆதிமூலப்பொருள் என்றென்றும் இருந்து கொண்டிருக்கும் எனவும் அதற்கு தொடக்கமோ முடிவோ இல்லை எனவும் கூறுகிறது.

4. இயக்கமும் பரிணாமும்: மனிதகுலச் சிந்தனை வரலாற்றில் மிகப்பண்டைய காலத்தில் பொருளின் நிரந்தரத்தன்மையையும், அது சதா மாறிக்கொண்டே இருக்கிறது என்பதையும் கூறியதன் மூலம் எண்ணியத் தத்துவவாதிகள் பெருமை படைத்தவர்கள் ஆனார்கள் என்கிறார் ‘செர்பாட்சுகி’. “பரிணாமக் கோட்பாடு (THEORY OF EVOLUTION) அடிப்படையிலேயே, உலகத் தோற்றம் பற்றிய கபிலரின் கருத்துக்கள் அமைந்துள்ளன” என்கிறார் பிரேம்நாத் பசாசு.

5. வெளி காலம் இயக்கம்: கபிலரால் தோற்றுவிக்கப்பட்ட எண்ணியத் தத்துவஞானக் கோட்பாடு உலகத்தை ஒரு பருப்பொருளாக, ஒரு ஆதிமூலப் பொருளிலிருந்து படிப்படியாக வளர்ச்சி பெற்றதாகக் கருதியது. ‘இயக்கம், வெளி, காலம் ஆகியவை பருப்பொருளின் கூறுகள், அவை பருப்பொருளிலிருந்து பிரிக்கப்பட முடியாதவை’ என்ற கருத்தை எண்ணியச் சிந்தனை மரபு மொழிந்தது எனக் கூறுகிறார் திரு. வி. கிரபிவின். மேலும் அவர் இக்கருத்து ஒரு மூலச்சிறப்புள்ள சாதனை என்கிறார்.

6. இன்மை: பொருளின் ஏழாவது பொருள் அல்லது பண்பு என்பது இன்மை எனும் இல்பொருள். இங்கு இன்மை என்பது ஒரு பொருள், அப்பொருளாக உருவாவதற்கு முன் இருந்த நிலையைக் குறிக்கிறது. சான்றாக, ஒரு செடியை எடுத்துக் கொண்டால், அது தோன்றுவதற்கு முன் அது ஒரு விதையாக இருந்தது. செடியாக இருப்பதற்கு முன் இருந்த விதை தான் இங்கு இன்மை ஆகும். ஒன்றிலிருந்து ஒன்று உருவாகும் திரிவாக்கத்திற்குக் (பரிணாமம்) காரணமாய் இருப்பது எதுவோ அதுவே இன்மை.

7. உலக அமைப்பு: “அறிவுக்குட்பட்ட காரண காரியத்துடனான விதிகளுக்குக் கட்டுப்பட்டு இயங்கும் காட்சியுலகு பற்றியே எண்ணியம் பேசுகிறது. காரண காரியத்தோடும்

மேன்மையானதோர் அறிவு வளர்ச்சியோடும் கூடியதே உலக அமைப்பு என எண்ணியம் போதிக்கிறது. தனக்கென ஒதுக்கப்பட்ட வினைகளை ஆற்றுவது, தனக்கென ஒரு தகவு, தனக்கென ஒரு செயல்நோக்கம் என்றில்லாத உலகின் உறுப்புகளே இல்லை. இவ்வுறுப்புகள் தங்களுக்கென வரையறை செய்யப்பட்டவற்றை உருவாக்கம் செய்வதற்கான வழிமுறைகளைத் துல்லியமாகத் தேர்ந்து கொள்வது சாதாரண நடைமுறையாக இருக்கிறது. காலந்தவறிய ஒழுங்கற்ற செயல்பாடுகள் என்பதே இல்லை. அங்கு ஒழுங்கமைதி உள்ளது. வரையறை உள்ளது. என்ன வினையாற்றவேண்டும் என்ற குறிப்பு உள்ளது. தேர்ந்த அமைப்பாகச் செயல்படுகிறது. தானே உருவாகி பரிணாம முறையில் தானே வளர்ச்சியடைந்தது என்றுதான் உலகத்தைப் பார்க்கவேண்டும். உலகத் தோற்றத்திற்கும், அதன்வளர்ச்சிக்கும் எந்தவிதமான மேலுலக ஆற்றலும் காரணமல்ல. அது தொடர்ந்து இயங்கும் அமைப்பு. அது முதலும் முடிவுமற்ற, விரிந்து பரந்த நடைமுறை. நீடித்த தன்மையுள்ளதாகவும், அறிவிற்குகந்ததாகவும், என்றென்றைக்கும் பின்னோக்கிச் செல்லாதவாறும், பரிணாம முறையில் முன்னோக்கிச் செல்லும் வகையிலும், படைக்கப்படாத ஒரு படைப்பினால் அனைத்தும் படைக்கப்பட்டிருக்கிறது" என்பதே உலகம் பற்றிய எண்ணியப் பார்வை எனக்கூறுகிறார் பெர்னார்டு.

இவை போன்ற பல நவீன அறிவியல் கருத்துகளை அன்றே எண்ணியம் கூறிச் சென்றுள்ளது. மேலும் உலகம் முழுவதுமிருந்த பொருள்முதல்வாதக் கருத்தியல்களுக்கு மூலமாக எண்ணிய மெய்யியல் இருந்துள்ளது. ஆதலால் தொல்கபிலர் மார்க்சியத்திற்கும் முன்னோடியாக ஆகிறார்.

### வடமரபும் தமிழ்மரபும்:

1. தமிழ் மரபுப்படி நிலம், நீர், தீ, வளி, வெளி ஆகிய ஐம்பூதங்கள் உண்டு. ஆனால் வட இந்திய மரபில் வெளி போக நான்கு பூதங்கள் மட்டுமே உண்டு. இப்பேரண்டத்தின் அடிப்படையாக இருக்கும் முதற்பொருள் என்பது வெளி, காலம் (Time & Space) ஆகியவற்றின் சேர்க்கை என தமிழ் மரபு கூறியது. வெளி குறித்தப் புரிதல் இன்மையால் வடமரபில் அது நீக்கப்பட்டது.
2. தமிழ் மரபுப்படி ஏழு பொருள்கள் உண்டு. வடமரபுப்படி இன்மை போக ஆறு பொருள்கள் மட்டுமே உண்டு. ஒரு பொருளிலிருந்து இன்னொரு பொருளாக மாறும் திரிவாக்கத்தையும் (பரிணாமம்), இயங்கியலையும் வெளிப்படுத்தும் ஒரு கோட்பாடாக தமிழ் மரபில் 'இன்மை' இருந்தது. இன்மை குறித்தப் புரிதல் இன்மையால் வட மரபில் அது நீக்கப்பட்டது.
3. தமிழ் மரபுப்படி எண்ணியம் 24 கூறுகளைக் கொண்டது. வட மரபுப்படி புருடனையும் சேர்த்து 25 கூறுகள் உண்டு. அறிவியல் அடிப்படையற்ற புருடன் தமிழ் மரபில் இருக்கவில்லை. ஆனால் எண்ணியத்தை வேதச் சார்பானதாக மாற்ற வடமரபில் புருடன் சேர்க்கப்பட்டது.
4. தமிழ் மரபுப்படி மனித வாழ்வின் அடிப்படைகள் என்பன அறம், பொருள், இன்பம் ஆகிய மூன்று மட்டுமே. ஆனால் வடமரபு வேதச்சார்பானது என்பதால் இந்த மூன்றுடன் வீடு சேர்க்கப்பட்டது.
5. தமிழ் மரபுப்படி நூலுக்கான தந்திர உத்திகள் 32. தமிழ் மரபின் நூலுக்கான உத்திகளை நகலெடுத்த வடமரபு அதனை பேச்சுக் கலைக்கானதாக மாற்றி 36 உத்திகள் என்றது. புதிய உத்திகள் நாலும் 32க்குள் அடங்கும்.

தமிழ்ச் சிந்தனை மரபின் அறிவியல் அடிப்படையை வடமரபு புரிந்து கொள்ளாததால் வெளி, இன்மை முதலியன நீக்கப்பட்டன. புருடன், வீடு முதலியன சேர்க்கப்பட்டன. தமிழ்ச் சிந்தனை மரபிலிருந்துதான் வட மரபு உருவாகியது என்பதை இவை உறுதிசெய்கின்றன. கருத்துமுதல்வாத வேதியக் கருத்தியலைக் கொண்ட வடஇந்தியாவில், அறிவியல் அடிப்படையைக் கொண்ட எண்ணியம் உருவாக முடியாது.

தொல்கபிலர் ஒரு தமிழர்: மெய்யியல் அறிஞர்கள் பலர் எண்ணியம், ஆரியர் அல்லாதவருக்கு உரியது என்கின்றனர். சான்றாக, "பார்ப்பனர்கள், பார்ப்பனத்தன்மை ஆகியவற்றின் செல்வாக்கும் பாதிப்பும் மிகக் குறைவாக இருந்த இந்தியப் பகுதிகளில்தான் முதல்முதலாக நம் வாழ்வு என்பது நமக்குப் புரியாத புதிராய் இருப்பதை பகுத்தறிவு கொண்டு விடைதேடும் முயற்சி செய்யப்பட்டது என்பதைப் புரிந்துகொண்டால்தான் எண்ணியத்தின் மூலத்தொடக்கத்தை விளங்கிக் கொள்ள முடியும். எண்ணியம் சாராம்சத்தில் நாத்திகமானது மட்டுமில்லை, வேதத்திற்கு விரோதமானது... அதன் உள்ளடக்கம்

வேதச் சார்புடையதன்று. பார்ப்பனர்களின் சம்பிரதாயத்திற்கும், மரபுக்கும், ஆட்படாமல் இருப்பது” எனக் கார்பே கூறுவதாக முனைவர் நெடுஞ்செழியன் கூறுகிறார். தொல்கபிலரின் ஆறு பாடல்கள் சங்க இலக்கியத்தில் உள்ளன எனவும், எண்ணியத்தின் மூலச்சுவடுகள் அனைத்தும் தமிழின் தொல்காப்பியத்திலும், திருக்குறளிலும் மட்டுமே உள்ளன எனவும் இவைகளின் காரணமாக, கார்பே குறிப்பிடும் அந்த இந்தியப் பிரதேசம் தமிழ்நாடு தான் என்பதால் எண்ணியத்தின் மூலவரான தொல்கபிலர் தமிழர்தான் எனவும் உறுதி செய்கிறார் நெடுஞ்செழியன். தொல்கபிலர் தோன்றுவதற்கான பின்புலம் பழந்தமிழ்நாட்டில் தான் இருந்தது என்பதை எமது ஆய்வுகள் உறுதி செய்கின்றன.

தொல்கபிலரும் பழந்தமிழக நகர அரசுகளும்: மகாபாரதத்திலேயே சாங்கியம் மிகப் பழமையானது எனவும், சாங்கியம் உபநிடதங்களுக்கு முந்தையது எனவும் சட்டோபாத்தியாய கூறுகிறார். உபநிடதங்களின் தொன்மை கி.மு. 7ஆம் நூற்றாண்டு என்பதால் அதற்கும் முந்தைய எண்ணியத்தின் காலம் கி.மு. 750 எனக் கணிக்கப்பட்டது. தொல்கபிலரின் ஆறு பாடல்கள் சங்க இலக்கியத்தில் உள்ளதால் சங்ககாலம் கி.மு. 750இல் தொடங்குகிறது. கி.மு. 1500 முதல் நகர அரசுகளைக் கொண்டிருந்த தமிழரசுகள் கி.மு. 50இல் பேரரசுகளாக ஆகின்றன. ஆகவே தமிழக நகர அரசுகள் 1000 வருடங்களுக்கும் மேலாக இருந்து வந்துள்ளன. கி.மு. 4000க்கு முன் மெசபடோமியா பகுதியில் தோன்றிய சுமேரிய நகர அரசுகளையும் அதன் பின் அங்கு உருவான அக்கேடியப்பேரரசு, பாபிலோனியப் பேரரசு, அசிரியப் பேரரசு, பாரசீகப்பேரரசு, பார்த்தியப்பேரரசு போன்றவைகளையும் விரிவாக ஆய்வு செய்த தொல்லியலாளர் கார்டன் சைல்டு (V.Gordon Childe), சுமேரிய நகர அரசுகள் என்பன அதன்பின் வந்த பேரரசுகளை விட மிகச்சிறந்தனவாக இருந்துள்ளன என உறுதி செய்துள்ளார். கிரேக்க நகர அரசுகளையும், உரோமப் பேரரசையும் ஒப்பிடும் பொழுதும் பேரரசுகளைவிட நகர அரசுகள் மிகச்சிறந்தன என்பது உறுதியாகியுள்ளது.

1000 ஆண்டு கால தமிழக நகர அரசுகளையும், 600 ஆண்டுகால மகதப் பேரரசையும் ஒப்பிடும் பொழுதும், பழந்தமிழ்ச் சமூகம், கலை, இலக்கியம், அரசியல், பொருளாதாரம், தொழில், வணிகம் போன்ற பலவற்றிலும் மகதப் பேரரசைவிட மிக முன்னேறிய சமூகமாகவும், உலகின் ஒரு முன்னணிச் சமூகமாகவும் இருந்துள்ளது என்பதை ‘பழந்தமிழ்ச் சமுதாயமும் வரலாறும்’ என்ற ஆசிரியரது நூல் பல்வேறு சான்றுகளுடன் உறுதி செய்துள்ளது. ஆகவே தொல்கபிலர் பழந்தமிழ் நாட்டில் தோன்றிய ஒரு தமிழர். பழந்தமிழக நகர அரசுகளின் பேரளவான வளர்ச்சிக்கும், தமிழ்மொழி ஒரு தத்துவார்த்த அறிவியல் தொழில்நுட்ப மொழியாக உருவானதற்கும் வித்திட்டது தொல்கபிலரின் எண்ணிய மெய்யியலே என்பதால், தொல்கபிலர் தமிழ் அறிவு மரபின் தந்தை ஆகிறார்.

**சான்று நூல்கள்:**


1. பழந்தமிழ்ச் சமுதாயமும் வரலாறும், கணியன்பாலன், NCBH வெளியீடு, 2023, இரு புத்தகங்கள், 1150 பக்கங்கள்.
2. மூலச்சிறப்புள்ள தமிழ்ச் சிந்தனை மரபு, கணியன்பாலன், தமிழினி, 2018.
3. தொல்கபிலர் – தமிழ் அறிவு மரபின் தந்தை, கணியன் பாலன், தொல்கபிலர் பதிப்பகம், 2024, 275 பக்கங்கள்.


●


**கட்டுரையாளர்: எழுத்தாளர், ஆய்வாளர்.**



**புத்தகங்கள் அச்சிட அற்புதத் தீர்வு**


**குறைந்த செலவு அதிகபட்ச தரம்**

அதிகபட்ச தரத்தில் மிகக்குறைந்த செலவில் புத்தகங்கள் அச்சிடுவதற்கு ப்ரிண்ட் ஆன் டிமாண்ட் (PRINT ON DEMAND) முறை ஒரு வரப்பிரசாதமாகும். ப்ரிண்ட் ஆன் டிமாண்ட் முறையில் நேர்த்தியான தாள், அச்சு மற்றும் பைண்டிங்குடன் மிகக்குறைந்த விலையில், தரமாக அச்சிட்டுத் தருவதற்கு நாங்கள் தயாராக இருக்கிறோம்.

**REAL IMPACT SOLUTIONS, CHENNAI**

தொடர்பு கொள்ள

**98412 93503**




# இறையன்பு ஓராண்டு உரைகள் நிகழ்த்தும் கட்டமைப்பும் கட்டுடைப்பும்

தொடர்பு என்பது சமூகத்தின் ஆணிவேர். புதுப்புதுப் படைப்புகள் மற்றும் உறவுகளின் இணைவுக்கு அடிப்படையாக அமைவது தொடர்பு. உணவு, உடை, உறைவிடம் இம்மூன்றுமே மனித வாழ்விற்கு அடிப்படையானது என்பதுபோல தொடர்பும் மிக மிக அடிப்படையானதாகும். தொடர்பு அடிப்படையானது மட்டுமல்ல, அது அவசியமானதுமாகும். இந்தத் தேவையைப் புரிந்து கொண்டே எண் யுகம், தகவல் தொடர்பு யுகம், ஊடக யுகம், கணினி யுகம் என்றெல்லாம் அழைக்கப்படும் அளவிற்குத் தினம் தினம் தொடர்பு ஊடகங்களின் பங்களிப்பும், வளர்ச்சியும் அதிகரித்துக் கொண்டே உள்ளன. அந்தத் தொடர்பில் பேச்சுக்கலைத் தொடர்பு இன்றியமையாததாக விளங்குகிறது.

### மொழித்திறன்கள்

கேட்டல், பேசுதல், வாசித்தல், எழுதுதல் ஆகிய நான்கும் மொழித்திறன்கள் ஆகும். கேட்டல், வாசித்தல் ஆகிய இரண்டும் கொள்திறன் என்றும், பேசுதல், எழுதுதல் ஆகிய இரண்டும் ஆக்கத்திறன்கள் என்றும் வகைப்படுத்தப்படுகின்றன.

### கேட்டல் திறன்

கேட்பதை அடிப்படையாகக் கொண்டே குழந்தை பேசத் தொடங்குகிறது. "நம் தகவல் தொடர்பு நேரத்தில் 9 சதவிகிதத்தை எழுதுவதற்கும், 16 சதவிகிதத்தை வாசிப்பதற்கும், 30 சதவிகிதத்தைப் பேசுவதற்கும், 45 சதவிகிதத்தைக் கவனிப்பதற்கும் செலவிடுகிறோம்" (இறையன்பு (2024), ப.425) என்கிற கூற்றின் அடிப்படையில் மொழித்திறன்களுள் முதன்மையானது கேட்டல் திறனே என்பதை நம்மால் உறுதிபடச் சொல்ல முடியும்.



முனைவர் ஜா.சலேத்

## வாசித்தல் திறன்

*வாசிப்புத்திறனும், எழுத்துத்திறனும் அது திட்டமிட்டுக் கற்பிக்கப்பட வேண்டிய ஆக்கத்திறன்களாகும். இந்த ஆக்கத்திறன்களை வளர்த்துக்கொள்ள வாசிப்பு இன்றியமையாதது. வாசித்தல் அன்றாட வழக்கமாகிறபோது கேட்டல் திறனுக்குப் பதிலாக வாசித்தல் திறனே அறிவாற்றலுக்கு மூலமாக அமைந்து விடுகிறது. தொடக்ககாலத்தில் வரிவடிவத்தை ஒலி வடிவமாக மாற்றுவதுதான் வாசிப்பு எனக் கருதப்பட்டது. பிறகு வரிவடிவத்தை ஒலி வடிவமாக மாற்றுவது மட்டும் வாசிப்பல்ல. பொருளறிந்து கருத்துணர்தல்தான் வாசிப்பு எனக் குறிக்கப்பட்டது.*

*அஃறிணை ஒவ்வொன்றும் தன் வாழ்க்கையைத் தொடங்குகிறது. மனிதர் மட்டும்தான் முந்தைய தலைமுறையில் இருந்து தொடர்கின்றனர். இதற்கு அடிப்படை நமது வரலாறு ஆவணப்படுத்தப்பட்டு நமக்குக் கிடைத்திருப்பதே என்றால் அது மிகையானதல்ல. முந்தைய தலைமுறையின் ஒவ்வொரு நகர்வும் வரலாறாகவும், இலக்கியமாகவும் எழுத்துக்களாகி கிடைத்திருப்பதே தமிழ் இனத்தின் தனித்துவமாகும்.*

*"கல் தோன்றி மண் தோன்றா காலத்தே வாளொடு முன்தோன்றிய மூத்தகுடி தமிழ்க்குடி!" என தமிழ் இனத்தைச் சொல்லத்தகும் உயர்வைத் தமிழுக்குத் தந்துள்ள,*

**வடவேங்கடம் தென்குமரி**

**ஆயிடைத் தமிழ் கூறும் நல்லுலகத்து**

*என்ற சிறப்புப்பாயிரத்துடன் தொடங்கும் தொல்காப்பியரின் தொல்காப்பியம்,*

**சொல்லுதல் யார்க்கும் எளிய அரியவாம்**

**சொல்லிய வண்ணம் செயல்**

*எனச் செயலினை இப்படித்தான் செய்யவேண்டும் என்பது உட்பட 1330 வாழ்க்கைத் தத்துவங்களைப் பொதிந்து வைத்துள்ள திருவள்ளுவரின் திருக்குறள்,*

*ஒருவன் முயற்சி ஏதும் செய்து பொருளை ஈட்டாமல் முந்தைய தலைமுறை சேர்த்து வைத்துள்ள சொத்தைச் சிறுக சிறுக அழித்துக் கொண்டிருப்பானாயின் அதுவே அவனுக்குச் சீரழிவாகும் எனச்சொல்லும் தேடாத அழிக்கின் பாடாய் முடியும் என்பது போன்ற வாழ்க்கை வழிமுறைகளை நெறியாக்கித் தந்த ஔவையார் அருளிய கொன்றைவேந்தன்,*

*புகழ், கல்வி, வலி, வெற்றி, நன்மக்கள், பொன், நெல், நல்லூழ், நுகர்ச்சி, அறிவு, அழகு, பெருமை, இளமை, துணிவு, நோயின்மை, வாழ்நாள் எனப் பதினாறு பேறுகளை வரையறுத்த வீரமாமுனிவரின் சதுரகராதி,*

*சரித்திரத் தேர்ச்சிகொள், சாவதற்கு அஞ்சேல், சிதையா நெஞ்சுகொள், சீறுவோர்ச் சீறு, சுமையினுக்கு இளைத்திடேல், சூரரைப் போற்று, செய்வது துணிந்து செய், சேர்க்கை அழியேல், சைகையில் பொருளுணர், சொல்வது தெளிந்து சொல், சோதிடந் தனையிகழ், சௌமியம் தவறேல் என வேங்கைக்குரிய வேட்கையோடும், வேழத்திற்குரிய மிரட்சியோடும் புதிய தமிழோடு பிறந்து, புதுக்கவிதையில் சிறந்து, புரட்சி எண்ணங்களோடு புரண்டு தம் கவித்திறத்தால் காலமெல்லாம் இறவா புகழோடு நிற்கிற முண்டாசுக் கவிஞன் பாரதியின் கவிதைகள்,*

**இனிமைத் தமிழ் மொழி எமது - எமக்**

**கின்பந் தரும்படி வாய்த்தநல் அமுது!**

**கனியைப் பிழிந்திட்ட சாறு -எங்கள்**

**கதியில் உயர்ந்திட யாம் பெற்ற பேறு!**

**தனிமைச் சுவையுள்ள சொல்லை - எங்கள்**

**தமிழினும் வேறெங்கும் யாங்கண்ட தில்லை**

*என்கிற புரட்சிக்கவிஞர் பாரதிதாசனின் கவிதைகள்,*

**எழுதியதெல்லாம்**

**மொழிபெயர்ப்புத்தான்.**

**இளைஞர் விழிகளில்**

**எரியும் சுடர்களையும்,**

**போராடுவோரின்**

**நெற்றிச்சுழிப்புகளையும்**

**இதுவரை கவிதையென்று**

**மொழிபெயர்த்திருக்கிறேன்**

*என நெருப்புக் கக்கும் பாவலர் இன்குலாப்பின் கவிதைகள்,*

**என் வீட்டு வாசலில் ஒரு பூம்பூம்மாட்டுக்காரன்.**

**அவன் சொல்வதற்கெல்லாம்**

**அந்த மாடு தலையாட்டிக்கொண்டிருந்தது**

**மனிதனைப் போல!**

**ஒரு கம்பீரமான யானை**

**தெருவில் தன் துதிக்கையை நீட்டிப்**

**பிச்சை வாங்கிக் கொண்டிருந்தது**

**மனிதனைப் போல!**

*என ஆலாபனை சொல்லும் கவிக்கோ அப்துல்ரகுமானின் கவிதைகள்,*

**நொறுக்குவான் பண்ணையாரை**

**எல்லாக் கோபங்களோடும்**

**சுடுகாட்டில்**

*எனக் கோபம் கொப்பளிக்கும் பாவலர் அறிவுமதியின் கவிதைகள் என வரலாறாகவும், இலக்கியமாகவும் நமது மொழியின் படைப்புகள், அறிவுரைகள், அறச்சினங்கள், பதிவுகள் நமக்குக் கிடைத்திருப்பது பெரும்பேறு.*

**பேசுதல் திறன்**

**உண்மை, வெறும் புகழ்ச்சியில்லை**

**ஊமையராய்ச் செவிடர்களாய்க் குருடர்களாய்**

**வாழ்கின்றோம், ஒரு சொற் கேளீர்!**

**சேமமுற வேண்டுமெனில் தெருவெல்லாம்**

**தமிழ் முழக்கம் செழிக்கச் செய்வீர்!**

*எனத் தமிழ் முழக்கம் தெருவெல்லாம் கேட்க அழைப்பு விடுக்கும் பாரதியார் உரத்துக் கூறுகிறார். கேட்பதை அடிப்படையாகக் கொண்டே குழந்தை பேசத் தொடங்கிவிடுகின்றனர் என்பது தொடர்புக்கான மொழியுடனே நின்றுவிடுகிறது. தொடர்பு மனித மாண்புக்காக என்கிற கோட்பாட்டைச் செயலாக்க, என்ன பேசுவது? எப்படி பேசுவது? எனத் தொடங்கி தொல்காப்பியர் சுட்டும் அவையல் கிளவியை உள்வாங்கி, தயாரித்துப் பேசுவது தனிக்கலையாக உருப்பெற்று நிற்கிறது.*

## இறையன்பு ஓராண்டு உரைகள்

*தமிழ்நாடு அரசின் மேனாள் தலைமைச்செயலாளர் வெ.இறையன்பு, ஐ.ஏ.எஸ். அவர்களின் நூல்தாம். தம் ஓய்வுக்குப்பிறகு ஓராண்டு மூன்று மாதங்களில் தமிழ்நாட்டிலும், அயலகங்களிலும் பல அரங்குகளில் அவர் பேசிய 250க்கும் மேற்பட்ட உரைகளிலிருந்து 101 உரைகளைத் தொகுத்து, 1790 பக்கங்களில் இறையன்பு ஓராண்டு உரைகள் என்னும் நான்கு தொகுதிகள் அடங்கிய நூலை வெளியிட்டு ஒரு வரலாற்றுக் கடமையை நிறைவு செய்திருக்கிறது நியூ செஞ்சுரிபுக் ஹவுஸ் நிறுவனம்.*

*“ஓர் உரை என்பது வெறும் சொற்கள் மட்டும் அல்ல. அது பேசும்போது வெளிப்படும் உணர்ச்சியையும் உள்ளடக்கியது. இரண்டு சொற்களிடையே நாம் விடுகிற இடைவெளியையும் குரலில் தெறிக்கிற நையாண்டியையும் சேர்த்தே ஓர் உரை சிலாகிக்கப்படுகிறது. நல்ல உரை அது முடிந்த பிறகும் நம் காதுகளில் எதிரொலித்துக்கொண்டே இருக்கிறது” (இறையன்பு (2024), ப.303) என ஒரு உரைக்கு இலக்கணம் வகுத்தவர் இறையன்பு அவர்கள்.*

*அதுபோலவே, “சொற்பொழிவை முடிக்கும்போது மிக நேர்த்தியாக முடிக்க வேண்டும். நாம் சொல்கிற அந்த வரிகள் விருந்தின் இறுதியில் பரிமாறப்படுகிற பழக்கலவையைப் போல அமைய வேண்டும். அந்த கடைசி வாக்கியம் கவித்துவமாய், நம்பிக்கையாய், நெகிழ்ச்சியாய், மனத்தில் நிற்கும் விதமாய் அமைய வேண்டும்.” (இறையன்பு (2024), ப.572) என்று வகுப்பெடுத்தவர் இறையன்பு.*

*அவர் சொற்பொழிவுகளுக்கு வகுத்த இலக்கணங்களையே தம் உரையின் இலக்கணம் எனக்கொண்டு, அவற்றையும் தம் உரைகளின் நடுவமாக வைத்து, எடுத்தல், தொடுத்தல், முடித்தல் என்கிற உரை தயாரிப்பிலும், வெளிப்படுத்துவதிலும் கவனத்தைக் குவித்து சிறந்த உரைகளைத் தந்திருக்கிறார் இறையன்பு.*

*பள்ளிப் பருவத்தைக் கலைக்களஞ்சிய அனுபவமாக ஆக்கிக் கொள்ள அலைபாயாத மனம், கலையாத கவனம், நீடித்த வாசிப்பு, நிலையான பயிற்சி, தொடர்ந்த முயற்சி, தொலைந்த அயர்ச்சி என்கிற ஆறு கூறுகளையும் அகவயப்படுத்திக் கொள்ளச் சொல்லிக் கொடுக்கும் கருத்துக்கள் அடங்கிய முதல் உரையோடு தொடங்கும் இந்த நூல் “ஒவ்வொரு நாளையும் புதிய பிறப்பாக எண்ணி, புத்துணர்ச்சியுடன் படித்து, புத்துலகைப் படைக்க வேண்டும்” என்று இளையோருக்கு அழைப்பு விடுக்கும் 101 வது உரையோடு நிறைவு பெறுகிறது. பெரும்பாலும் இளையோரிடத்தில் பேசப்பட்ட உரையாக அமையப்பெற்றுள்ள இந்த நூல் இளையோருக்கான பல புரிதல்களை ஏற்படுத்துகிறது.*

## சமூகப்பொறுப்பு

*சுந்தரராமசாமி குறிப்பிட்ட புதுமைப்பித்தனின் செல்லம்மா கதையைத் தாம் பார்த்த தஞ்சாவூர் தம்பதியினரோடு பொருத்தி உண்மைக்காதலை அவர் எடுத்துச் சொல்லும்போது நம் கண்களும் பனிக்கின்றன. பாரதிதாசனின் குடும்ப விளக்கு மேற்கோளாகி மனத்தை அன்பால் ஆற்றுப்படுத்தும் பக்கத்திற்கு அடுத்த பக்கத்தில் ‘நிகோமேஷியன் எதிக்ஸ்’ என்ற நூலில் அரிஸ்டாட்டில் குறிப்பிடும் மூன்றுவகை நட்பை அனுபவச் சான்றுகளோடு புரிய வைக்கும்போது அவரின் பரந்த வாசிப்பு நம்மை மெய்சிலிர்க்க வைக்கிறது. சென்னை மாநிலக் கல்லூரியில் ஆற்றிய உரை மாநிலக் கல்லூரி வரலாற்றின் மணிமகுடம். அந்தக் கல்லூரியின் அத்துணை வரலாற்றையும் ஆய்ந்து அவர் சென்றிருப்பது ஒரு பேச்சாளர் தம் உரையை எப்படித் தயாரிக்க வேண்டும் என்பதற்கு வழிகாட்டுகிறது.*

இன்றைய இளைஞர்கள், அரசியல், பொருளாதார, கலை மற்றும் பண்பாட்டில் ஒருங்கிணைந்த வளர்ச்சி பெறவும், சமூகப்பற்றும், விழிப்புணர்வும் பெற்று, தலைமைத்துவமிக்க ஆளுமையாளர்களாக உருவாக, பல புரிதல்களைத் தம் உரைகளில் முன்மொழிந்துள்ளார். இவ்வாறு அவர் கட்டமைக்கும், கட்டுடைக்கும் கூறுகளுக்குச் சில சான்றுகள் மட்டும் கீழே தொகுத்துத் தரப்பட்டுள்ளன.

**கட்டமைத்தல் கூறுகள்**

- *குதிரைகள் பயந்தாங்கொள்ளிகளைத் தங்கள் மேல் சவாரி செய்ய அனுமதிப்பதேயில்லை. துணிச்சல் உள்ளவர்களைத்தான் தூக்கிக் கொண்டாடுகிறது. (இறையன்பு (2025), ப.7)*
- *உடலைச் சுறுசுறுப்பாக வைத்துக் கொள்வதும் ஆரோக்கியமாக வைத்துக்கொள்வதும் மிக முக்கியம். ஊட்டச்சத்துக்கள் உள்ள உணவைச் சாப்பிட வேண்டும். அயர்ச்சி ஏற்படாமல் இருப்பதற்கு உடற்பயிற்சி என்பது மிகவும் முக்கியம். (ப.10)*
- *சில நேரங்களில் மனிதர்களிடமிருந்து மட்டும் அல்ல, வாயற்றவற்றிடமிருந்து கற்றுக்கொள்ள வேண்டும் என்பதற்காகத்தான் உயர்திணை அல்லாத உயிர்களைப் பவணந்தி முனிவர் உவமையாக்கி இருக்கிறார். (ப.117)*
- *மனத்தில் எளிமை இருப்பவர்கள்தாம் பொருட்களையும் எளிமையாகவும் அனைவரும் பயன்படுத்தும்படியும் உருவாக்க முனைவார்கள் (ப.649)*
- *உண்மையாக வெற்றி பெற்றவர்களின் வாழ்க்கை ஒரு சிறந்த புத்தகம். அதில் ரகசியமில்லை. மந்தனமில்லை. கமுக்கமில்லை. ( ப.985)*
- *நாம் எதைச் செய்துகொண்டு இருக்கிறோமோ அதிலிருந்து மாறுபட்டதைச் செய்கிறபோதுதான் நமக்கு ஓய்வு கிடைத்ததாகப் பொருள் என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும். நாம் இதுநாள்வரை என்ன பணி செய்தோம் என்பதைத் திரும்பிப் பார்ப்பதுதான் ஓய்வு பெறுகிற காலம். (ப.681)*
- *நம்மிடம் இருக்கிற மூளை ஆற்றல் மிகுந்த மூளை. அதைப் படிப்பதனால்தான் நாம் தூண்ட முடியும் என்பதைப் புரிந்துகொள்ள முடியும் (ப.1081)*
- *நான் படித்திருக்கிறேன். குழந்தைகள் கெட்ட வார்த்தைகள் பேசுவதில்லை, கேட்ட வார்த்தைகளைத்தான் பேசுகிறார்கள் (ப.1357)*
- *கல்லூரி வாழ்க்கையில் உங்கள் திறன்கள் மெருகேற்றப்படுகின்றன. மேன்மையடைகின்றன. இரண்டு விதமான திறன்களை நீங்கள் கற்றுக்கொள்கிறீர்கள், முதலாது வாழ்க்கைத் திறன்கள், இரண்டாவது மென்திறன்கள் (ப.1457)*

**கட்டுடைத்தல் கூறுகள்**

- *கல்வி என்பது தேர்வுக்காக நடத்தப்படுகிற பயிற்சி அல்ல. அது வாழ்க்கைக்காக நாம் மேற்கொள்கிற முயற்சி (ப.6)*
- *மனிதன் சுயநலமானவன்தான். அதேநேத்தில், அவன் பொதுநலத்தோடு இருப்பதுதான் உச்சகட்ட சுயநலமாக இருக்க முடியும். (ப.21)*
- *நம் ஐந்து விரல்களும் சமமாக இருந்தால் நம் கைகளும் சிம்பன்சிபோலத்தான் இருந்திருக்க முடியும். வெவ்வேறு வடிவத்திலும், வெவ்வேறு நீளத்திலும் இருப்பதால்தான் விரல்கள் பயன்படுகின்றன. இந்த விரல்களால் காகிதத்தை மடக்க முடியும்; கணினியை இயக்க முடியும்; களைக்கொட்டைப் பயன்படுத்த முடியும்; கத்தியால் அறுக்க முடியும்; கவிதையை வடிக்க முடியும்; கைத்துப்பாக்கியை இயக்க முடியும்; காரை ஓட்ட முடியும்; காவியம் படைக்க முடியும்; கால்களைச் சொறிய முடியும். இத்தனைக்கும் இந்த விரல்கள் பயன்படுவதற்கு வெவ்வேறு நீளங்களாக இருப்பதுதான் காரணம். (ப.27)*
- *மனிதன் ஒருபோதும் பூரணத்துவம் அடைய முடியாது. இருக்கும்போதே ஒரு பொருளின் அருமையை உணர்வதே முதிர்ச்சி. (ப.49)*
- *இந்தியாவில் வேலை வாய்ப்புக்குப் பஞ்சமில்லை. வேலைக்கான அனைத்துத் தகுதிகளையும் பெற்ற இளைஞர்களுக்கான பஞ்சமே இன்று இருக்கிறது. (ப.446)*
- *எவன் ஒருவன் நிறைய வைத்திருக்கிறானோ, அவன் செல்வன் அல்லன். நிறையப் பெற்றிருப்பதாக திருப்தியில் தளும்புகிறவனே செல்வந்தன். (ப.485)*
- *பலர் ஓட்டைப்பானைகளாய் இருக்கிறார்கள். அவர்களது அமைதி அறியாமையால் வருவது. நிரம்பி வழிகிற பானைகள் ஞானத்தால் அமைதி காக்கிறார்கள். தன்னளவில் நிரம்பிய மகிழ்ச்சியில் வழிகிற அவர்களுடைய மௌனம் சுற்றி இருப்பவர்களையும் அமைதியாக ஆக்கி விடுகிறது. (ப.545)*
- *இசைக் கலைஞர்களுடைய சொந்த மத நம்பிக்கையையும், அவருடைய இசையையும் பிரித்துப் பார்க்க வேண்டும் (ப.763)*
- *இறுதிவரை ஒரு மனிதன் கற்றுக்கொண்டே இருக்க வேண்டியவனாக இருக்கிறபோது அதென்ன முன்னாள் மாணவர் ? (பக்கம், 967)*
- *எவ்வளவு பெரிய பேரரசுகள்கூட*

நிர்மூலமாகியிருக்கின்றன. ஆனால் சாக்ரடீசின் உரை நிலைத்து நிற்கிறது. (ப.1089)

- சமூகம் உங்களுக்கு ஓர் அடையாளத்தைத் திணித்திருக்கிறது. சமூகம் அப்படித்தான் செய்யும். சமூகத்தினுடைய வேலையே உங்களை ஒரு அடையாளத்திற்குள் திணித்துச் சுருக்கிவிடுவதுதான். அதைத்தவிர அதற்கு வேறொன்றும் தெரியாது. (ப.1149)

“ஒரு சமூகத் தொடர்பாளருக்கு அடிப்படைத் தகுதி அவர் பயின்ற கலைகளோ, வித்தைகளோ, ஏட்டறிவோ, எழுத்தறிவோ அல்ல! மாறாக, தாம் வாழும் சமுதாயத்தின் மீது கொண்டுள்ள பொறுப்புணர்வே ஒருவரைத் தொடர்பாளராக்குகிறது. (அ.சிரில், பரிமாணங்கள், 1999, ப.75) என மானுடவியல் அறிஞர் குறிப்பிடுவார். புதுப்புதுப் படைப்பாக்கங்களாக வெகுமக்களை நெருங்கி வரும் தொடர்பு ஊடகங்களின் இயங்குதளங்களைப் புரிய வைக்கும் சமூக விழிப்புணர்வுக் கல்வியில் நீண்ட அனுபவம் மிக்க இறையன்பு அவர்கள் விடுக்கும் கருத்துக்களை வாழ்க்கையின் அடிப்படையாக்குவது அவசியமாகிறது.

## தொகுப்புரை

இறையன்பு இ.ஆ.ப., முன் தயாரிப்பு, திட்டமிடல், சொல்ல வேண்டியவற்றைச் சொல்ல வேண்டியவர்களுக்குத் துணிச்சலாகச் சொல்லும் திறன், விமர்சனப் பார்வை எனப் பேச்சாளருக்கான திறனில் தனித்துவமாய் திகழ்கிறார். தொடர்பு என்பது அடிப்படைத்தேவை என்பதோடு நின்று விடாமல், அது உறவுக்கான செயல்பாடு. மனித உரிமைக்கான தளம் என்கிற அணுகுமுறையில் இவருடைய எழுத்துக்களும், பேச்சுகளும் இவரை ஒரு சமூகப் பொறுப்புமிக்கத் தொடர்பாளராக இன்றைய இளைஞர்களுக்கு அறிமுகப்படுத்துகிறது. இறையன்பு ஓராண்டு உரைகள் கட்டமைக்கும் பலத்தையும், கட்டுடைக்கும் பலவீனத்தையும் உள்வாங்கிக் கொள்ளும் இளைஞர்களால் பண்பட்ட சமூகத்தைக் கட்டமைக்க முடியும்.


## துணை நின்றவை


1. இறையன்பு, என்ன பேசுவது! எப்படி பேசுவது!, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட், சென்னை, 2024
2. இறையன்பு ஓராண்டு உரைகள், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட், சென்னை, 2025
3. அ.சிரில், பரிமாணங்கள், வைகறை பதிப்பகம், 1999


●


கட்டுரையாளர்: உதவிப் பேராசிரியர், தமிழாய்வுத்துறை,
தூய வளனார் கல்லூரி, திருச்சிராப்பள்ளி


## அஞ்சலி



பாவேந்தர் பாரதிதாசனியல் அறிஞர்,
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தின்
முன்னாள் இயக்குநர்,
நியூ செஞ்சுரி புக் ஹவுசின் மதிப்பிற்குரிய
நூலாசிரியர்களுள் ஒருவர்

**பேராசிரியர் முதுமுனைவர்**

# ச.சு.இளங்கோ

**(10.09.1944 – 19.06.2025)**

**ஐயா தமது 80ஆவது அகவையில்
இயற்கையடைந்தார்.**

இவர் தமது மாணவப் பருவத்தில் பேரறிஞர் அண்ணாவுடன் பழகியவர். தமிழக முன்னாள் முதல்வர் கலைஞர் மு.கருணாநிதி தலைமையில் சாதி மறுப்புத் திருமணம் செய்துகொண்டவர். இறுதிக்காலம்வரை தமது கொள்கையில் குன்றென நின்றவர். அன்னாருக்கு "நியூ செஞ்சுரியின் உங்கள் நூலகம்" தனது அஞ்சலியைத் தெரிவித்துக்கொள்கிறது.

# நியூ செஞ்சுரி புத்தக நிறுவனத்தின்
# இம்மாத வெளியீடாக...

ஆயுள் தண்டனை, பல்லாண்டு காலத் தண்டனை என்று கம்யூனிஸ்ட்டுகளின் இளமைக்காலம் அனைத்தையும் சிறைக் கம்பிகள் உறிஞ்சி எடுத்து இருக்கின்றன.

சிறைச்சாலைகளில் உள்ள ஒவ்வொரு செங்கல்லும், வாயிற் கதவுகளும், ஜன்னல் கம்பிகளும் கம்யூனிஸ்ட்டுகளின் தியாகத்தை எடுத்துக் கூறும்!

அந்தத் தியாகச் சீலர்கள் குறித்து இந்தச் சமூகம் அறிய வேண்டும். அவர்கள் ஏந்திய செங்கொடியை, தங்கள் தோள் மீது சாய்த்து இன்று நிமிர்ந்து நிற்கும் இளைய தலைமுறை அறிய வேண்டும்.

**– இரா.முத்தரசன்**
**மாநிலச் செயலாளர், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி**




(இரண்டு பாகங்கள்)

## உங்கள் நூலகம் சந்தாதாரர்களுக்கு ஒரு வேண்டுகோள்!



**உங்கள் நூலகம் சந்தாவினைப் புதுப்பிக்காதவர்கள் தொடர்ந்து உங்கள் நூலகம் இதழினைப் பெற புதுப்பித்துக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்**

**உங்கள் நூலகம்**
**நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்.,**
**41-பி, சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட்,**
**அம்பத்தூர், சென்னை - 600 050.**
**தொலைபேசி எண் : 044-26251968, 26258410**

**ஜூலை மாதத்துடன் முடிவடையும் சந்தாதாரர்களின் ரசீது எண்கள்**

| | | | | |
|---|---|---|---|---|
| 6809 | 8906 | 5829 | 2832 | 5420 |
| 2393 | 2723 | 7988 | 2684 | 3684 |
| 3102 | 3681 | 2831 | 5755 | 2686 |
| 8905 | 6653 | 2685 | 3682 | 2833 |

தனி இதழ் ₹ 45.00 / ஆண்டு சந்தா ₹ 540.00
மாணவர்களுக்கு ₹ 500.00, / ஆயுள் சந்தா ₹ 5400.00
அயல்நாடு (ஆண்டு சந்தா) ₹ 4050.00

*சந்தாத் தொகையை*
**New Century Reader's Sangam**
**Central Bank of India**
**Ambattur Branch, Chennai - 600 050**
**A/c.No. 1035249018**
**IFSC Code : CBIN0282161**
*என்ற வங்கிக் கணக்கில் செலுத்தலாம்.*

**கிளைகள்**

அம்பத்தூர் 044 - 2635 9906, ஸ்பென்ஸர் பிளாசா 044-28490027, மதுரை 0452 - 2344106, 4374106, திருநெல்வேலி 0462 - 2323990, 4210990, திண்டுக்கல் 0451-2432172, கோயம்புத்தூர் 0422 2380554, சேலம் 0427-2450817, ஈரோடு 0424-2256667, கிருஷ்ணகிரி 04343-234387, ஓசூர் 04344 - 245726, ஊட்டி 0423 - 2441743 திருச்சி 0431 - 2700885, தஞ்சாவூர் 04362-231371, புதுக்கோட்டை 04322-227773, விழுப்புரம் 04146-227800, பாண்டிச்சேரி 0413 2280101, வேலூர் 0416-2234495, நாகர்கோவில் 04652 - 234990.

# 2025 ஜூன் 1 அன்று நடைபெற்ற நியூ செஞ்சுரி புத்தக நி




சென்னை



வேலூர்



கோவை



ஈரோடு



மதுரை



சேலம்

## றுவனத்தின் 75ஆம் ஆண்டு தொடக்க விழா நிகழ்வுகள்



நாகர்கோவில்



திருநெல்வேலி




திருச்சி




திண்டுக்கல்




ஈரோடு



# பன்முகம் கொண்ட பா.வே.மாணிக்க நாயக்கர்

பா.வே.மாணிக்க நாயக்கர் – 1871ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 25ஆம் நாள் பாகல்பட்டியில் ஒரு ஜமீன் குடும்பத்தைச் சேர்ந்த வெங்கடசாமி நாயக்கர் - முத்தம்மையார்க்கும் மகனாகப் பிறந்தார். அவருக்குப் பன்னிரண்டு வயதிற்குள் இறப்பு ஏற்படலாம் என்றும் எச்சரிக்கையாக இருக்க வேண்டும் என்றும் சோதிடர் ஒருவர் கூறியதால் அவர் பள்ளிக்குச் செல்லாது வீட்டிலேயே பாடம் கற்றுக் கொடுக்கப்பட்டு அதன் பிறகு சேலத்தில் பள்ளியில் சேர்க்கப்பட்டார். பிறகு அவ்வூரிலேயே கல்லூரியில் முதுகலை (எம்.ஏ.) படித்தார். ஆரம்பத்தில் மருத்துவம் படிக்க விரும்பிய இவர், பிறகு சென்னை மாநில பொறியியல் கல்லூரியில் சேர்ந்தார். தேர்வில் முதன்மையாகத் தேறிப் பதிமூன்று பரிசுகளும், ஒரு தங்கப்பதக்கமும் பெற்றார். பி.இ.பட்டம் பெற்றவுடன் 1896ஆம் ஆண்டில் அரசாங்க உதவிப் பொறியாளரானார்.

**பன்முகம் கொண்டவர்**

அவருக்கு வீணை, புல்லாங்குழல் ஆகிய இசைக்கருவிகளை வாசிக்கத் தெரியும். மூச்சை அடக்கும் பயிற்சிகள் செய்வார். பகல் நேரத்தில் சூரியனின் நிலையைக் கொண்டும் இரவில் சந்திரனின் மீன்களின் நிலையைக் கொண்டும் சரியான மணியைக் கணக்கிட்டுச் சொல்வார். ஆடு, மாடு, குதிரை முதலியவற்றின் அசைவுகளைக் கொண்டு இது கத்தப் போகிறது. இது ஓடப்போகிறது. இது குதிக்கப் போகிறது என்று முன்கூட்டியே சொல்லி விடுவார்.

தமக்கு வரப்பெறும் கடிதங்களுக்கு உடனுக்குடன் மறுமொழி எழுதுவார். ஒவ்வொரு நாளும் பதினெட்டு மணிநேரம் வேலை செய்வார். அவருடைய இல்லத்தில் ஆயிரக்கணக்கான நூல்களடங்கிய நூல் நிலையமுண்டு.



டாக்டர் சு.நரேந்திரன்

நாயக்கருக்குத் தைலம்மாள், தாயாரம்மாள், வேதவல்லி என்று மூன்று மனைவியர். முதல் மனைவிக்கு மூன்று பெண்கள். இரண்டாம் மனைவிக்கு ஒரு பெண்ணும் ஓர் ஆணும் பிறந்தனர்.

நாயக்கர் பொறியியலோடு, நாராயண பரதேசி அடிகள் எனும் சித்த மருத்துவரிடம் பொன்னைப் புடம் வைத்து மருந்து செய்யும் முறையைக் கற்றுக் கொண்டார்.

## தனித்தமிழறிஞர்

நாயக்கரைப் பற்றி சுத்தானந்த பாரதி கூறுகையில், "இவரே மறைமலையடிகளின் தனித்தமிழ் இயக்கத்திற்குப் புரவலராக இருந்தவர். ஞாயிறுதோறும் புலவர்கள் நாயக்கர் அவர்களைக் கண்டு இலக்கியவுரையாடல் புரிவதுண்டு. திருச்சியில் 1919ஆம் ஆண்டு தமிழ்ப் புலவர் மாநாட்டை முன்னின்று நடத்தினார். இந்த மாநாட்டில் இன்றைய அரசின் தமிழ்த்தாய்ப் பாடல் என "நீராரும் கடலுடுத்த நிலமடந்தைக் கெழிலொழுகும்" என்ற பாடல் பாடப்பெற்றது. பிறகு சுத்தானந்த பாரதியால் தமிழ்மாலை படிக்கப்பட்டது.

**"தமிழகம் உலகத் தாயகம் ஆகுக.**
**தமிழ்மொழி உலகத் தாய்மொழி ஆகுக.**
**தமிழ் இனிதோங்குக தமிழ் உலகாகுக**
**தமிழ் இலகுக்கோர் தங்கக் கோயில்**
**தமிழ்ப்பணி நமது சலியா மூச்சாம்**
**அரசு நாட்டி ஆளுவோம் வாரீர்"**

இவ்வரிகளை நாயக்கர் இருமுறை படிக்கச் சொன்னார். இவருடைய பேச்சு புதிய மணி மொழியாயிருந்தது

## மூச்செல்லாம் முத்தமிழ்

மாணிக்க நாயக்கரின் பேச்செல்லாம் ஆராய்ச்சி. மூச்செல்லாம் முத்தமிழேயாம். கருத்தோற்றம், குழந்தை வளர்ச்சி, பூச்சி புழுக்கள், பறவை விலங்கு, விலங்குகளின் பான்மை, மீன்களின் வளர்ச்சி, மூளையின் பான்மை, பொறி நுணுக்கம் முதலியவற்றைப் பற்றி பேசுவார். தமிழ்ப் பல்கலைக்கழகம் ஒன்று விரைவாகக் கட்டாயமாகவும் நிறுவப்படவேண்டும் என்று வற்புறுத்துவார். அவரே மேட்டூர் அணைக்கு வரைமுறை வகுத்தார். செடிப் புணர்ச்சிகளால் கனிப்புதுமை செய்தார். மீன் ஆராய்ச்சி செய்தார். தமிழ்ப் பேரகராதிக்கு முன்னின்று ஆக்கமளித்தவர் அவரே.

நாயக்கர் வீட்டில் திருமால் வழிபாடு நடக்கும். ஆனால் நாயக்கர் மட்டும் சம்பந்தர் பதிகம் பாடி திருநீறு பூசுவார். சைவமே தொல் பெரும் சமயம் என்பார். கம்பன் கவிதையுடன், மில்ட்டனை ஒப்பிடுவார். ஆங்கிலத்தில் மிகத் தெளிவாகப் பேசுவார். தமிழில் உணர்ச்சி ததும்ப உரையாடுவார். பள்ளி மாணவராக இருந்த காலத்தில் தமக்கு உதவிய முனிச்சாமி நாயுடு என்பவருடைய படத்தை மாளிகையின் நடுவில் வைத்துப் போற்றி வந்தார்.

1912ஆம் ஆண்டு வழக்கியல் கல்வி பெறுவதற்காக, இங்கிலாந்து சென்றார். அங்கு காரைக் கட்டிட வேலைகளைப் பற்றி ஆராய்ச்சிகள் செய்தார். அப்போது நாயக்கர் பொறியியல் வேலையில் ஈடுபட்டிருந்தபோது கணக்குப் போடுவதில் அதிக நேரம் வீணாகிறது என்பதை அறிந்து, இதனைக் குறைக்க கணித வரைக் கட்டத்தை முதன்முதலாகக் கண்டுபிடித்தார். இது வேலையைச் சுருக்குவதற்கு மிகவும் சிறந்த கருவியாக அமைந்தது. இவ்வளவு புகழ்பெற்ற ஆய்வு மனப்பான்மை கொண்ட நாயக்கர் கலைச் சொற்களைப் பிறமொழி துணையின்றி ஆக்கமுடியும் என்பதை அறிந்து தொடர்ந்து பேசியும், எழுதியும் வந்தார்.

## தமிழ் அறிவியல் சொற்கள்

1927 ஆம் ஆண்டு ஏப்ரல் 27ஆம் நாள் இராயப்பேட்டை பாலசுப்பிரமணிய பக்த சன சபை ஆண்டு நிறைவு விழாவில் 'தமிழ் அறிவியற் சொற்கள்' என்ற பொருள் பற்றி நாயக்கர் பின்வருமாறு சொற்பொழிவாற்றினார்.

தமிழிலேயே அளவிறந்த சொற்கள் இருக்கின்றன. தமிழ் இயற்கை மொழி. செயற்கை மொழிகளை இயற்கை மொழியோடு சேர்ப்பதால் தமிழ்மொழி தனது இயற்கை வளமிழந்து இறக்கும் மொழியாகிவிடும். தமிழ்மொழி தமிழ்மொழியாகவே இருக்க வேண்டும்.

தமிழில் உயிர்ப்புச் செட்டு மிகுதியாகலான் தமிழ்மொழி பேசுவோர் நீண்ட ஆயுளுடையவராவர் என்பது அறிஞர் முடிபு. தமிழில் ஓரெழுத்து, ஈரெழுத்து, மூவெழுத்துச் சொற்கள் மிகுதியாக இருக்கின்றன.

தமிழில் ஓசைப் பாகுபாடு அமைந்திருப்பது போல் வேறெம்மொழியிலும் அமையவில்லை. பிறமொழிக் கலப்பில்லாமலே தமிழ் அறிவியல் சொற்களை அமைத்துக் கொள்ளமுடியும் என்று கூறினார்.

நாயக்கர் இதைத் தொடர்ந்து ஆராய்ச்சிக் கட்டுரைகள் காழி, சிவ.கண்ணுசாமியால் செந்தமிழ்ச் செல்வியில் வெளியிடப்பட்டன.

செம்மையாக வளர்ச்சியுற்ற பிறநாட்டு மொழிகள் ஒவ்வொன்றிலும் காணப்படும் வேர்ச்சொற்கள் ஒவ்வொன்றிற்கும் தமிழ்மொழியில் ஏற்ற வேர்ச்சொற்கள் இருக்கின்றன. எனவே பிறமொழிச் சொற்களை எடுத்தாண்டு தமிழின்

உயர்தனிப் பண்பைக் கெடுக்க வேண்டியதில்லை. அன்றியும் தமிழிலேயே ஆக்கப்படும் சொற்கள் எளிதில் பொருளுணர்த்துவனவாயும் தமிழ் மாணவர்கள் உணரவல்லனவாயும் இருக்கும். தமிழ்ச் சொற்களைக் கற்றுப் பொருள் தெரிதல் தமிழ் மாணவர்களுக்கு மிகவும் எளிதாகும்.

*Geometry* என்னும் சொல்லுக்கு நேர் பொருள் நிலத்தின் அளவைக் கணிப்பது என்பதாகும். ஆனால் வழக்காற்றில் அதுவரை வடிவுகளின் அளவையே குறிக்கிறது. எனவே அதனை ‘வடிவு அளவை நூல்’ எனக் கூறலாம்.

தமிழின் தொன்மையான நூலாகக் கருதப்படும் தொல்காப்பியத்தில் முதலீடில்லாத முப்பொருளைக் குறிக்குமிடங்களில் ‘கந்தழி’ என்ற சொல் எடுத்தாளப்படுகின்றது. கந்து+அழி எனப் பிரித்தால் எல்லையற்றது எனப் பொருள்படும்.

*Infinite* என்பதற்குக் கந்தழியென்பதே நேர் பொருளாகும். குறிப்பிட்ட காலத்தில் குறிப்பிட்ட தவணைகளில் திருப்பிக் கொடுக்கப்படும் கடன் இன்று ‘கந்துக் கடன்’ என்றே வழங்கப்படுகின்றது. எழுதப் பயன்படும் நீர்ப்பொருளுக்குத் தமிழில் ‘மை’ என்ற பெயர் வழங்குகின்றது. இஃது அறிவியலுக்கு ஏற்றவகையில் உண்டானதொரு சொல்லாகும். மை என்பதற்குப் பொடித்தல் என்பது வேர்ப்பொருள். அரிசியை மைய அரை என்பார்கள். ‘அவள் மையலானாள்’ என்றால் காதல் கொண்டாள் என்பது பொருள். அவளுடைய மனம் மைத்து இளகி நின்றது என்ற செயலைக் குறிக்கின்றது.

பொடித்தல் என்றதைக் குறிக்கும் ‘மை’ என்ற சொல் தமிழ் நன்மக்கள்பால் ‘இங்கி’ யைக் குறிக்க வழங்குகின்றது.

அறிவியலுக்கேற்றவாறு இனவியல்புகளை ஒரு சிறிதும் மறவாதபடி தமிழ் முன்னோர்கள் சொல்லமைப்பிலேயே புகுத்திவிட்டார்கள். மயில் என்ற அழகிற் சிறந்த பறவையிடம், வானவில்லின் நிறங்கள் அனைத்தையும் ஒருங்கே காண்கிறோம். செம்பு சேர்ந்த கலவைகளிலும் இந்நிறங்களைக் காண்கிறோம். மயில் என்று தமிழில் கூறினால் அது பன்னிறக் கலவையையே குறிக்கும். மயில் துத்தம் என்பது *Copper Sulphate*. அதிலும் பல நிறங்களைக் காணலாம். இங்கே மயில் என்பது பல நிறங்களையே குறித்து நின்றது. சிற்றூர்களில் ‘மயிலம்’ என்ற சொல் பல நிறங்களைக் குறித்து வழங்கப்பட்டு வருகின்றது. செப்புக் கிண்ணத்திலிருந்த நெய் மயிலமாய்ப் போயிற்று என்பது நிறம் மாறிற்று. பன்னிற முற்றது எனக் கூறுவதாகும்.

அறிவியல் சொற்களை அமைக்கும் போது மரபுச் சொற்களை யொழித்துச் சொல்லமைக்கக் கருதுவது கடினமாகும். மரபுச் சொற்களாய் அமைத்தவைகள் கூட அவ்வப் பொருள்களின் பண்மை இயன்றவரை விளக்குவதாய் இருத்தல் வேண்டும். குறித்த பொருளின் இயற்கைப் பண்பிற்கே நேர்மாறான பொருளைத் தெரிவிப்பதாக இருப்பின் அஃது இடர் விளைவிக்கக்கூடியதாகும். மரபுச் சொற்களைக் கையாளும்போது இயன்றவரை பொருள் மாறாட்டம் இல்லாதவாறு திருத்தி அமைத்துக் கொள்ளவேண்டும்.

ஒரு சொல்லை அமைக்கும் போது ஒரு பொருளின் தொழிற் பண்பு புலப்படுமாறு செய்யவேண்டும்.

சில சொற்கள் எவ்வளவு சிறந்ததாகவும் எளியதாகவும் ஏற்றதாகவும் தோன்றினும் பலருக்கு விந்தையாகவும் தோன்றலாம். எனினும் திருத்த வேண்டிது என்பது எல்லோர்க்கும் ஒப்பமுடிந்ததொரு கொள்கையாதலின் இச்சொற்களைப் பாடப்புத்தகங்களில் பயன்படுத்திவிட்டால் பிற்காலச் சிறார்களேனும் பயன்படுத்துவார்கள் எனக் கூறுகின்றார்.

விளிம்பு என்ற சொல் பழைய திண்ணைப் பள்ளிக் கூடங்களில் வழக்காற்றில் இருந்து வந்தது; மணலைப் பரப்பி அதன்மீது அரிச்சுவடியை விளம்பு என்று சொல்வதுண்டு.

**Algebra – குறியளவை**

இதில் எண்களுக்குப் பதிலாக *a*, *b*, *c* போன்ற எழுத்துக்களைக் குறிகளாக வைக்கிறோம். *Formula* என்பது *Form* என்ற சொல்லடியாகப் பிறந்ததாகும். இயற்கையுண்மைகளிலிருந்து தேர்ந்து கொள்ளப்பட்ட அறிவியல் உண்மைகளைக் குறியீட்டினால் விளக்குவதாகும். இதற்குத் தமிழில் ‘ஆக்கம்’ என்று பெயர்.

**“இயற்கைப் பொருளை யிற்றெனக் கிளத்தல்**
**செயற்கைப் பொருளை யாக்கமொடு கூறல்**
**ஆக்கர் தானே காரண முதற்றே”**

என்பது தொல்காப்பியம்

நாயக்கர் அவர்கள் தொடங்கிய, தனித்தமிழ் இயக்கம் தழைத்து ஓங்கி வளர்ந்து வருகின்றது.

**எண்ணளவை**

இக்கட்டுரை *1933*ஆம் ஆண்டில் செல்வியில் வெளியிடப் பெற்றது.

சுவடி என்பது சுவடு என்பதினின்றும் பிறந்ததாகும். சுவடு என்பது குறி அல்லது அடையாளம் எனப் பொருள்படும். இப்பெயரைத் தேடியளித்த நம் முன்னோர்தம் பெருமை போற்றற்குரியது. ஒருவன் அவனுடைய முன்னோர்களின் அடிச்சுவடுகளைப் பின்பற்றுகிறான் எனக் கூறுகிறோம். அரிய பெரிய கருத்துகளின் அடிச்சுவடுகளை விட்டு வைப்பதற்கே

நூல்கள் எழுந்தனவாகும். எனவே, ‘சுவடி’ என்ற பெயர் பொருத்தமாக அமைந்துள்ளது.

பத்துப் பழங்கள் என்றால் பழங்களைக் குறித்து நிற்பதனால் பத்து என்ற சொல் பொருளுடையதாக இருக்கின்றது. அவ்வாறன்றிப் பத்து என்று மட்டும் கூறினால் ‘பத்து’ ஒன்றுமில்லை என்பதே பொருளாக நிற்கும். அவ்வாறே இருபது என்று மட்டும் கூறினால் ஒன்றுமில்லை என்பதையே குறிக்கும். ஆயினும் ‘பத்து’ ஒன்றுமில்லை என்பது போல ‘இருபது’ ஒன்றுமில்லை என்னும் ஓர் அகத் தொடர்புள்ளமை மட்டும் புலனாகும். ஆங்கிலத்தில் பரப்பொருள் ஒன்றையும் குறியாது நிற்கும் எண்ணிற்கு Abstract Numbers அல்லது ‘வெற்று எண்’ என்று பெயர்.

முற்காலத்தில் ஒன்று என்பதைக் குறிப்பதற்கு, ஒரு விரலையும், இரண்டு என்பதைக் குறிக்க இரண்டு விரல்களையும், மூன்று நான்கு ஐந்து என்பவற்றைக் குறிக்க அவ்வத்தனை விரல்களையும் அதற்கு மேல் ஆறு, ஏழு என்று வருபவற்றைக் குறிக்க மற்றொரு கையின் விரல்களையும் விட்டுக் குறிப்பிடும் வழக்கத்திற்கேற்ப விரல் என்று பொருள்படும். Digitus என்னும் சொல்லிலிருந்து Digit என்பது பிறந்ததாகும்.

நெடுமுறை என்பது ஆங்கிலேயரால் பின்பற்றப்பட்டு வருவதும், குறுமுறையென்பது அமெரிக்கர்களாலும் ஐரோப்பியர்களாலும் பின்பற்றப்பட்டு வருவதுமாகும். தமிழ்முறை குறுமுறையை ஒட்டியதேயாகும் என்பவை அவர் ஆய்வுக் கட்டுரையின் சுருக்கமாகும்.

**நாயக்கரின் மறைவு**

நாயக்கர் ஓய்வு பெற்றபின் பல அரிய ஆராய்ச்சி நூல்களை எழுத வேண்டுமென்று சொல்லி வந்தார். ஆனால் இரத்த அழுத்தத்தினால் உடல்நலம் கெட்டு எழுத முடியாத நிலை ஏற்பட்டது. சில காலம் குன்னூரில் தங்கி ஓய்வு பெற்று வந்தார். 25-12-1931 வெள்ளிக்கிழமை இரவு காலமானார். மயிலாப்பூரில் அவருடைய சமாதியில் பின்வரும் பாடல் பொறிக்கப்பட்டுள்ளது.

“கலையின தகலமும் காட்சிக் கின்பமும்
சிலையின தகலமும் வீணைச் செல்வமும்
மலையினி னகலிய மார்ப னல்லதிவ்’
உலகினில் இலையென ஒருவ னாயினான்”

“மண்ணில் மறைந்தாலும் மாணிக்கம் தன்னொளி குன்றாது. காற்றில் கலந்தாலும் கவின்மலர் தன் மணம் மாறாது”.


●

கட்டுரையாளர்: எழுத்தாளர்,
சென்னை டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக்கழக சிறப்புநிலைப் பேராசிரியர்

**நியூ செஞ்சுரி புத்தக நிறுவனத்தின்**
**இம்மாத வெளியீடாக...**

’புரட்சியில் பொருள்’ என்ற இந்நூல் ப.கு.ராஜன் அவர்களின் பல்லாண்டு கால தொடர் உழைப்பின் விளைச்சல். இத்தகைய நூல்கள் தமிழில் அரிதாகவே வெளிவருகின்றன. ஆழமும் கனமும் மிக்க இது போன்ற நூல்களை எழுத வருடக்கணக்கான விரிந்த வாசிப்பு அவசியப்படுகிறது. வாசிப்போடு சிந்தனையும் படிப்பறிவோடு பட்டறிவும் தேவைப்படுகிறது. பொறுமையும் வைராக்கிய உணர்வும் இருந்தால் மட்டுமே இது சாத்தியப்படுகிறது.

– த. ஸ்டாலின் குணசேகரன்



கட்டுரை

# சமகாலப் பிரச்சினைகளைப் பேசும் நாவல்






ஈரோடு சர்மிளா

ஒற்றைச் சிறகு ஓவியா | விஷ்ணுபுரம் சரவணன்
வெளியீடு: பாரதி புத்தகாலயம் விலை: ரூ.120

'ஒற்றைச் சிறகு ஓவியா' என்ற சிறார் நூலுக்காக எழுத்தாளர் விஷ்ணுபுரம் சரவணன் அவர்களுக்கு 2025 ஆம் ஆண்டுக்கான பால சாகித்ய புரஸ்கார் விருது அறிவிக்கப்பட்டுள்ளது. இது அவருடைய உழைப்புக்குக் கிடைத்த மிகப்பெரிய அங்கீகாரம். பதினைந்து ஆண்டுகளுக்கும் மேலாக எழுதி வரும் இவர் இதுவரை நான்கு சிறார் நாவல்கள், ஒன்பது சிறார் சிறுகதை நூல்கள், ஆசிரியர்களுக்கும் பெற்றோர்களுக்கும் நான்கு கட்டுரைத் தொகுப்புகள் எழுதியிருக்கிறார். அதிலும் குறிப்பாக சாதியப் பாகுபாடுகள் குறித்து பேசும் 'கயிறு' நூல் ஒரு லட்சம் பிரதிகளைத் தாண்டி விற்பனையாகிக் கொண்டிருக்கிறது. 'நீலப் பூ' என்ற நூலும் மிக முக்கியமானது. அது ஒரு ஊரில் நடக்கும் சாதிச்சண்டையால் குழந்தைகள் மனதில் உருவாகும் உளவியல் நெருக்கடிகளை பற்றி மிக அழுத்தமாக பேசுகிறது. அவருடைய ஒவ்வொரு நூலும் ஆர்ப்பாட்டம் ஏதும் இல்லாமல் கலை அமைதியுடன் மிகச் சிறப்பாக குழந்தைகள் வாசிக்கும் விதத்தில் மிக எளிமையாக படைக்கப்பட்டிருக்கிறன. அவருடைய படைப்புகள் ஒவ்வொன்றும் வித்தியாசமானவை. சமூகத்தில் புரையோடிப் போயிருக்கும் கருப்பொருளை மையமாகக் கொண்டு எழுதக்கூடியவர். நவீன சிறார் இலக்கியத்தின் எழுத்தாளர்களுள் மிக முக்கியமானவர். இவருடைய 'ஒற்றைச் சிறகு ஓவியா' என்ற சிறார் நாவல் சமகாலத்தில் நிலவும் மிக முக்கியமான பிரச்சினைகளைப் பற்றிப் பேசுகிறது.

அரசுப் பள்ளியில் ஏழாம் வகுப்பில் படிக்கும் ஐந்து நண்பர்களுடன் தொடங்கும் இக்கதை ஒரு துப்பறியும் கதையைப் போல் சுவாரசியமாக இருக்கிறது. ஆண்டு விழா கலை நிகழ்ச்சியில் பங்கு கொள்ள அவர்கள் ஒத்திகை பார்க்கும் பொழுது சில அற்புதங்கள் நிகழ்கின்றன. அவற்றையே மேடை ஏற்றி விடலாம் என்று முடிவு செய்கிறார்கள். மூத்த மாணவர்கள் செய்த சூழ்ச்சியால் நிகழ்வுக்குத் தேவையான பொருளை எடுத்து மறைத்து வைத்துவிடுகிறார்கள். அந்தப் பொருளைத் தேடும் பயணத்தில் அவர்கள் பெற்ற அனுபவங்கள் கதையாக விரிகிறது. வாசிப்பவர்களின் ஆவலைத் தூண்டும் விதமாக மிக விறுவிறுப்பாக கதையை நகர்த்தியிருப்பார். கதையை வாசிக்கக் கூடிய வாசகர்கள் முற்றிலும் எதிர்பாராத திருப்பங்கள் நிறைந்ததாக எழுதப்பட்டுள்ளது. இன்று சுற்றுச்சூழல் எப்படி எல்லாம் மாசடைந்துள்ளது என்று நேரடியாகக் கூறாமல் கதையின் போக்கில் மிக நுட்பமாகவும் அழுத்தமாகவும் குழந்தைகளின் மனதில் மாற்றத்தை ஏற்படுத்தும் விதத்தில்

எழுதி இருக்கிறார். நிலத்தில் ஏன் மண்புழுக்கள் இல்லாமல் போயின? என்ற கேள்வியை எழுப்பி அது ரசாயன உரங்களின் பயன்பாட்டால் மண்ணில் வாழக்கூடிய பல்லாயிரக்கணக்கான நுண்ணுயிர்கள் அழிந்து கொண்டிருக்கக் கூடிய பேரபாயத்தை கதையின் போக்கில் சொல்லிச் செல்கிறார். மேலும் இன்று தண்ணீர் மிக மோசமாக மாசடைந்து குடிப்பதற்கு ஏற்றதாக இல்லாத நிலையையும் எண்ணெய் கசிவினால் நெல் வயல்கள் அழியும் அபாயத்தையும் குழந்தைகள் உள்ளத்தில் மாற்றத்தை ஏற்படும் விதத்தில் எழுதி இருக்கிறார். இந்நூல் சிறார்கள் மட்டுமல்ல பெரியவர்களும் வாசிக்க வேண்டிய ஒரு முக்கியமான நூல். மாய யதார்த்தவியல் பாணியில் குழந்தைகள் விரும்பும் வண்ணம் மிகச் சிறப்பாக எழுதி இருக்கிறார். எளிய நடை, எளிய சொல்லாடல், புழக்கத்தில் உள்ள சொற்கள், மிக எளிய வாக்கியம் என மிக சிறப்பாகக் குழந்தைகள் வாசிப்பதற்கு ஏதுவான முறையில் எழுதி இருக்கிறார். இந்த நாவலில் அரசுப் பள்ளியில் பயிலும் ஐந்து நண்பர்களோடு ஒரு தாத்தா இருப்பதைப் போல் படிக்கும் நாமும் அவர்களுடன் பயணித்துவிடுவோம். இப்படியான ஒரு நூலுக்குத்தான் இந்த ஆண்டுக்கான பால சாகித்ய புரஸ்கார் விருது கிடைத்துள்ளது.

இவர் ஏற்கனவே தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர் கலைஞர்கள் சங்கம் வழங்கும் விருது உட்பட பத்துக்கும் மேற்பட்ட விருதுகளைப் பெற்றிருக்கிறார்.

இவர் தமிழ்நாடு அரசின் பள்ளிக் கல்வித்துறை நடத்தும் கனவு ஆசிரியர், தேன்சிட்டு, ஊஞ்சல் ஆகிய இதழ்களின் இணை ஆசிரியராகப் பணியாற்றுகிறார்.

குழந்தைகளின் வாசிப்பினை மேம்படுத்தும் விதமாக பள்ளிகளிலும் புத்தகக் கண்காட்சிகளிலும் பயிலரங்குகளை நடத்தி வருகிறார். தொடர்ந்து குழந்தைகளுடன் உரையாடல்களை நிகழ்த்திக் கொண்டே இருக்கிறார். குழந்தை நேயம் கொண்ட எழுத்தாளர் விஷ்ணுபுரம் சரவணன் அவர்கள் மேலும் மேலும் பல நூல்களை எழுதி சிறார் இலக்கியத்திற்குப் பெருமை சேர்ப்பார் என்பதில் ஐயமில்லை. அவருடைய இலக்கியப் பணியைப் பாராட்டி மகிழ்கிறேன்.

●

**கட்டுரையாளர்: எழுத்தாளர்.**


NCBH

## நியூ செஞ்சுரியின் புதிய வெளியீடாக

# மீள் புரிதல் நோக்கில் செவ்வியல் நூல்கள்

## தமிழாய்வு வரலாற்றில் ஓர் அரிய முயற்சி

**கூர்மையான, பல அடுக்குத் திட்டமிடலுடன்**
**பல முறை பலரால் மதிப்பீடு செய்யப்பெற்று**
**'விழி' - இணைய அமர்வில் விவாதித்து மேம்படுத்தப்பட்ட**

**64 அறிஞர்களின் ஆய்வுரைகள் 1300 பக்கங்களில்**
**12 தொகுதிகளாக விரைவில் வெளிவருகின்றன**



நேர்காணல்:

# நீதி நெறிக்கதைகளைப் போலவே மீளவும் எழுதவேண்டியதில்லை

## விஷ்ணுபுரம் சரவணன்

சந்திப்பு: ஜி. சரவணன்

இருபதாண்டுகளுக்கும் மேலாக சிறார் இலக்கியத்தில் தீவிரச் செயல்பாட்டாளராகவும் பேச்சாளர், எழுத்தாளராகவும் இயங்கிக் கொண்டிருக்கும் விஷ்ணுபுரம் சரவணன் பால சாகித்ய புரஸ்கார் விருது பெற்றுள்ளார் அவருடனான நேர்காணல்.

**சிறார் இலக்கியம் குறித்த பொதுவான உங்கள் மதிப்பீடு பற்றிக் கூறுங்கள்..**

இந்த உலகை விரிவான பார்வையில் காணவும், சகமனிதரின் உணர்வுகளை நெருங்கிப் புரிந்துகொள்ளவும், இயற்கையின் இயல்புகளை உள்வாங்கிக்கொள்ளவும் கலை இலக்கியங்களே நமக்குப் பேருதவி செய்கின்றன. பெரியவர்கள் தங்களுக்கான இலக்கியப் படைப்புகளை வாசிக்கையில், அதுவரை அவர்கள் கற்ற கல்வி, அதுவரை கிடைத்த வாழ்வனுபவங்கள், அரசியல் சமூகப் பார்வை உள்ளிட்டவற்றோடு அப்பிரதியை அணுகுகிறார்கள் அல்லது புரிந்துகொள்கிறார்கள். இது ஒருவகையில் எழுத்தாளருக்கு அனுகூலம்தான். தான் எழுதிய பிரதியின் வரிகளுக்கு இடையே மறைவரியைக்கூட அவ்வாசகர் புரிந்துகொள்ள முடியும். அதன்வழியாக, அவரின் பிரதி கொண்டாடப்படும் அல்லது நிராகரிக்கப்படும். இதற்கு சற்று வேறுபட்டது சிறார் இலக்கியம். சிறார் கதை ஒன்றை வாசிக்க முற்படும் ஒரு குழந்தையின் கல்வி, வாழ்வனுபவம் மிகச் சுருக்கப்பட்ட எல்லைகளுக்கு உட்பட்டன. குறிப்பாக, மொழியெனும் பெருங்கடலில் சிறு குவளை நீரளவே சொற்கள் அக்குழந்தைகள் வசமிருக்கும். இவற்றையெல்லாம் உணர்ந்து சிறார் இலக்கியப் படைப்பாளி அக்குழந்தையை அக்கதைக்குள் அழைத்துச் செல்ல வேண்டும். அப்படிச் செல்லும் குழந்தைக்கு கதையின் வழியே புது அனுபவத்தைக் கொடுக்க வேண்டும், கூடுதலாக, அக்கதையோடு புதிய நிலத்தை / மனிதரை / வாழ்வியலை அறிமுகப்படுத்த வேண்டும். சுவாரஸ்யம் குன்றாது, கலையம்சத்தை கைநழுவ விடாது பிரதியை எழுத வேண்டும். மேலும், அக்குழந்தைக்கு பழகிப்போன கதை சொல்லலில் இருந்து விலகியும் அதேநேரம் முற்றிலும் அந்நியமான முறைக்கும் செல்லாமல் ஓர் உத்தியை மேற்கொள்ள வேண்டும். இது

பெரும் சவாலானது. ஆயினும் இந்தச் சவாலை நான் மகிழ்வோடு எதிர்கொள்கிறேன். ஒவ்வொரு கதை எழுதியபிறகும் பலமுறை படித்துப் படித்து திருத்துகிறேன். கருவை சிதைக்காது இன்னும் இன்னும் எளிமையாக்குகிறேன். இது எனக்கான வாழ்முறையாகவும் மாறிவருகிறது. முன்னைக் காட்டிலும் என்னைப் பக்குவப்படுத்தியும் வருவது சிறாருக்கு நானெழுதும் முறைமையே.

## தமிழ்ச்சூழலில் சிறார் இலக்கியத்தின் நிலை எப்படியானதாக உள்ளது?

சிறார் இலக்கியத்திற்கு நூறாண்டு வரலாறு இருக்கிறது. ஒரு பக்கம், இதிகாசங்கள், புராணங்களை எளிமையாக்கி குழந்தைகள் படைப்புகளாக்கும் முயற்சிகள் நடந்தாலும், ஒவ்வொரு காலகட்டத்திலும் புதிய பாதைகளை அமைக்கப் பலரும் முயன்றிருக்கிறார்கள். சமூகம் சார்ந்த சிறார் இலக்கியப் படைப்புகள் தொடர்ச்சியாக எழுதப்பட்டிருக்கின்றன. பெரியவர்களுக்கு எழுதிய ந.பிச்சமூர்த்தி, சி.சு.செல்லப்பா, கு.அழகிரிசாமி, வல்லிக்கண்ணன் உள்ளிட்டவர்களும் சிறாருக்கு எழுதியிருக்கிறார்கள். அழ வள்ளியப்பா, பெ.தூரன், ரேவதி, கல்வி கோபாலகிருஷ்ணன் உள்ளிட்ட சிறார் இலக்கியப் படைப்பாளிகளும் எழுதிக் குவித்துள்ளனர். இதன் தொடர்ச்சியை இப்போதும் காணமுடிகிறது. ஒரே கதைக் கருவை ந.பிச்சமூர்த்தி ஒரு விதமாகவும் அழ வள்ளியப்பா வேறொரு விதமாகவும் எழுதியிருப்பதைக் காண முடிந்தது. இரண்டிலும் உள்ள பலத்தையும் பலவீனங்களையும் உள்வாங்கமுடிந்தது. இரண்டிலும் உள்ள பலங்களை மட்டும் வைத்து நான் இயங்க, எழுத முயல்கிறேன். தற்போது பலர் புதிதாக எழுத வந்துள்ளனர். பல்வேறு விதமான பாடுபொருட்களில் கதைகள் குவிகின்றன. சிறார் இலக்கியம் மீது கவனம் குவிவதும், சிறார் புத்தகங்கள் விற்பதற்கான சந்தை உருவாகியிருப்பதும் பலரை சிறார் இலக்கியம் எழுத வர வைத்திருக்கிறது. அதனால், போலியான, பாவனையான, உள்ளீடற்ற படைப்புகளும் ஏராளம் வருகின்றன. காலப்போக்கில் அவை தேங்கிவிடும்; சிறந்த பிரதிகளே நிலைக்கும்.

## கதை எழுதுவதிலிருந்து நகர்ந்து கதை சொல்லும் முறையால் வாசிப்புப் பழக்கம் தேக்கமடைவதாக கூறப்படுவதை எப்படிப் பார்க்கிறீர்கள்?

சிறார் கதை சொல்லலால் வாசிப்புத் தேக்கமடைந்துவிட்டதாகப் பார்க்கவில்லை. கதை சொல்லலும் கேட்டலும் நம் ஆதி வழக்கங்களில் ஒன்று. வீடுகளில் பாட்டியோ, தாத்தாவோ, அம்மாவோ, அப்பாவோ சொன்ன கதைகள் வழியேதான் கற்பனை உலகில் பயணிக்க முடிந்தது அல்லது கற்பனையாக ஓர் உலகத்தை உருவாக்கிக்கொள்ள முடிந்தது. பின்னாளில் இலக்கிய வாசிப்பு நோக்கி நகர அக்கதை சொல்லலும் ஒரு காரணம் என்று நம்புகிறேன். மேலும், ஒரு பிரதியின் காட்சிகளை நம் மனத்திற்குள் சித்தரித்துக்கொள்ளவும் பாட்டியின் கதைகள் உதவியுள்ளன. இந்த பரிமாற்றம் குறித்து நம் இலக்கிய உலகம் அதிகம் உரையாட வில்லை என்பது வருத்தமானது. கடந்த 20 ஆண்டுகளில் குடும்ப அமைப்பில் பல்வேறு மாற்றங்கள் நிகழ்ந்துள்ளன. தனிக்குடித்தனங்கள் பெருகியிருப்பதும், குழந்தைகள் கல்விக்காகச் செலவிடும் நேரம் அதிகரிப்பதும் குழந்தைகள் கதைகளில் இருந்து வெகுதூரம் விலகுவதற்கான காரணிகளாக உள்ளன. இந்த இடத்தில்தான் கதை சொல்லிகளின் வருகை நிகழ்கிறது. அதாவது, கதை சொல்லலையும் ஒரு வணிகப் பொருளாக தம் குழந்தைகளுக்கு வாங்கித்தர முனையும் பெற்றோராக மாறுகின்றனர். தம் குழந்தைக்கு தாம் கதை சொல்வதற்கும் திரையில் வேறொருவர் கதை சொல்வதற்கும் இடையேயுள்ள வேறுபாடுகள் மிக நுட்பமானவை. அவற்றை அறிந்துகொள்வது அவசியம். சில குழந்தைகள் கதைகள் கேட்டு அது எழுதப்பட்ட புத்தகத்தைத் தேடி வருவதும் நடக்கிறது. கதைகள் கேட்டு அவற்றிலேயே நிறைவடைந்துவிடும் குழந்தைகளையும் காண முடிகிறது. ஊடக வளர்ச்சியில் கிடைத்த பலமும் பலவீனமாகவும் இதனைப் பார்க்க முடிகிறது.

## இன்றைய நிலையில் தமிழில் சிறார்களுக்கான படைப்புலகம் பற்றி சொல்லுங்களேன்

மிகவும் ஆரோக்கியமான வளர்ச்சியில் இன்றைய சிறார் இலக்கியம் செல்கிறது. நவீனம் என்பது உடை, பொருட்களில் மட்டுமல்ல, சிந்தனையிலும் இருக்க வேண்டும்தானே? அதை நன்குணர்ந்த சிறார் எழுத்தாளர்கள் தமது கதை மையங்களில் கூடுதல் கவனம் செலுத்தி வருகிறார்கள். இதை நவீனச் சிறார் இலக்கியம் என்று வகைப்படுத்தலாம்.

குறிப்பாக, 2010க்குப் பிறகு சிறார் இலக்கியத்தில் சமகாலத்தைப் பதிவு செய்வது என்பது அதிகரித்துள்ளது. கையால் மலம் அள்ளும் தொழிலாளியைப் பற்றி 'சஞ்சீவி மாமா' (கொ. மா.கோ.இளங்கோ), முகமெல்லாம் பருக்கள் இருக்கும் சிறுவனின் அகவுலகத்தைப் பேசும் 'தேநீர்க் குடில்' (யூமா வாசுகி) மலையில் வாழும் சிறுமியின் கல்விக் கனவு பற்றி 'மலைப்பூ' (விழியன்), பெண் குழந்தைகளின் உடல் மீதான அத்துமீறலைச் சுட்டும் 'மரப்பாச்சி சொன்ன ரகசியம்' (யெஸ்.பாலபாரதி), ஏகலைவன் கதையை மாற்றுப்பார்வையில் விவரிக்கும் 'கட்டைவிரலின்

கதை' (உதயசங்கர்), சாதி வன்முறையில் சிக்கிய கிராமத்து சிறுமியின் உலகத்தைப் பரிமாறும் 'நீலப்பூ'' (விஷ்ணுபுரம் சரவணன்), பசுவின் பெருமை பேசப்படும் சூழலில் எருமையைக் கொண்டாடும் 'எருமையின் நிழல்' (நீதிமணி) எனப் பட்டியல் நீண்டுகொண்டே செல்லும். தமுஎகச, கலைஇலக்கியப் பெருமன்றம், விடுதலைக் கலை இலக்கியப் பேரவை உள்ளிட்ட அமைப்புகள் சிறார் இலக்கியத்திற்கு விருது அளித்துவரும்போது அவ்வமைப்புகளைச் சேர்ந்தவர்களுக்கு அப்படைப்புகள் அறிமுகமாகின்றன. அதன்வழியாக, அவர்களும் சிறார் இலக்கியம் படைக்க முன்வருகின்றனர்.

**விருதுகளைத் தவிர்த்து சிறார்களுக்கான உங்கள் படைப்பாக்கங்களின் வெற்றியாக நீங்கள் எதனை உணர்கிறீர்கள் ?**

என் படைப்புகளின் வழியே சிறாரோடு இரண்டு வகைகளில் உரையாடுவதே என் நோக்கமாகக் கருதுகிறேன். ஒன்று, பிரதியின் வழியே உரையாடுவது. அடுத்து, பிரதியை வாசித்தபின் என்னோடு தொடர்புகொள்ளும் அல்லது விழாக்களில் பேச அழைக்கும்போது என நேரடியாக சிறாரோடு உரையாடுவது. கடந்த பத்தாண்டுகளில் ஆயிரக்கணக்கான குழந்தைகளை நேரில் சந்தித்திருக்கிறேன்; உரையாடியிருக்கிறேன்; கதைகள் எழுத கற்றுகொடுத்திருக்கிறேன்; கதைகள் சொல்ல பயிற்சி அளித்திருக்கிறேன்; அவர்கள் எழுதிய கதைகளைப் படித்திருக்கிறேன். இதெல்லாம் என் வாழ்வின் முக்கியத் தருணங்களாகப் பார்க்கிறேன். ஏனெனில், பெரியவர்கள், தாங்கள் இழந்துகொண்டிருக்கும் குழந்தைமையை மீட்டெடுக்க குழந்தைகளோடு உரையாடுவதே ஆகச்சிறந்த வழி. குழந்தைமையைத் தக்க வைக்க வைக்க சகமனிதர் மீதான அன்பும் கவனிப்பும் அதிகரித்துக்கொண்டே இருக்கும்.

**சிறார்களை அதிகமும் சந்திப்பவராக இருக்கிறீர்கள். அவர்களின் அதிகபட்சத் தேவையாக எதனை உணர்கிறீர்கள் ?**

சிறாரின் பொழுதுபோக்கு நேரம் சுருக்கப்பட்டுகொண்டே வருகிறது. விளையாட்டின் நேரம், இடமும் சுருக்கப்பட்டுகொண்டே வருகிறது. நண்பர்களோடு பேசுவதற்கான விஷயங்கள் தொலைக்காட்சிகளாலும் ரீல்ஸ்களாலும் வரையறுக்கப்படுகின்றன. பாடங்களைக் கற்றுத்தரும் கற்றல் என்பது பெரும் சுமையாக மாற்றப்பட்டதால், கலையைக் கற்றுத்தரும் வகுப்புகளையும் சுமையாக நினைக்கும் சூழலுக்குத் தள்ளப்பட்டுள்ளனர். எதுவொன்றையும் நிதானித்துக் கவனிக்கக் கற்றுக்கொடுக்கும் முறையே இல்லை. உணவும் பொழுதுபோக்கும் நம் மண்ணிற்கும் சூழலுக்கும் ஏற்றதாக இல்லை. அதனால், அவர்களின் சிந்தனையும் நம் சூழலுக்குப் பொருந்தும் வகையில் இருக்க முடியவில்லை. எல்லாவற்றிற்கும் மேலாக, அவர்களின் படைப்பூக்கத்தை வெளிப்படுத்தவும், விரிவுபடுத்தவும் வாய்ப்புகள் மிகமிகக் குறைவாகவே இருக்கிறது. அதை ஏற்படுத்திக்கொடுக்க வேண்டியது முதன்மையான விஷயம்.

ஒரு கதைப் பயிற்சி வகுப்பில், பாட்டி வடை சுட்ட கதையில் என்ன நீதி என்று விவாதித்தோம். 'ஓர் இடத்தில் ஏமாற்றினால், இன்னோர் இடத்தில் ஏமாறுவோம்', 'திருடக்கூடாது' என்றெல்லாம் பலரும் சொன்னார்கள். அப்போது எட்டாம் வகுப்புப் படிக்கும் மாணவி சொன்னாள், 'காக்காவும் அழகு; அதன் குரலும் இனிமை'. விரிவாகச் சொல்லும்படிக் கேட்டதற்கு, 'காகம் என்றால் கறுப்புப் பறவை என்று ஒதுக்கியே வைத்திருக்கிறார்கள். அதன் குரலையும் கேலி செய்துதானே வந்திருக்கிறார்கள். உலகம் தோன்றிப் பிறந்த இத்தனை கோடி மனிதர்களில், விலங்குகளில் ஒரு காகத்திடம் சென்று அது அழகாக இருப்பதாகவும்



அதன் குரல் இனிமையாக இருப்பதாகவும் சொன்னது ஒரு நரிதானே? இந்தக் கதையின் நீதி இதுவாகத்தானே இருக்கும். அதைத்தானே நாம் எடுத்துகொள்ள வேண்டும்' என்று அவள் சொல்லச் சொல்ல நாம் இதுவரை கேட்ட கதைகளின் நீதியை மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்ற எண்ணத்தை விதைத்தது. ஆனால், இப்படி அவள் யோசிப்பதை வெளிப்படுத்த கதைப் பயிலரங்கே உதவியது. இம்மாதிரியான முயற்சிகள் அதிகரிக்க மாணவர்கள் சிந்திப்பதும் படைப்பூக்கமும் ஆரோக்கியமான திசையில் செல்லும்.

**இன்னும் எப்படியெல்லாம் சிறார்களுக்கான படைப்புகள் வரவேண்டும் என மதிப்பிடுகிறீர்கள் ?**

தமிழில் நீதிநெறிக்கதைகள் ஏராளம் உள்ளன. தேவைப்படுவோர் அவற்றைத் தேடிப் படித்துக்கொள்வர். எனவே, அவை போலவே மீளவும் எழுத வேண்டியது இல்லை. சிறார் விரும்பும் வகையிலான மொழிநடையில் எளிமையோடு எழுதப்பட வேண்டும். அதேநேரம் பாடுபொருட்கள் பெரியவர்களுக்கு எழுதுவதைப் போல புதியதாக இருக்க வேண்டும். கதையின் போக்கிலே செய்திகளை வைப்பதே சரியான அணுகுமுறை. மாறாக ஒரு செய்தியைத் தருவதற்காகவே கதைகள் எழுதப்படுவதைத் தவிர்க்கலாம். அறிவியல் புனைவுகள், சமகால வாழ்வை, நவீனத் தொழில்நுட்ப சாதக, பாதகங்கள், இட ஒதுக்கீடு, பாலின பாகுபாடு உள்ளிட்டவற்றையும் சிறார் படைப்புகளில் கலை அம்சம் குலையாது எழுத வேண்டும். மாற்றுத்திறனாளிகள், சிறப்புக் குழந்தைகள், திருநர் உள்ளிட்டோரை கதையில் உலவும் மனிதர்களாக இடம்பெறச் செய்வதன்மூலம் இச்சமூகம் அவர்களையும் உள்ளடக்கியதே என்பதை மனத்திற்குள் விதைக்க முடியும்.

**சிறார்களிடம் புதிதாக வாசிப்புப் பழக்கத்தை ஏற்படுத்துவதற்கான ஆலோசனைகளைக் கூறமுடியுமா ?**

பெற்றோர் முதலில் வாசிப்பைத் தொடங்க வேண்டும். இரவு நேரங்களில் கதை சொல்வதை தினசரி பழக்கமாக்கிக் கொள்ளவேண்டும். வாசித்த கதைகளை குழந்தைகளோடு அமர்ந்து விவாதிக்க வேண்டும். சமூகத்தில் புத்தகப் பரிசை கேலியாகப் பார்ப்பது வருத்தத்திற்குரியது. அது குறித்து கவலைப்படாமல் புத்தகப் பரிசுகளை தருவதை அதிகரிக்க வேண்டும். வீடு, சமூகத்தில் அளிக்கப்படும் புத்தகங்களை விவாதிக்க, உரையாட கல்விக்கூடங்கள் தகுந்த சூழலை ஏற்படுத்தித் தர வேண்டும். தமிழ்நாடு அரசின் பள்ளிக்கல்வித் துறை நடத்தும் மாணவப் பருவ இதழ்கள் அனைத்து அரசுப் பள்ளிகளுக்கும் செல்கின்றன. அவற்றைப் படிக்க தினமும் நேரமும் ஒதுக்கப்படுகிறது. அதேபோல, வயதுக்கு ஏற்ற கதைப் புத்தகங்களை அரசு வெளியிட்டு பள்ளிகளுக்கு அனுப்புகிறது. இன்னும் பல திட்டங்களை வாசிப்புக்கு என முன்னெடுக்கிறது. இவற்றின் மூலம் மாணவர்களை புனைவு வாசிப்பின் பக்கம் திருப்பியுள்ளது. இதைத் தொடரும் பட்சத்தில் ஆரோக்கியமான விளைவுகள் கிடைக்கும்.

**சிறார்களில் ஆர்வமுடையோரை படைப்பாளிகளாக உருவெடுப்பதற்காக ஏதேனும் அமைப்புகள் இருக்கின்றனவா ?**

சிறார் இலக்கியத்தில் படைப்புகளை எழுதியதோடு அவற்றை சிறாரிடம் கொண்டு சேர்க்கவும் சில முயற்சிகள் எடுக்க வேண்டியுள்ளது. பள்ளிகளுக்குச் சென்று உரையாடுவது, கதை சொல்வது, விழாக்களை நடத்துவது போன்ற செயல்பாடுகள் வாசிப்பை விரிவுபடுத்துகிறது. அவற்றின் வழியாக மாணவர்களே கதைகள் எழுத முயல்வதும் அதிகரித்துள்ளது. அவற்றைச் சேகரித்து புத்தகமாக்கும் முயற்சிகளை ஆசிரியர்கள் முன்னெடுக்கிறார்கள். இவர்களை ஒருங்கிணைத்து செயல்படவும், சிறார் இலக்கியம் குறித்த ஆழமான உரையாடல்களை மேற்கொள்ளவும் தமிழ்நாடு சிறார் எழுத்தாளர் – கலைஞர்கள் சங்கம் உருவாக்கப்பட்டுள்ளது. அதுபோல உள்ளூர் மட்டத்தில் பல அமைப்புகளும் தீவிரமாக இயங்கி வருகின்றன.

**இந்த விருது உங்களுக்கு அளித்திருக்கும் உற்சாகத்தைத் தொடர்ந்து அடுத்தடுத்து என்ன திட்டங்கள் வைத்துள்ளீர்கள் ?**


இந்த விருதின் வழியாகக் கிடைத்திருக்கும் வெளிச்சம் என் எழுத்துகளை வாசிக்கும் வட்டத்தை விரிவுபடுத்தியிருப்பதில் மகிழ்ச்சி. கதை எழுத விரும்பும் சிறாருக்கு உதவும் வகையில் 'நானும் கதாசிரியரே' எனும் நூலை (இந்து திசை பதிப்பகம்) எழுதினேன். அடுத்து, கதை சொல்ல விரும்பும் குழந்தைகளுக்கு உதவும் நூல் ஒன்றை எழுதத் திட்டமிட்டுள்ளேன். மலைப்பகுதி சார்ந்த சிறார் நாவல் எழுதும் முனைப்பில் உள்ளேன். அதற்காக சில பயணங்கள் செல்ல வேண்டும். அடுத்து, நூறாண்டு கால வரலாறுள்ள தமிழ்ச் சிறார் இலக்கியத்தில் சமூக நீதியை மையப்படுத்தி எழுதிய கதைகளைத் தொகுக்க வேண்டும் என்ற திட்டமும் உள்ளது. இவற்றிற்கு மேலாக, இவ்விருதுக்குப் பிறகு கதை சொல்லவும் பேசவும் வருமாறு பல்வேறு பள்ளிகளில் இருந்தும், அமைப்புகளிடம் இருந்தும் அழைப்பு வருகிறது. அங்கு சென்று உரையாட விரும்புகிறேன்.

●

கட்டுரை

# இடதுசாரி இலக்கிய முன்னோடி

# பி.கேசவதேவ் எழுத்து



“ கேரள பொதுவுடைமை இயக்கத் தலைவர்கள் அனைவருக்கும் ஆதியராக இருந்தவர் பி.கேசவதேவ், இடதுசாரி எழுத்தாளர்களைப் புறக்கணித்துவிட்டு இலக்கியத்துறையை எண்ணிப் பார்க்கவே முடியாது. ”

சென்ற நூற்றாண்டில் பல ஒளிவிளக்குகள் தோன்றி பாதையை தெளிவுபடுத்தி வழி காட்டின. பார்வாழ, சீர்தவழ, அடிமை இருள் சூழ்ந்த ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் பல்வேறு துறைகளிலும், அறிவாற்றலும் செயலூக்கமும் படைத்த மாமனிதர்கள் உலவினார்கள்.

மன்னர் புகழ்பாடும் கவிதைகளும், கதைகளும், புராண இதிகாசங்களும் மண்டிக்கிடந்த இலக்கியத்துறையில் மறுமலர்ச்சி உதயமானது. அதில் மலையாளக்கரையின் பங்கு மகத்தானது.

நடுத்தரவர்க்கத்தினரின் கதைகளையும், அடித்தட்டு மக்களின் அவலங்களையும் அல்லல்களையும் எழுத்தின் வழியாகப் படம் பிடித்துக் காட்டியவர்கள் இடதுசாரிகள். நடைமுறை வாழ்க்கையின் கோர முகங்களையும், இசைவான நயமான இடங்களையும் இலக்கியத்தில் பதிவு செய்து, யதார்த்தவாத எழுத்து முறையை புகழ்பெறச் செய்தார்கள் பொதுவுடைமைக் கோட்பாட்டில் பற்றுடையவர்கள். இதில் மாநில எல்லைகளைத் தாண்டிப் புகழ் பெற்றவர் பி.கேசவதேவ்.

பி.கேசவதேவ் அவர்களே தன்வரலாறு எழுதியிருக்கிறார். எனவே அவரைப்பற்றி அதிகமாக எழுதத் தேவையில்லை. அது தனி கட்டுரையாகிவிடும். நூற்றுக்கும் மேற்பட்ட அவருடைய சிறுகதைகள், கட்டுரைகள், பேட்டிகள், நாவல்களில் ஓடையில் நின்னு – ஸ்வப்னம் – எதிர்ப்பு – அண்டைவீட்டார் – ஓர் ஆத்மாவின் கதை போன்றவை புகழ்மிக்கவை.



**வே. குமரவேல்**

'அயல்கார்' என்கிற அண்டைவீட்டார் நாவல் நிலப்பிரபுத்துவத்தின் வீழ்ச்சியை ஓவியக்காட்சிகள் போல் நம் உள்ளத்தில் நிறுத்துகிறது.

"முக்கோணக்கரை வெகுவேகமாகப் பழமையிலிருந்து புதுமைக்கு மாறிக் கொண்டிருந்தது. மருமக்கள் சொத்துரிமை வழக்கம், அதற்கே உரித்தான பித்தலாட்டங்கள், பொறுப்பில்லாமை, குடும்பங்களிடையே உள்ள மேன்மைப் போராட்டம் இவை காரணமாகத் தகர்ந்துகொண்டு வந்தது. அதே சயத்தில் கூலிக்காரர்கள், ஒடுக்கப்பட்ட மக்கள் தங்கள் சமூக சுதந்திரப் போராட்டத்தைத் தொடங்கினார்கள். அப்படியே இளகி, ஆடி, தரையில் தளர்ந்து விழுந்த நாயர் குடும்பங்கள், 'ஒவ்வொரு ஆளுக்கும் ஒவ்வொரு பங்கு' என்ற கடைசி அடியினால் சின்னாபின்னப்பட்டுப்போயின.

இந்து சமுதாயத்திலிருந்து பிரிந்து போனவர்களும், ஒரு உறுதியான நம்பிக்கையை கடைப்பிடிப்பவர்களும், தங்களுக்குள் ஒரு கட்டாக நிற்கும் இயல்பு உடையவர்களுமான கிறிஸ்தவர்கள், தங்களைச் சுற்றி நடக்கும் இந்தச் சமூகப் போராட்டத்துக்கு வெளியே நின்றுகொண்டு, தங்களுடைய இடைவிடாத உழைப்பினாலும் முயற்சியினாலும் பணக்காரர்களானார்கள். அவர்கள், பழைய சமூகத்தின் அஸ்திவாரம் இடிந்துபோனாலும், அதன்மேல் புதிய கட்டடத்தை உன்னதமான நிலையில் நிர்மாணித்தார்கள்.

பல தலைமுறைகளாகத் தாங்கள் அனுபவித்து வந்த அடிமை வாழ்வை எதிர்த்துப் போராடியதன் மூலம் ஈழவர்கள், புதிய சமூக சீர்திருத்தங்களை ஏற்படுத்தும் புரட்சியின் தீக்கொழுந்துகளானார்கள். அதனால் அவர்களுக்கு அதிகப் பொருளீட்ட முடியாமற் போனாலும், அவர்கள் சிந்தனை, சமூகம் என்ற இரண்டு துறைகளிலும் புதிய சிந்தனைகளைத் தோற்றுவித்து நாட்டுக்கு நன்மை செய்தார்கள். 'பழமை' என்பது அடிமை வாழ்வைக் குறித்ததால், அவர்கள் பழமையை அறவே வெறுத்தார்கள். 'புதுமை' சுதந்திரத்தின் அறிகுறி என்பதால், பாகுபாடின்றி எந்தப் புதுமையையும் வரவேற்றார்கள்.

முக்கோணக்கரையில் தகர்ந்துபோன நாயர் வீடுகளின் சொத்தெல்லாம் கிறிஸ்தவர்கள் கையில் கிடைத்துவிட்டது. பாக்கி ஈழவர்களின் கையில் கிடைத்துவிட்டது. நாயர் தரவாடுகள் பழமையின் சவக்குடில்கள் ஆயின. முண்டை இறுக்கி உடுத்திக்கொண்டு பசியை அடக்கி, தலையை உயர்த்தி நடந்து கொண்டிருந்த நாயர்கள், வேறுவழியில்லாமல் மற்ற நாடுகளை நோக்கிப் புறப்பட்டார்கள். அவர்கள் போகாத இடமில்லை என்று ஆயிற்று. இந்நாட்டிலிருந்து மூட்டை கட்டினால்தான் நல்லது என்ற நிலை ஏற்பட்டது.

சொற்களின் மாயம் என்ன? எண்ணங்களின் ஆற்றல் எப்படிப்பட்டது? வாக்கியங்களின் 'டெக்னானாஜி' – தொழில்நுட்பம் அபாரமானது. அந்த வரிகள் நமக்கு வாழ்க்கையைப் படம்பிடித்துக் காட்டவேண்டும். அந்த வாசகங்கள் சொல்லாத பல கதைகளையும் தொடர்ந்து இதயவீணையில் மீட்ட வேண்டும். உண்மையில் நிலப்பிரபுத்துவத்தின் வீழ்ச்சி மிகப்பெரிய வரலாறு. கல்வித்துறைக்கும் வியாபாரத்துறைக்கும் மாறியவர்கள், நகரங்களுக்கு குடிபெயர்ந்தவர்கள், நாடு விட்டு நாடு புலம்பெயர்ந்தவர்கள், வறட்டு கௌரவத்தால் வீழ்ந்தவர்கள், மதுவுக்கு அடிமையானவர்கள், பண்பாட்டுச் சீரழிவுக்கு ஆளானார்கள், வறுமைக் கோட்டுக்கு கீழே தள்ளப்பட்டவர்கள் இப்படி சொல்லிக்கொண்டே போகலாம்.

"கிராமத்தில் மாறுதல்களைக் காண முடிந்தது. பட்டணத்துக்குப் போகும் வழியில் இருபுறங்களிலும் புதியவீடுகள் எழுந்தன. தோப்புகளும் நிலங்களும் அரும்பாடுபட்டதன் விளைவுகளைக் காண்பித்தன. எங்கும் நிலமகள் அருள் புரிந்தாள். ஈழவர்கள் சிறிய முறையில் பல தொழில்களையும் செய்ய முன்வந்தார்கள். அவர்களில் சிலர் பெரிய பணக்காரர்களானார்கள். மாதவன் காண்ட்ராக்டர் முதலில் கள்ளுக்கடைகள் மூலம் தொடங்கி பிறகு மராமத்து இலாகாவின் குத்தகைக்காரனாக ஆனான். அதன் மூலம் ஒரு பெரிய இரண்டடுக்கு மாளிகை உயர்ந்தது. அடுத்தாற்போல மாமன் முதலாளியும் ஒரு மாளிகை கட்டினான். அப்போது கோவிந்தன் வைத்தியருக்கும், தாமும் ஒரு மாளிகை கட்டவேண்டும் என்ற ஆவல் தோன்றியது. அவருடைய வீடு சந்தைக்குப் பக்கத்தில் கட்டப்பட்டது. அந்தக் கட்டடத்தின் ஒரு பாகத்தில் பாஸ்கரன் நாயரும் சுகுமாரன் நாயரும் ஒரு கூட்டுறவு விவசாய சங்கத்தை ஆரம்பித்தார்கள். சங்கத்தில் அநேகம் பேர்கள் அங்கத்தினர்களாகச் சேர்ந்தார்கள். மாதவன் காண்ட்ராக்டர் தான் தலைவர், சுகுமாரன் நாயர்தான் காரியதரிசி. சங்கம் வேகமாக முன்னேறியது.

"இச்சங்கத்திலும், 'ஸ்ரீ நாராயண யோகம்' ஆபிசிலும் தினசரிப் பத்திரிகைகள் சில வருவதுண்டு. அவற்றை வாசிப்பதற்கும், பொது விஷயங்களைப் பற்றி வாதிப்பதற்கும் அங்கே வாலிபர்கள் நாளும் வந்து கூடினார்கள். வாதப்பிரதிவாதங்கள் – முக்கியமாக இரண்டு விஷயங்களைப் பற்றியது.

ஒரு சாரார் சொன்னது இதுதான்: "இந்திய தேசிய காங்கிரசும் காந்திஜியும் சுதந்திரப் போராட்டத்தின் முன்னணியில் நின்றாலும், சமூக சட்டதிட்டப்படி அவர்கள் பிராமணர்களுக்கு அடங்கி நிற்பவர்களே" மற்றக் கட்சியினரின் வாதம் முற்றிலும் வேறு: "காந்திஜியும் காங்கிரசும் தாழ்த்தப்பட்ட மக்களுடைய உற்ற நண்பர்கள் என்றும் பிரிட்டிஷ் அரசாங்கம் இந்தியாவை விட்டு ஒழிந்தால் தான் சரியான, சமத்துவமான சமூக சீர்திருத்தம் நமது நாட்டில் ஏற்படும் என்றும் அவர்கள் நினைத்தார்கள். கடவுளும் மதமும் வேண்டுமா வேண்டாமா என்பது பற்றிய சிந்தனைகள் தான் மற்றொரு கருத்து வேற்றுமை. காந்திஜி, காங்கிரஸ், மதம், கடவுள் - இவற்றுள் நம்பிக்கை உள்ளவர்கள் கதர் உடுத்தினார்கள். மற்றவர்கள் கதரைப் பரிகாசம் செய்தார்கள்."

நாம் நம்முடைய ஊரிலே பார்க்கிறோமல்லவா சாராயக்கடை நடத்துகிறவர்களும் பொதுப்பணித்துறை ஒப்பந்தக்காரர்களும் பெரும்புள்ளிகளாக உலா வருகிறார்கள். அடுத்ததில் மருத்துவர்கள். இதெல்லாம் பொருள் ஈட்டும் மையங்களாக இருக்கின்றன. ஊருக்கு வெளியே புதிய வீடுகள் எழுகின்றன. இதையெல்லாம் அன்றே சொல்லிவைத்திருக்கிறார் கேசவதேவ். சிதைந்துவரும் குடும்பத்தின் ஒரு கிளையான ராஜசேகரன், விவசாயத்திலிருந்து வியாபாரத்திற்கு வருகிறான். அவனது வணிகப்புத்தியையும், மனஉறுதியையும் அழகாக விவரிக்கிறார் கேசவதேவ்.

"அவன் ஒரு வர்த்தகன். அதில்தான் அவனுக்கு ருசி. அவனுடைய வியாபார முறையே தனி. அவன் எந்த வீட்டிலும் ஏறிச்செல்வான். அங்கே விற்பதற்கு ஏதாவது உண்டானால் வாங்குவான். வாங்குவதற்கு ஏதாவது வேண்டுமானால் விற்பான். இத்தகைய வியாபாரத்தில் அவனுக்கு ஒரு நாளைக்கு இரண்டு மூன்று ரூபாய் கிடைக்கும். அவன் சாதாரண வியாபாரி அல்ல, மங்கலச்சேரி தரவாட்டைச் சேர்ந்த பிள்ளை. பேரும், விலையும், நாணயமும் உள்ள ஒரு பையன். அதனால் அவனை எல்லோரும் விரும்பினார்கள். தேங்காய், மாங்காய், சேம்பு, மிளகு, பலாப்பழம், கோழிமுட்டை இத்யாதி என்னவெல்லாம் உண்டோ அதையெல்லாம் வாங்கவும், விற்கவும் செய்வான். அவன் வாங்குவதில் 'ஆனைக்கும் அரைப்பணம்தான்' என்ற கொள்கையையும், விற்பதில் 'குன்றுமணிக்கும் கும்பாரப் பணம்' என்ற தத்துவத்தையும் கடைப்பிடித்தான், அவனுக்கு வேண்டிய விலை கிராமத்தில் கிடைக்கா விட்டால், பட்டணத்துக்குக் கொண்டுபோய் விற்பான். எப்படியாவது ஒரு நாளைக்கு நாலைந்து ரூபாயாவது லாபம் கிடைக்காவிட்டால் அவனுக்குத் தூக்கம் வராது."

பணம் சேர்ப்பது புண்ணியம்; செலவழிப்பது பாபம் – இதுதான் அவனுடைய மந்திரம். தாகத்தால் உடல் நலிந்தாலும் ஒரு பைசா செலவு செய்து தாகசாந்தி செய்து கொள்ளமாட்டான். எங்கே போனாலும் வீட்டுக்கு வந்துதான் சாப்பிடுவான். வீட்டிலிருந்து என்ன கிடைத்தாலும் சரி கஞ்சியோ, சோறோ, மரவள்ளிக்கிழங்கோ, சேம்போ – எதானாலும் பரவாயில்லை சாப்பிடுவான்; வயிறு நிறைய வேண்டும். அவன் வரும்போது சாப்பாடு தயாராக இல்லையானால் சுயம்பாகம் செய்வதற்கும் அவன் தயங்கமாட்டான். அவன் வேறு வீடுகளில் ஒன்றுமே சாப்பிடமாட்டான். அப்படிச் செய்தால் பிறகு அவர்களிடம் எப்படி நிர்தாட்சணியமாகச் சாமான்களுக்கு விலைபேசுவது?




**அண்டை வீட்டார் | பி.கேசவதேவ்**
**தமிழில்: கே.சி. சங்கரநாராயணன்**
**வெளியீடு: வஉசி நூலகம், சென்னை | விலை: ரூ. 300**

ஊர்க்காரர்கள் அவனது சாமர்த்தியத்தை மெச்சிக் கொண்டார்கள். ஒரு கிழவன் சொன்னான்: "இத்தனைக்கு அத்தனையானால், அத்தனைக்கு எத்தனை? மங்கலச்சேரி பாக்கியம் செய்திருக்கு. ஒரே ஒரு வேர் பாக்கியானாப்போதும்; அதேலே இருந்து முளைச்சுக்கும்."

பாஸ்கர குருப்பு ஒரு அபிப்பிராயமும் சொல்லவில்லை. ராஜசேகரனைப் பார்க்கும்போதெல்லாம், 'ஏதாவது உதவி வேண்டுமா? என்று கேட்பான்?'

ராஜசேகரன், "வேண்டும். ஏதாவது வாங்கவோ, விக்கவோ உண்டானால், எங்கிட்டே சொல்லுங்கள்" என்பான்.

ஒரு கட்டுரைக் களஞ்சியமோ, ஒரு கதைத்தொகுதியோ, ஒரு நாவலோ, ஒரு வாழ்க்கை வரலாறோ தலைமுறைகளைத் தாண்டியும் பீனிக்ஸ் பறவைபோல மறுபடியும் மறுபடியும் மீண்டு எழுவதுண்டு. 1970களில் அகிலனின் 'பாவை விளக்கு' நாவல் வெளிவந்தது. அதற்கு மறுபடியும் 1990களில் தினமணி தமிழ்மணியில் ஒரு நாளிதழின் அரைப்பக்க அளவுக்கு மதிப்புரை வந்திருந்தது. ஆகவே ஒரு புத்தகம் எப்பொழுது எழுதப்பட்டது என்பது முக்கியமல்ல. அது எந்த அளவுக்கு தேசத்திற்கு தேவையாக இருக்கிறது என்பது தான் முதன்மையானது. நிலவுடைமைச் சமுதாயத்தின் வறட்டு கௌரவத்தால் சீரழியும் பொருளாதாரம் பற்றியும் மேன்மைப் பேராட்டம் என்று குறிக்கும் கேசவதேவ் ஓரிடத்தில் எழுதுகிறார்:

"கொலைகேஸ் ஜெயித்தால் மட்டும் போதுமா? தண்டனை கிடைக்காமலிருந்தால் மட்டும் போதுமா? மங்கலச்சேரி வீட்டின் அந்தஸ்துக்குத் தகுந்த மாதிரி கேசை நடத்த வேண்டாமா? அதற்கு ஏராளமாகச் செலவு செய்ய வேண்டுமே! மங்கலச்சேரிக்காரர்கள் பெயர் பெற்ற வக்கீல்களை அமர்த்தி வாதித்தால், பச்சாழிக்காரர்கள் அதற்குக் குறைய முடியுமோ? அவர்கள் ஊருக்குப் பெரியவர்களாயிற்றே? இப்படியாகப் பெரிய வக்கீல்களுக்கு இரண்டு பேரும் பணத்தை வாரியிறைத்தார்கள். ஊரில் உள்ள வக்கீல் குமாஸ்தாக்கள், பத்திரம் எழுதுபவர்கள், சாட்சி சொல்வதே தொழிலாக உள்ளவர்கள் போன்ற ஆட்களுக்கு நல்ல வரும்படி கிடைத்தது. அவர்கள் இரண்டு வீடுகளையும் மொய்த்தார்கள்.

பத்மநாபபிள்ளையும், மனைவியும், சகோதரர்களும் இப்போது வேறு எதையுமே பொருட்படுத்தவில்லை. எல்லாம் தொலைந்தாலும் கேஸ் ஜெயிக்க வேண்டும். குடும்பத்தின் கௌரவம் நிலை நிற்க வேண்டும். அவ்வளவுதான். சொத்து போனால் போகிறது. அண்ணனை தண்டிச்சு அப்புறம் நாங்களெல்லாம் எதுக்காக உயிரை வச்சிக்கிட்டு இருக்கணும்?

மங்கலச்சேரியில் பல குழப்பங்கள் உண்டாகத் தொடங்கின. நிலங்களிலும் தோப்புகளிலும் மகசூல் குறைந்தது. திருட்டுபுரட்டு அதிகரித்தது. பத்மநாபபிள்ளை அதைக்கண்டு வருந்தவோ, தடைசெய்யவோ முயலவில்லை. அவருடைய சிரத்தையெல்லாம கேஸ் நடத்துவதில் முனைந்திருந்தது. அதனால் வரவு குறைந்தது. செலவு தாங்கமுடியா அளவுக்கு வளர்ந்தது. ஆனால், வரவையும் செலவையும் யார் கேட்டார்கள்? கேஸ் நடத்தவேண்டும்; ஜெயிக்க வேண்டும் அவ்வளவுதான். அதுதான் அவர்கள் கவலை.

தலைநகரில் கீர்த்தி வாய்ந்த ஒரு வக்கீல் இருந்தார், அந்த வக்கீலை தங்கள் கட்சிக்கு அமர்த்துவதில் இரண்டு குடும்பத்தாரர்களுக்கும் போட்டி ஏற்பட்டது. வக்கீல் பீஸ் ஏலம் கூறுவது மாதிரி உயர்ந்தது. அதில் மங்கலச்சேரிக்காரர்கள் ஜெயித்தார்கள். அவருடைய உதவிக்குக் கூட இரண்டு வக்கீல்கள், கேஸ் விசாரணை தொடங்கியது. அதற்குத் திருவிழாவைப்போல் கூட்டம் வந்தது. விசாரணைக்காகத் தினம் தினமும் முக்கோணக் கரையிலிருந்து வாதிகள், பிரதிவாதிகள், சாட்சிகள், பந்துக்கள், வேலையாட்கள், மற்ற பொதுஜனங்கள் – இப்படியாக இரண்டு கட்சிகளிலிருந்தும் ஐம்பது, அறுபது பேர்கள் போய்க்கொண்டிருந்தார்கள். இரண்டு குடும்பங்களின் எல்லாச் சொத்துகளையும் அழித்தவண்ணம் கேஸ் முன்னேறிக்கொண்டிருந்தது.

தகழி, வைக்கம் பஷீர், எம்.டி.வாசுதேவன் நாயர், பொற்றேகாட், கேசவதேவ் போன்ற இலக்கியமேதைகளை தமிழகம் தமது அண்டைவீட்டாராகவே மதிக்கிறது. கேரள பொதுவுடைமை இயக்கத் தலைவர்கள் அனைவருக்கும் ஆதியராக இருந்தவர் பி.கேசவதேவ், இடதுசாரி எழுத்தாளர்களைப் புறக்கணித்துவிட்டு இலக்கியத்துறையை எண்ணிப் பார்க்கவே முடியாது. அந்த வகையில் பிதாமகர்களில் ஒருவர் பி.கேசவதேவ், கே.சி. சங்கர நாராயணனின் மொழிபெயர்ப்பு இயல்பாக நேர்த்தியாக இருப்பதும் வெளியிட்ட வ.உ.சி பதிப்பகத்தாரின் பணியும் பாராட்டத்தக்கது.

●

**கட்டுரையாளர்: எழுத்தாளர்.**

நேர்காணல்



# மிகவும் கவனமாக எழுத்தைக் கையாளுகிறேன்

## லட்சுமிஹர்

**சந்திப்பு: கவிஞர் பூர்ணா**

லட்சுமிஹர், மதுரை மாவட்டம் உசிலம்பட்டியில் பிறந்தவர். தற்சமயம் திண்டுக்கல்லில் வசித்து வருகிறார். பொறியியல் மற்றும் படத்தொகுப்பில் பட்டம் பெற்றிருக்கிறார். திரைப்பட உருவாக்கம் சார்ந்த பணிகளில் இயங்கி வருபவர். இதுவரை நான்கு சிறுகதைத் தொகுப்புகள் யாவரும் பதிப்பகம் மூலம் வெளிவந்திருக்கிறது. 2025 ஆம் ஆண்டிற்கான சாகித்ய அகாடமியின் யுவ புரஷ்கார் விருதினைப் பெறுகிறார்.

அவருடனான நேர்காணல்

**உங்கள் மொழியின் அடர்த்தி கவிதையின் கூறுகளையும், படிமங்கள் நிறைந்ததாகவும் இருக்கிறதே ?**

பெரும்பாலும் மொழி, நாம் எடுத்துக் கொண்ட கதைகளை கடத்துவதற்கான மூலமாகவே பார்க்கிறேன். அப்போது கதை பிரதான எல்லைகளை இயல்பாய் கடந்துவிடுகையில் மொழியும் அதன் பின்னே செல்ல வேண்டிய கட்டாயம் ஏற்படுகிறது. ‘கதைகளே அதன் மொழியையும், படிமங்களையும் தீர்மானிக்கிறது எழுத்தாளன் அல்ல’ என்பதைத் தீர்க்கமாக நம்புகிறேன். அதற்கு ஏற்றார் போல என்னுடைய ஆம், கடிந்து போன்றவை வேறு பாணியிலும், புலி சாரை, ஆசீர்வதிக்கப்பட்டவன், மெழுகு போன்றவை அதன் எதிர்த் திசையிலும் பயணிப்பவை.

**உங்கள் படைப்புகளின் தலைப்புகளில் தனிக் கவனம் செலுத்துவது போல உணர்கிறேன். ஒரு வகையில் கட்டமைப்பைக் கட்டுடைத்தலுக்கான முயற்சியா ?**

எந்த வித கட்டமைப்பையோ அல்லது எதன் அடிப்படையான நீட்சியையோ கடக்க வேண்டும் என்கிற விதத்தில் ஒருவரால் இயங்க முடியாது. அவர்களின் வாழ்க்கை முறையுடனான உரையாடல்களிலிருந்து தான் அவை பிறக்கின்றன. அவை தங்களுடைய தேர்வாக இருக்கையில் புதிய பார்வை வெளிப்படுகிறது. அதன் அடிப்படையிலேயே எனது தலைப்புகளும், கதையும் உருமாறுகிறது. சொல்லப்போனால் வரைமுறைகள் என்று எதையும் நான் வகுத்துக் கொண்டது கிடையாது.

**உங்களின் சிறுகதைகளை வாசிக்கையில் தேர்ந்த சிறுகதை உத்தியை அறிந்த ஒருத்தர் அதன் படி நடக்காது போல உள்ளது.**

எதையும் எதிர்பார்த்திடாது இயங்குதலில் பெரும் சுதந்திரம் இருக்கிறது. அது நம்மை எங்குக் கொண்டு போய் நிறுத்தினாலும் நாமே அதற்குக் காரணம் என்றிருக்கையில் முயன்று பார்த்தல் மிக எளிது. அப்படியாகவே என்னுடைய கதைகளை அணுகுகிறேன். அவ்வெண்ணமே இப்போது இயங்கிக் கொண்டிருக்கும் சிறுகதைகளில் பளிச்சென்று தெரிகிறது. அவைகள் வாசிப்பவர்களுக்குக் கண்டிப்பாக புது அனுபவமாக இருக்கும்.

**நவீன இலக்கியத்தில் இயங்கக் கூடிய இளம் படைப்பாளியின் சிறுகதைகளில் தொன்மம் கச்சிதமாக இருக்கிறதே ?**

தொன்மம் சார்ந்த கதையாடல்களை மிகுந்த கவனத்தோடு கையாளுகிறேன். என்னளவில் அவை வெறும் தகவல்களாக மட்டும் நின்றிடக் கூடாது என்பதில் கவனமாக இருக்கிறேன். அவை வெளிக்கொணரும் சூழ்நிலையினை எந்த வித சார்பும் இன்றி அணுகிட முயல்வதாலேயே என் கதை உலகத்தில் அவைகள் புதிய பரிணாமம் கொள்வதாகப்படுகிறது. நவீனத்தில் இயங்கக் கூடிய ஒருவனின் கைகளில் கிடைத்த நம்பிக்கையாக அவற்றை என் கதைகளில் உணருகிறேன்.

**காட்சிகளின் கோர்வைகளில்(வசனம் இல்லாமல் நகர்த்துவது) அதை கதை ஒன்றின் இடையில் சில வரிகளில் எழுதிசெல்வதை வாசகன் புரிந்து கொள்ள முடியும் என நினைப்பது பற்றி ..அதுமட்டுமின்றி ஒரு வரியையேனும் விடாமல் வாசிக்க வேண்டிய படைப்பாக மாறுவதை குறித்தும்.. ?**

நம்பிக்கையே. வாசகர் தன்னை பிரதியுடன் இணைத்துக்கொள்ள புது புது சாத்தியங்களை உருவாக்க முயல்கிறேன். நான் திரைப்படம் சார்ந்தும் இயங்குவதால் இக்கேள்வி பெரிதும் எழுகிறது. ஏன் மொழியைத் திருகுகிறார்? என்று. நான் அப்படி ஒருபோதும் செய்தது இல்லை. இவர்கள் சொல்லக் கூடிய மொழி திருகல்கள் எல்லாம் கதையின் பொருட்டு வெளிப்படுபவை. எடுத்துக்காட்டு 'செல்மா சாண்டாவின் அலமாரிப் பூச்சிகள்' கதையை எடுத்துக்கொள்ளலாம் அதை சாதாரண மொழிநடையில் சொல்லவே இயலாது. அதைவிடுத்து என்னுடைய இயல்பான கதைக் களங்களில் அச்சிக்கல் என கருதப்படுவது இருக்காது என்பதை இங்கே கூற வேண்டும். காட்சித் துறையில் இருக்கக்கூடிய உண்மைத் தன்மை எழுத்தில் மாறியது என்றால் வாசகர்களுக்கு வேலையே இல்லை. ஆகையால் ஒரு பத்திக்கும் இன்னொரு பத்திக்குமான 'ஸ்டாக் ஷாட்டை' நான் என் திரைப்படங்களிலேயே பயன்படுத்த விரும்பவில்லை, எப்படி என்னுடைய எழுத்தில் எழுதுவேன். வாசகர்கள் என் கதைகளில் சுலபமாகப் பயணிக்கலாம் முன் தீர்மானங்கள் ஏதும் இல்லை என்றால்.

**வாசிப்பு அல்லது கலை ரீதியான வடிவங்கள் சமூக மாற்றத்திற்கானவையாக எப்படி மாற்றுகிறீர்கள்.. ? அது மட்டுமில்லை உங்கள் படைப்புகளில் நேர்த்தியான ஒரு அரசியல் தென்படுகிறது.**

படைப்பு தனி மனித மாறுதல்களைக் கண்டிப்பாக நிகழ்த்தும் என்பதில் எந்த வித சந்தேகமும் இல்லை. ஆனால் அது இங்கு சமூக அங்கத்தின் கூறுகளுக்குள் நுழைய வேண்டும் என்றால் அதற்கான அரசும் அதிகாரமுமே ஒரே வழி. படைப்பு எனக்குள் எத்தனையோ மாற்றங்களைக் கொண்டு வந்து சேர்த்திருக்கிறது, சேர்த்துக் கொண்டே இருக்கிறது.

**உங்களின் முந்தைய தொகுப்புகளிலும் சரி சமீபத்திய தொகுப்புகளிலும் சிலர் கூசுவதை எழுதும் நோக்கம் குறித்து ? புனைவையும் எழுத்தாளரையும் ஒப்பிடுவதை பற்றி..**

வெளிப்படையாக இருப்பதில் எந்த தவறும் இல்லை. இங்கு மற்றவர்களின் சுதந்திரத்தைப் பறிக்காத உங்களின் வெளிப்படைத் தன்மை வரவேற்புக்குரியது. என்னுடைய படைப்பு மனநிலையும் அப்படியே. எதையும் நான் மறைத்து வைத்துக் கொள்ள விரும்பவில்லை. என் கதைகள் என்னைச் சார்ந்ததாக கருதிக் கொள்வதில் ஒருவருக்கு ஆர்வம் இருக்கும் எனில் இருக்கட்டுமே. அதுவும் வாசிப்புக்குள் சேர்ந்துவிடும்.

**இளம் படைப்பாளியாக உங்கள் படைப்புகளில் எந்த வித போலித்தன்மையும் இன்றி ஒரு உண்மை புலப்படுகிறது..**

மனித உணர்வுகள் தன் வரையறைக்குள்ளேயே அனைத்தையும் மதிப்பிடுவது வழக்கம். அது ஒருவகையில் இதுநாள் வரை அவர்களுக்கு சொல்லிக்கொடுத்ததுவே. யார் மீதும் இங்குக் குறை கூற முடியாது. இப்படியிருக்க எழுத்தாளன் கொண்டுவரும் புனைவை தங்களுக்கு ஏற்றப்படி வகைப்படுத்திக் கொள்ளும் வாசகர்களை அனுமதித்தே ஆக வேண்டும். ஏனென்றால் அவர்கள் தான் எழுத்தின் பல சாத்தியத்தைத் திறந்து வைக்கிறார்கள். அவர்கள் உண்மையான ஒரு எழுத்தை சாதாரணமாக கண்டுபிடித்து விடுவார்கள். நான் நினைப்பது எல்லாம் நேர்மையான கதைகளைச் சமரசம் இன்றி சொல்ல முயல்வதே. அது எந்த வடிவத்திற்குள் இருந்தாலும் அதை முயன்று பார்க்க தயங்கமாட்டேன்.

**ஒவ்வொரு விருது அறிவிக்கப்படும் போது விமர்சனம் எழும், ஆனால் உங்கள் நூல்களையோ அல்லது உங்களையோ அன்றே பலர் அறிந்து கொண்டதாகப்படுகிறது. அதை பற்றியும்...சாகித்ய அகாடமி யுவ புரஷ்கார் விருதை எப்படி பார்கிறீர்கள் ?**

அது உண்மையில் வேடிக்கையான விஷயம். அதற்கு காரணமாக நான் பார்ப்பது 'தொடர்ந்து இயங்குதலில் இருந்த என் கவனம் அதைக் கொண்டு போய் சேர்ப்பதில் இல்லை' என்று தோன்றுகிறது. இருப்பினும் அறுபது கதைகளுக்கு மேல் எழுதியிருக்கிறேன். தீவிரமான சிற்றிதழ்களில் தொடர்ந்து எனது கதைகள் வந்திருக்கின்றன. அப்போதும் தெரியவில்லை என்றால் என் பிழை இல்லை. என்னவோ நன்றாக இயங்கும் பட்சத்தில் நமக்கான இடம் உருவாகத் தொடங்கியிருக்கிறது என்பதாக இதை எடுத்துக் கொள்கிறேன். வாசிக்காதவர்கள் இனியேனும் வாசிக்கட்டும். வாசிக்கவில்லை என்றாலும் பிரச்சனை எதுவும் இல்லை.

இளம் படைப்பாளிகளை ஊக்கப்படுத்த எடுத்த முயற்சி. என்னைப் போன்ற ஊர் பேர் தெரியாத ஒருவனுக்கு படைப்பின் அடிப்படையில் மட்டும் விருது கிடைப்பது இங்கு எழுதும் பலருக்கு அதன் மீது நம்பிக்கை எழும். விருது பெற்றது மகிழ்ச்சி. தொடர்ந்து இயங்க இயற்கையிடம் வேண்டிக்கொள்கிறேன்.

**அடுத்தகட்ட முயற்சிகள் ?**

ஐந்தாவது சிறுகதைத் தொகுதி தயாராக இருக்கிறது. திரைக்கதையையும் முடித்துள்ளேன். படம் பண்ணுவதற்கான பணிகள் கூடி வரும்பட்சத்தில் மகிழ்வேன்.

●



# மரணத்தில் வீசப்படும் பூக்களுக்கு வாசம் இல்லை

உயிரினங்களில் மனித இனம் மட்டுமே பாகுபாடு காட்டவும் பாகுபாடு பார்க்கவும் கற்பிக்கப்பட்ட கூட்டமாக வளர்ந்து வந்திருக்கிறது. அறிவின் தேவையும் அறிவின் வளர்ச்சியும் பண்பாடும், கலாச்சாரமும் குழு மனப்பான்மையை ஜாதிய கட்டமைப்பை வளர்த்து விடுவதில் பெரும்பங்கு ஆற்றியிருக்கின்றன.

ஏற்றத்தாழ்வு எப்பொழுது தொடங்கியது என்று அறிய முடிவதில்லை. வர்க்க முரண்களும் அடிமைப்படுத்தும் மனோபாவமும் யார் வளர்த்து விட்டார் என்று தெரியவில்லை.

காலங்காலமாக அதிகாரவர்க்கம் சுரண்டலுக்கு எதிராக போர்க் குரல் எழுப்பும் வலிமைமிக்க மக்கள் கூட்டத்திற்கு தலைமை ஏற்பவர்களை துரோகத்தால் வீழ்த்தியே வந்து இருக்கிறது.

எத்துணை வீரம் செறிந்த போராட்ட குணமிக்க தலைவர்களை எழுச்சியின் நாயகர்களை நேரடியாக உண்மையாகப் போராடி வீழ்த்த முடியாமல் துரோகம் செய்து நம்ப வைத்து கழுத்தறுத்து இருக்கிறது.

உலக நாடுகளில் எழுந்த அதிகாரத்திற்கு எதிரான போராட்டங்கள் எல்லாம் நம்பிக்கை துரோகத்தின் மூலமே சாய்க்கப்பட்டிருக்கிறது. நம்பிக்கை துரோகம் இல்லாது இருந்தால் எத்தனையோ போராட்டங்கள் வெற்றியில் நின்று இருக்கும். சமூக வெளியில் பெரிய மாற்றத்தை அவை உருவாக்கி இருக்கும்.

பெரும்பாலான உலக வரலாறுகள், உலக இலக்கியங்கள் இந்த துரோகத்தின் சாயலை அதன் வீரியத்தை அதனால் ஏற்பட்ட துக்ககரமான நிகழ்வுகளை மிகுந்த வேதனையை அடர்த்தியாக பதிவு செய்து வைத்திருக்கிறது.



யாழ் எஸ் ராகவன்



ஒரு காலனியில் ஒரு ராணி மு .காத்தவராயன்
வெளியீடு: என்சிபிஎச், சென்னை | விலை: ரூ. 90

மனச்சாட்சி உள்ள மனிதர்களுக்கு அவ்வகைப் பட்ட பிரதிகளை படிக்கின்ற பொழுது கொஞ்சம் மேலும் மாற்றம் ஏற்படும் என்ற மாறாத நம்பிக்கையில் தான் இங்கே முற்போக்கான பிரதிகள் படைக்கப்படுகின்றன.

எத்தனை ஆயிரம் நூல்கள் அத்தகு பெரிய நம்பிக்கையுடன் தான் சுரண்டலுக்கு எதிரான, வர்க்க முரண்களுக்கு எதிரான, சாதிய அடக்குமுறைக்கு எதிரான, ஏற்றத்தாழ்வு இல்லாத சமுதாயத்தை உருவாக்க வேண்டும் என்ற உயர்வான நோக்கத்திற்காக பல்வேறு படைப்புகள் சீரிய சிந்தனையோடும் மொழிக் கூர்மையோடும் அர்த்தப் பொருண்மையோடும் படைக்கப்பட்டு வந்திருக்கின்றன.

ஒரு படைப்பாளியின் பேனா முனை சமூக மாற்றத்தின் நெம்புகோலாக விளங்கித் திகழும் என்பதில் இரு வேறு கருத்து இல்லை. கால மாற்றத்திற்கான திறவுகோலாக எழுத்தாளனின் எழுதுகோல் பயன்படும் என்பதில் அசைக்க முடியாத நம்பிக்கை உண்டு

ஒரு காலனியில் ஒரு ராணி என்ற குறுநாவல் மிக நுட்பமான அரசியலை தெளிவாகப் பேசுகிறது.

திருவண்ணாமலை மாவட்டம் பெண்ணாத்தூர் வட்டம் ஆர்ப்பாக்கம் என்ற ஊரின் பின்னணியில் எழுதப்பட்ட தலித் எழுச்சியைப் பேசுகின்ற அழகான நாவல்.

வாளில் அழகு தேடாதே, கூர்மை பார் என்பார் காசி ஆனந்தன்.

நாவலின் தொடக்கமே ஒரு ஊரில் காலனி பகுதியில் மட்டுமே மின் கம்பங்களின் பழுதுகள் சரி செய்யப்படாமல் இருக்கின்றன. காலனிகள் மட்டுமே மழைத் தண்ணீர் அதிகமாக தேங்கி இருக்கிறது. காலனியில் மட்டுமே குடிசை வீடுகள் அதிகம் நிறைந்திருக்கிறது. காலனியில் மட்டுமே அடிப்படை வசதிகள் இல்லாமல் இருக்கிறது.

எதிர்த்து கேள்வி எழுப்புபவரையும் அடக்க நினைக்கிறது அதிகார கூட்டம். கருப்பன் என்பவன் பறை இசைக் கலைஞன். தான் சம்பாதித்து உருவாக்கி வைத்த வீட்டில் மாடி வீடு கட்ட ஆசைப்படுகிறான். அந்த காலனியில் எல்லோரும் குடிசை வீடு தென்னை ஓலையும் பனை ஓலையும் கட்டி இருக்கும் போது இவன் மட்டும் காரை வீடு கட்டி இருப்பது அந்த ஊரில் ஆதிக்க சாதியினர் கண்ணில் உறுத்துகிறது.

சாவு வீட்டில் மட்டுமல்லாது பறை என்ற இசைக் கருவி எல்லா இடங்களிலும் முழங்க வேண்டும். எல்லா விதமான குடும்ப நிகழ்வுகளிலும் மங்கலகரமான கருவியாக பறை முழங்க வேண்டும் என்பது இந்த நாவல் பேசுகின்ற முதன்மையான செய்தி.

கறுப்பனின் குடும்பம் மகன் வேலு மருமகள் மஞ்சுளா அவர்களுக்குப் பிறந்த பெண் குழந்தை வள்ளி.

இந்த வள்ளி தான் தாத்தாவிற்கு பிறகு பறை இசையை சிறப்பாக வாசிக்கும் பெண்மணியாக இருக்கிறாள். பறை இசையை சிறப்பாக வாசித்தாலும் பள்ளிப்படிப்பில் சோடை விடக்கூடாது என்று படிப்பில் கவனம் செலுத்த சொல்கிறது வள்ளியின் குடும்பம்.

முற்போக்கு சிந்தனை நிறைந்தவளாக கொடுமைகளை எதிர்க்கும் தைரியம் நிறைந்தவளாக மன வலிமை உடையவளாக போராட்ட குணம் உடையவளாக வள்ளி என்ற கதாபாத்திரம் படைக்கப்பட்டு இருப்பது மிகச் சிறப்பு.

அவள் படித்து தொடர்ந்து கல்லூரி படிப்பை முடித்து வேலைக்காக காத்திருக்கும் பெண்மணி. ஆனாலும் தாத்தாவினுடைய ஆசையின் காரணமாக பறையை நன்றாக வாசிக்கக் கூடியவள்.

சேரியில் ஒரு மரணம் நிகழ்ந்து விடுகிறது. அந்தப் பிணத்தை எடுத்துக் கொண்டு ஆதிக்க சாதியினர் வசிக்கும் தெருவில் செல்வதற்கு தடை விதித்த போது அருவாளைத்தூக்கி எல்லோரையும் எதிர்த்து அந்தப் பிணத்தை சுடுகாட்டுக்கு கொண்டு சேர்த்தவள் வள்ளி.

அந்த ஊரில் இரண்டு ரேஷன் கடைகள் உருவாக்குகிறார்கள். ஒரு ரேஷன் கடை காலனிக்காரர்களுக்கு மட்டும். ஊரில் ஆதிக்க சாதியினர் காலனி மக்கள் வசிக்கும் இடத்தில் இருந்து ரேஷன் பொருளை வாங்குவதற்கு

விரும்பவில்லை. எனவே காலனியில் தனியாக ஒரு ரேஷன் கடை உருவாக்க வேண்டும் என்று கோரிக்கை வைத்து அந்த கடைக்கு காலனி ரேஷன் கடை என்று பெயர் வைத்து விட்டார்கள்.

வள்ளி அங்குள்ள பெரிய மனிதர்களையெல்லாம் அழைத்து பஞ்சாயத்து போர்டு தலைவரிடம் சென்று அது என்ன காலனி ரேஷன் கடை? இதை முதலில் அழிக்க வேண்டும். எல்லா ஊரிலும் நியாய விலை கடை என்று மட்டும் தான் இருக்கிறது இங்கு மட்டும் என்ன காலனி நியாயவிலைக் கடை என்று எழுதி இருப்பது மிகவும் தவறு என்று சொல்லி ஒரு 50, 60 ஆட்களை வர வைத்து மிகப்பெரிய போராட்டத்தை நடத்தி உடனடியாக அது எம்எல்ஏவின் கவனத்திற்கு சென்று காலனி என்று சொல் அங்கே அழிக்கப்பட்டது.

இப்படி அந்த காலனியில் நடைபெறும் அறமற்ற செயல்பாடுகளுக்கு எல்லாம் அறச்சீற்றமாக எழுந்து படித்த பெண்ணாக வள்ளி செயல்படுவதாக கதாபாத்திரம் அற்புதமாக சித்தரிக்கப்பட்டுள்ளது.

திருவண்ணாமலை வட்டார வழக்கம் கவித்துவமான எழுத்து நடையும் நாவலுக்கு மேலும் மெருகு கூட்டுகிறது. மரணத்தில் வீசப்படும் பூக்களுக்கு வாசம் இல்லை என்பதாகட்டும். வானில் பறக்கும் பறவைகளை கருப்பு நட்சத்திரம் என்று சொல்வதாகட்டும். நிர்வாண உடல் இரண்டு பேசிக்கொண்டன என்று வருணிக்கும் இடமாகட்டும். அவள் தனது இரண்டு மார்புக்கு இடையில் செம்பருத்திப் பூவை வைத்துக் கொண்டாள் எனச் சொல்லுகின்ற இடமாகட்டும்.

மொழியின் கூர்மையும் மொழியின் அழகும் பிரதியின் தன்மையை மேலும் உயர்த்துவதற்கு உறுதுணையாக இருக்கிறது. கால நீரோட்டத்தில் எல்லாம் மாறிய பொழுதும் விஞ்ஞான வளர்ச்சி எவ்வளவு உச்சத்தை அடைந்த பொழுதும் இன்னும் மாறாமல் இருப்பது சாதிய மனோபாவம். இந்தியா முழுவதும் மிகப்பெரும் சாபக்கேடாக இருப்பது இந்த சாதிய பிணக்கு மட்டும்தான்.

பறை இசை கற்றுக் கொடுக்கும் பெண்ணாக மாறுகிறாள் வள்ளி. அங்கே ராம்குமார் என்பவன் வம்பாக அவளிடம் பேசி அவள் மனதைக் கரைத்து காதல் கொள்ளுகிறான்.

அவன் பேச்சில் மயங்கி அவனுடன் உறவு கொள்கிறாள் வள்ளி. பின்னர்தான் அவன் ஏற்கனவே திருமணம் ஆனவன், இரண்டு குழந்தைக்குத் தந்தை என்பது தெரிய வருகிறது.

ஆனாலும் இவள் மனதில் அவன் இடம்பெற்று விட்டான். அவனை அழிப்பது அவ்வளவு சுலபம் அல்ல. பெண்கள் ஒருவரை காதலித்து விட்டால் அதை மாற்றுவது கடினம்.

பொய்யான காரணங்கள் பல சொல்லி வள்ளியை ஏமாற்றி ஊரை விட்டு அழைத்துச் செல்கிறான் ராம்குமார். அங்கே நண்பர் வீட்டில் தங்க வைத்து மீண்டும் அவளுடன் உறவு வைத்து பிறகு அவளை ஏமாற்றி விட்டு சென்று விடுகிறான்.

ஒரு போராட்டக் களத்தில் ஆரம்பித்த கதை நம்பிக்கை துரோகத்தில் முடிவடைகிறது. அழகான வீரியமிக்க தைரியமான பெண்மணியை நம்ப வைத்து ஏமாற்றிய கதை ஒரு காலனியில் ஒரு ராணி.

படிப்பிலும் அறிவிலும் பறை இசைப்பதிலும் சமூக அக்கறையிலும் அழகிலும் சிறந்த ஒரு பெண்ணை நம்ப வைத்து ஏமாற்றுவதில் இந்த சமூகம் தொடர்ந்து தன்னுடைய தீவினையை செலுத்திக்கொண்டே இருக்கிறது.

ஆரம்பகட்ட எழுத்தாக இந்த நூல் ஆங்காங்கே தெரிந்தாலும் ஒரு புரட்சியை ஒரு போராட்டத்தை துரோகம் எப்படி வீழ்த்தியது என்பதை சொல்ல முற்பட்டு இருப்பதில் எழுத்தாளர் காத்தவராயன் கவனம் பெறுவார். பல இடங்களில் கவித்துவமான எழுத்து நடையில் நம்மை வாசிக்கத் தூண்டுகிறார்.

பறை இசையின் மேன்மையும் காலனியில் வசிக்கும் மக்களின் மனிதாபிமானமும் சிறப்பான இடத்தை பெற வேண்டும் என்கிற எழுத்தாளரின் தரிசனம் பிரதியில் மிகச் சிறப்பாக அமைந்திருக்கிறது.

நேரடி கதை சொல்லல் முறையில் சம்பவங்களை வரிசையாக சொல்லுகின்ற முறையில் கதை விறுவிறுவென நகர்கிறது. மாட்டுக்கறி, பன்றி கறி அரசியல் ஆதிக்க சாதியினர் சுடுகாடு கூட காரை வீடு கட்டிக் கொண்டிருக்கிறது. ஆனால் ஏழை எளிய மக்கள் பூச்சிகளும் பாம்பு, பல்லிகளும் நிறைந்த குடிசை வீடுகளில் தான் வாழ வேண்டும். கழிவறை வசதி கூட இல்லாத சூழ்நிலையில் தான் அவர்கள் நான்கு ஐந்து தலைமுறைகளாக தொடர்ந்து அல்லல் பட்டுக் கொண்டிருக்கிறார்கள் என்பதையெல்லாம் மிக நுட்பமாக போகிற போக்கில் காட்சிப்படுத்துவதில் எழுத்தாளர் உயர்ந்து நிற்கிறார்.

ஒடுக்கு முறைக்கு எதிரான தனது அழுத்தமான குரலை நாவலின் வழியே அழகியலோடு பதிவு செய்திருக்கிற எழுத்தாளர் காத்தவராயன் பாராட்டப்பட வேண்டியவர். இன்னும் பல வீரியமிக்க படைப்புகள் அழுத்தமாக ஆழமாக அவரிடம் இருந்து வரும் என்ற எதிர்பார்ப்புடன் வாழ்த்துக்கள்.

●

**கட்டுரையாளர்: எழுத்தாளர்**

# ஐங்குறுநூற்றுக் ‘கருத்துரை’ எனும் எடுத்துரைப்புக் கருவி

ஐங்குறுநூறு எனும் சங்கப் பனுவல் ஒரு வாசகனுக்கு மிக நெருக்கமானதாகத் தொடர்ந்து கட்டமைக்கப்பட்டு வருகிறது. ஐங்குறுநூறு உருவாக்கத்தில் நேர்த்தியான திட்டமிடல் பின்பற்றப்பட்டிருப்பதால் காலந்தோறுமான வாசிப்புக்கு ஏற்றதொரு (வசதியான) பனுவலாக அமைந்திருக்கிறது. திணை அடிப்படையில் பதிப்பித்தல், திணை அடிப்படையில் உரை எழுதுதல், திணை அடிப்படையில் ஆய்வு நிகழ்த்துதல், பத்துக்களின் அடிப்படையில் ஆய்வு செய்தல் என்கிற போக்குகள் ஐங்குறுநூற்றின் இயக்கத் தன்மையை உணர்த்துகின்றன. ஐங்குறுநூற்றைப் பொறுத்தவரையில் 500 பாடல்களையும் 50 கருத்துகளுக்குள் (தலைப்புகள்) அடக்கிவிடுகின்ற முறை பின்பற்றப்பட்டிருக்கிறது. அதாவது, படைப்பு, படைப்பாளரின் எல்லைகளை விரிக்காமல் 500 என்று வரையறுத்து அவற்றைப் பத்துத் தலைப்புகள், பத்துப் பத்துகள் என்கிற பகுப்புகளின்வழி ஐங்குறுநூற்றின் கட்டமைப்பு எளிமைப்படுத்தப்பட்டுள்ளது. அவற்றுள் அனைத்துத் தலைப்புகளும் பாடலுக்கு ஏற்றவாறு நேர்கோட்டில் இருந்தாலும் வேறுவேறு பத்துகளுக்குள் பாடல்களைப் பொருத்திப் பார்க்கக்கூடிய திறப்பினையும் பனுவல் அனுமதிக்கிறது. இத்தகைய எளிமையாக்கலைப் படைப்புச் சார்ந்த உத்தியாகக் கருதலாம். இதன் தொடர்ச்சியாகப் பனுவலை மேலும் எளிமைப்படுத்தி அடுத்தகட்ட நகர்வுக்குக் கொண்டு செல்கின்ற வாசிப்புக் கருவியாகக் கூற்றுக் குறிப்பு என்கிற ‘கருத்துரைப் பகுதி’ அமைந்துள்ளது. கூற்றுப் பற்றிய ஆய்வுகள் தமிழாய்வுப் பரப்பில் ஏராளமாக மேற்கொள்ளப்பட்டுள்ளன. பாடல்களைத் தொடர்ந்து இடம்பெற்றுள்ள இக்கருத்துரைப்பகுதி, ஐங்குறுநூற்றை வாசகரிடம் கடத்தியிருப்பதில் பெரும்பங்காற்றியிருக்கிறது. தொல்காப்பியர் குறிப்பிடுகின்ற கூற்று எனும் செய்யுள் உறுப்பு, ஐங்குறுநூற்றில் நேர்த்தியாக இடம்பெற்றிருந்த நிலையிலும் கூற்றுக்குறிப்பு என்கிற கருத்துரைப் பகுதி பல்வேறு மாற்றுச் சிந்தனைகளை முன்வைப்பதாக அமைந்திருக்கின்றது. இந்தக் கருத்துரைப்பகுதி ஐங்குறுநூற்று வாசிப்பு மரபில் இதுவரை ஏற்படுத்தியுள்ள தாக்கங்களையும் கருத்துரைப் பகுதியால் இனி நிகழவேண்டிய மாற்றங்களையும் எடுத்துரைப்பதாக இவ்வாய்வு அமைகிறது. இவ்வாய்வில் ஐங்குறுநூறு முதன்மையாதாரமாகக் கொள்ளப்பட்டிருப்பினும் ஒப்பிட்டு விளக்குவதற்காக முதல் பகுதியில் அகநானூறு துணைமையாதாரமாகக் கொள்ளப்பட்டுள்ளது.



ம.லோகேஸ்வரன்

### வாசிப்புப் பயன்பாட்டில் ‘கருத்துரை’

ஒரு பாடலுக்குக் கூற்றுநரும் கேட்குநரும் மிக முக்கியமான மாந்தர்கள். கூற்று குறித்துத் தொல்காப்பியர் செய்யுளியலில் விளக்கமாகச் (501-512) சுட்டியுள்ளார். கூற்றுகளை முதன்மையாகக் கொண்டுதான் பாடல்கள் இயற்றப்படுகின்றன. அதாவது கூற்றுநர்தான் பாடலின் மையமாக அமைந்து சூழலியலுடன் வாழ்வியலை எடுத்துரைப்பவராகத் திகழ்கிறார்.

சங்க இலக்கிய, தொல்காப்பியக் கவிதையியல் சுட்டும் உரிப்பொருள் தகவல் தொடர்பியலின் செய்தி அல்லது கருத்து ஆகும். இந்தக் கருத்தைக் கவிதையாக்குகின்ற சூழலும் மொழியும் அவற்றின் இணைப்பும் கூற்றுகளாலேயே உண்டாக்கப்படுகின்றன. இதனால் தமிழ்க் கவிதையியல் பற்றிப் பேசும் போது கூற்று எனும் கலைச்சொல் முக்கியமானதாகின்றது (கே. பழனிவேலு, 2011:26).

கூற்று குறித்த ஆய்வுகள் (க.ரத்தினம், குளோறியா சுந்தரமதி, பெ.மாதையன், ச.சிவகாமி, கே.பழனிவேல்) தமிழாய்வுச் சூழலில் தனித்த நிலையில் நிகழ்த்தப்பட்டுள்ளன. ஒரு பாடலுக்கு முக்கியத்துவம் வாய்ந்த கூற்றுநரின் எண்ணம் வலுவாக்கப்பட வேண்டும் என்கிற முனைப்பில்தான் பாடலைத் தொடர்ந்து கூற்றுக் குறிப்பு என்கிற பெயரில் கருத்துரைகள் அளிக்கப்பட்டுள்ளன. அதாவது, தொல்காப்பியர் சுட்டிய கூற்று என்பது பாடலுள் பயின்று வருகிற செய்யுள் உறுப்பு. ஆனால், பிற்காலத்தில் பாடலைத் தொடர்ந்து யாரோ ஒருவரால் எழுதப்பெற்ற பாடலின் சூழல் விளக்கத்தைக் 'கூற்று' எனக் கொள்கின்ற வழக்கம் வாசிப்புப் பரப்பில் பின்பற்றப்பட்டுள்ளது. இது தவிர்க்கப்பட வேண்டிய ஒன்று. கூற்றுக் குறிப்பால் பாடலின் செய்தி முழுமையாகக் கடத்தப்படுவதால் அக்குறிப்புகளைக் கொண்டு முன்னேற்பாடான புரிதலுக்கு வாசகன் வந்துவிடலாம்.

ஒவ்வொரு பாடலுக்கும் கருத்துரைப் பகுதியானது, பாடலுக்கு முன்னதாகவும் பாடலுக்குப் பின்னதாகவும் எ-து (என்பது) எனும் குறிப்புடன் அளிக்கப்பட்டுள்ளது. திணை, கூற்றுக்குறிப்பு, எ-து எனும் குறிப்புடன் உரைச்சாரம், பாடல் என்றும் (நற்றிணை, பின்னத்தூரார் பதிப்பு 1915, குறுந்தொகை, சௌரிப்பெருமாள் அரங்கன் பதிப்பு,1915), கூற்றுநர், உரைச்சாரம், பாடல், கூற்றுக்குறிப்பு (குறுந்தொகை, உ.வே.சா.பதிப்பு,1955) என்றும் இக்கூற்றுக் குறிப்புப் பகுதி அமைந்திருக்கின்றது. ஐங்குறுநூற்றில் தலைப்பு, பாடல், கருத்துரை என்று அமைந்துள்ளது. சுவடிகளிலும் பாடல், கருத்துரை என்று அமைந்திருப்பதைப் பார்க்கவியலுகின்றது. ஐங்குறுநூற்றுக்குக் கருத்துரைகள் செய்யவேண்டிய பணியைத் தலைப்புகள் செய்துவிடுகின்றன. தலைப்பை முதலில் அளித்துவிடுவதால் வாசகனின் புரிதல் ஒரு குறுகிய எல்லைக்குள் வந்துவிடுகின்றது. அதன்பின்னர்ப் பாடல், அதன்பின்னர்க் கருத்துரை என்கிற பொழுது கூடுதலான புரிதலை வாசகனால் பெறவியலுகிறது.

### ஐங்குறுநூற்றுக் கருத்துரைகள்

ஐங்குறுநூற்றுப் பத்துகளின் தலைப்புகள் வெவ்வேறு பொருண்மைக்குட்பட்டுக் குறிப்பிடப்பட்டுள்ளன. அவற்றுள் கூற்றுநர், கேட்குநர் அடிப்படையில் சில பத்துகளின் தலைப்புகள் அமைந்துள்ளன. அவற்றை ந.இராணி (2012:142-143) கீழ்வருமாறு வகைப்படுத்தியுள்ளார்.

கூற்று அடிப்படையிலான பெயரீடுகள் (301-310,321-330,351-360,381-390,391-400,401-410,411-420,441-450,451,460,461-470,481-490,491-500)

கூறுவோர் அடிப்படையிலான பெயரீடுகள் (51-60,61-70)

கேட்போர் அடிப்படையிலான பெயரீடுகள் (31-40,111-120,101-111,121-130,131-140,361-370)

கூறுவோர்-கேட்போர் அடிப்படையிலான பெயரீடுகள் (471-480)

இதனடிப்படையில், ஐங்குறுநூற்றின் மருதத்திணைப் பாடல்களை மட்டும் கருத்திற்கொண்டு அணுகும்பொழுது, மாந்தர்களின் கூற்று அடிப்படையில் தலைவி கூற்று (11-15, 17-20, 22,23,31-36,41-43,47-49,61-70,71,80,82,83,85,95), தோழி கூற்று (1-10, 16, 21,24,25,26,27,28,29,30,44-46,50,51-60,75,76,84,91,93,98,100), தலைவன் கூற்று (72-74,92,94,97,99), காதற்பரத்தை கூற்று (37,40,87,89,90), பரத்தை கூற்று (38,39,77,78,81,86,88), பரத்தையின் தோழி கூற்று (79), வாயில்கள் கூற்று (96) என்று பகுத்தளிக்கலாம். இவற்றுள் ஒரே பத்தில் நான்கு மாந்தர்கள் (புலவி விராய பத்தில் தலைவி, தோழி, காதற்பரத்தை, பரத்தை ஆகிய மாந்தர்களும் எருமைப்பத்தில் தலைவி, தோழி, தலைவன், வாயில்கள்) கூற்று நிகழ்த்துபவர்களாக இடம்பெற்றுள்ளனர். ஒரு பத்து முழுமையும் ஒரேயொரு மாந்தர் கூற்று நிகழ்த்துபவராகவும் (தோழி கூற்றுப் பத்து, கிழத்தி கூற்றுப் பத்து) அமைந்துள்ளது. பாடல்கள் இயற்றும்பொழுது கூற்றுநர், கேட்குநர்களைக் கருத்திற்கொண்டு இயற்றியிருந்தாலும் அதை இனங்கண்டு கருத்துரையாக்கம் செய்வது நீண்ட நெடிய வாசிப்பு மரபை உள்ளடக்கியதாகும். இது யாப்பியல் சார்ந்த புலமைத்துவ செயற்பாடாகும். சுருக்கம் கருதி, மருதத்திணையில் உள்ள கருத்துரைகள் ஒப்பிட்டுப் பார்க்கப்பெற்றுள்ளன. அதில், தி.சதாசிவஐயர் அதிகமான இடங்களில் மாற்றுப் பாடங்களைக் கொண்டுள்ளார் என்பது புலப்படுகின்றது.

### அகநானூறு, ஐங்குறுநூறு : கூற்றிலிருந்து கருத்துரை

அகநானூற்றின் கூற்றுக்குறிப்புகளைக் கருத்திற்கொண்டு நோக்குகையில் மிகப்பெரிய எடுத்துரைப்பு மாற்றம் ஐங்குறுநூற்றில் நிகழ்ந்துள்ளதை அவதானிக்க முடிகின்றது. அகநானூற்றில் பெரும்பான்மையாகப் பரத்தையர் பிரிவால் நிகழ்கின்ற கருத்தியல்களை உட்செறித்து மருதத்திணைப் பாடல்கள் அமைந்திருக்கின்றன.

இரண்டு பாடல்களுக்கான (அகம்.156,286) கூற்றுக்குறிப்புகள் மருதத்துள் களவு என்கிற பாடுபொருளில் அமைந்துள்ளன.




ஐங்குறுநூற்றின் 28,29,30,60,72,91,92,93,94 ஆகிய பாடல்கள் மருதத்துள் களவினை உணர்த்துவனவாக அமைந்துள்ளன. அவற்றுள் முதற்பொருள், கருப்பொருளால் மருதம், உரிப்பொருளால் குறிஞ்சி (28,29,30,60,92,93,94) என்றும், கருப்பொருளால் மருதம், உரிப்பொருளால் கைக்கிளை (91) என்றும், பரத்தையர் பிரிவு காரணமல்லாத ஊடல் (72) என்றும் களவிற்பிரிவு (1-5) என்றும் பகுத்துப் பார்க்கவியலுகிறது. ஏனைய 86 பாடல்கள் பரத்தையற் பிரிவின் காரணமான ஊடல் குறிப்பை வெளிப்படுத்துகின்றன. எனவே,மருதத்திணையுள் பிற திணைகள் மயங்கி வருவதை அகநானூற்றிலும் ஐங்குறுநூற்றிலும் காணவியலுகின்றது. ஆனால், திட்டமிடப்பட்டு இயற்றப்பெற்றதாகக் கருதப்பெறுகின்ற ஐங்குறுநூற்றில் இத்தகைய பிறதிணை மயக்கப் பாடல்கள் கலவாமல் தவிர்க்கப்பட்டிருக்கலாம். ஒருவேளை, திணை மயக்கப் பாடல்கள் இடம்பெற வேண்டும் என்கிற திட்டமிடலாகக்கூட இந்தப் பதினான்கு பாடல்களும் அமைந்திருக்கலாம். இவ்வாறு பகுத்து விளங்கிக் கொள்கிற புரிதலைக் கருத்துரைகள்தாம் நமக்கு அளிக்கின்றன.

அகநானூறு, குறுந்தொகை, நற்றிணை ஆகிய நூல்களில் பின்பற்றப்பட்டுள்ள சுருங்கச் சொல்லும் முறை ஐங்குறுநூற்றில் பின்பற்றப்படவில்லை. பாடலை விளக்க முற்படுவதான குறிப்புரையாகவே கருத்துரைகள் தென்படுகின்றன. அதாவது எடுத்துரைப்புத் தன்மையால் கூற்றுக்குறிப்பு என்பதிலிருந்து ‘உரைவடிவமாதல்’ என்று மடைமாற்றம் பெற்றுள்ளன. இக்கருத்தை விளக்குவதற்காக ஐங்குறுநூற்றின் கருத்துரைகளைக் கீழ்வருமாறு பகுத்தளிக்கலாம்.

- கூற்று நிகழ்த்துகின்றவரை உணர்த்துகின்ற குறிப்பு
- கூற்று நிகழ்த்துவதற்கான தூண்டல் குறிப்பு
- பாடலை விளக்க முற்படுகின்ற குறிப்பு

### கூற்று நிகழ்த்துகின்றவரை உணர்த்துகின்ற குறிப்பு

குருகுடைத் துண்ட வெள்ளகட் டியாமை (ஐங்.81) எனும் பாடலுக்கான கருத்துரையானது, “தன்னைக் கொடுமை கூறினாள் தலைமகளென்பது கேட்ட பரத்தை தலைமகன் வந்து தன்மேல் அன்புடைமை கூறினானாக அவட்குப் பாங்காயினார் கேட்பச் சொல்லியது” என்பதாகும். இதைத் தலைமகளுக்குப் பாங்காயினார் கேட்பப் பரத்தை சொல்லியது என்று சுருங்கச் சொல்லலாம். அகநானூற்றில் தலைமகட்குப் பாங்காயினார் கேட்பப் பரத்தை சொல்லியது (அகம்.276), பரத்தை தலைமகளின் பாங்காயினர் கேட்கும்படியாகச் சொல்வது (அகம்.76,106), தலைமகள் தன்னைப் புறங்கூறினாளாகக் கேட்ட பரத்தை அவட்குப் பாங்காயினார் கேட்பச் சொல்லியது (அகம்.106) தலைமகட்குப் பாங்காயினார் கேட்ப இல்லிடப்பரத்தை சொல்லி நெருங்கியது (அகம்.186) என்று சுருக்கமாகக் குறிப்பிடப்பெற்றுள்ளன. மேலும், நயப்பித்துத் தலைமகனைக் கொண்டாள் என்று கழறக்கேட்ட பரத்தை தலைமகட்குப் பாங்காயினார் கேட்பச் சொல்லியது (அகம்.76) எனும் கருத்துரை ஐங்குறுநூற்றுக் கருத்துரையுடன் நெருங்கிய தொடர்புடையதாக இருந்தாலும் விளக்கமுறையில் பாடலுக்குப் புறத்தே நின்று விளக்கப்பட்டுள்ளதைக் காணவியலுகின்றது. அதாவது, கூற்று நிகழ்த்துகின்றவர் பற்றிய குறிப்பை உணர்த்துதல் என்பது, மக்கள் நுதலிய அகனைந் திணையும், சுட்டி ஒருவர் பெயர்கொளப் பெறார் (தொல்.அகத்.54) எனும் விதியை மனத்துட்கொண்டு பெயரைக் குறிப்பிடாமல் எழுத வேண்டிய நெருக்கடியினால் விளைந்ததாகும். இந்த அமைப்புடன் கூற்று நிகழ்த்தியவரையும் கேட்குநரையும் தெளிவாகக் குறிப்பிட வேண்டும் என்கிற முயற்சியில் அகநானூற்றைக் காட்டிலும் ஐங்குறுநூற்றில் அதிக முனைப்புக் காட்டப் பெற்றுள்ளதைக் காணவியலுகிறது.

### கூற்று நிகழ்த்தப்படுவதற்கான தூண்டல் குறிப்பு

‘தன்னைக் கொடுமை கூறினாள் தலைமகள்’ என்பது மேற்குறிப்பிடப்பெற்ற ஐங்குறுநூற்றுக் கருத்துரையில் இடம்பெற்றுள்ள தூண்டல் குறிப்பாகக் கொள்ளலாம். இக்குறிப்பிலிருந்துதான் அடுத்த கருத்து வலுப்பெறுகின்றது. ‘தலைமகன் வந்து தன்மேல் அன்புடைமை கூறினானென’ எனும் குறிப்பு, பாடலிலிருந்து பெறப்பட்டதாகும். அதாவது கூற்றுக் குறிப்பைத் தெளிவுபடுத்துவதற்காகப் பாடலின் மையப்பொருளைக் குறிப்பிடுகின்ற முயற்சியாக

இச்செயல்பாட்டைப் புரிந்துகொள்ளலாம். இவ்வகைப் பகுப்புமுறையை ஐங்குறுநூற்றில் பெரும்பான்மையாகக் காணவியலுகிறது. ஒரு பாடலின் மையப்பொருளை விளக்குவதற்கான காரணியாக இந்தத் தூண்டல் குறிப்பு அமைந்திருக்கிறது.

### பாடலை விளக்க முற்படுகின்ற குறிப்பு

வரைந்து எய்துவல் என்று நீங்கும் தலைமகன் தலைமகளை ஆற்றுவித்துக் கொண்டிருத்தல் வேண்டும் என்று தோழியைக் கைப்பற்றினாற்குக் கைப்பற்றியது தன்னைத் தொட்டுச் சூளுறுவானாகக் கருதித் தோழி சொல்லியது (அகம்.286). அகநானூற்று மருதத்திணைப் பாடல்களில் நீண்டு அமைந்துள்ள குறிப்புரை இதுவாகும். இக்குறிப்புரை உணர்த்துகின்ற செய்திகள் வருமாறு.

- விரைவில் தலைவியை வரைந்து கொள்வேன் எனல்.
- தலைவியை விட்டு நீங்க முற்படுதல்.
- நீங்கும் தருணத்தில் தோழியைக் கண்டு மொழிதல்.
- நான் வரும்வரையில் தலைவியைத் தேற்றுவிப்பாயாக என்று அறிவுறுத்துதல்.
- இவ்வாறு கைப்பற்றிய தலைவனின் செயல்பாட்டைச் சூளுரையாகத் தோழி கருதுதல்.
- களவுகாலத்தில் சூளுறுத்ததைத் தோழி நினைவுபடுத்திப் பேசுதல்.

இத்தகைய மேலடுக்கான நீண்ட விவரணை சூழல் குறிப்பில் அமையவேண்டுமா? என்பது சிந்திக்கத்தக்கது. வரைந்து எய்துவல் எனும் குறிப்பும் சூளுறுத்தல் எனும் குறிப்பும் பாடலுடன் நேரடித் தொடர்புடைன. ஏனைய குறிப்புகள் பாடலின் சூழலுக்கு வாசிப்பாளரைக் கொண்டு வருகிற அல்லது பாடலை விளக்க முற்படுகிற முயற்சி எனலாம்.

ஐங்குறுநூற்றில் இத்தன்மையில் பல கருத்துரைகள் உள்ளன. 'தலைவி தன்னுடன்போய்ப் புனலாடியவழி, 'இது பரத்தையருடனாடிய துறை' என நினைந்து பிறந்த மெலிவை மறைத்தமையை யுணர்ந்த தலைமகன் மனைவயிற் புகுந்துழி, 'தெய்வங்களுறையுந் துறைக்கண்ணே நாம் ஆடினவதனாற் பிறந்ததுகொல் நினக்கு இவ்வேறுபாடு' என்று வினாயினாற்கு அவள் சொல்லியது (ஐங்.53)' எனும் கருத்துரைப் பகுதி நீண்ட விளக்கமாக அமைந்திருக்கிறது. இதில் பாடலுக்கான நேரடிக் குறிப்பு என்பது துறையைக் கண்டதும் மெலிவுற்றது ஏன்? எனும் தலைவனின் கேள்விக்குத் தலைவியோ தோழியோ (தலைவி, தோழி கூற்றாகக் கருதுவர்) பதில் சொல்வதாகும். இதுபோன்ற கருத்துரைகள் ஏறத்தாழ பாடலுக்குரிய உரைவிளக்கமாகவே தென்படுகின்றன.

### தொகுப்புரை

- அகநானூறு, குறுந்தொகை, நற்றிணை ஆகிய நூல்களில் பின்பற்றப்பட்டுள்ள சுருங்கச் சொல்லும் முறை ஐங்குறுநூற்றில் பின்பற்றப்படவில்லை. பாடலை விளக்க முற்படுவதான குறிப்புரையாகவே கருத்துரைகள் தென்படுகின்றன.
- கூற்று நிகழ்த்துகின்றவரை உணர்த்துகின்ற குறிப்பு, கூற்று நிகழ்த்துவதற்கான தூண்டல் குறிப்பு, பாடலை விளக்க முற்படுகின்ற விரிவான விளக்கம் என்று கருத்துரைப் பகுதியைப் பகுத்து விளக்கவியலுகிறது.
- முக்கியத்துவம் வாய்ந்த கருத்துரை எனும் வட்டத்திற்குள் நின்றுகொண்டுதான் பழையவுரைகாரர் முதல் பிற்கால உரையாசிரியர் பலரும் ஐங்குறுநூற்றுக்கு உரையெழுதியுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.
- ஐங்குறுற்றுக்குப் பழையவுரைகாரர், பொ.வே. சோமசுந்தரனார், கு.வெ.பாலசுப்பிரமணியன் ஆகியோர் என்பது எனும் சொல்லைப் பயன்படுத்திக் கூற்றுக் குறிப்பை அமைத்துள்ளனர். ஏனையோர் மாற்றுப் போக்கைக் கையாண்டுள்ளனர்.
- கூற்றில் செய்யவியலாத திருத்தங்களைக் கூற்று விளக்கத்தில் செய்வதற்கான திறப்பினைப் பிற்கால உரையாசிரியர்கள் உண்டாக்கியுள்ளனர்.

### துணைநின்றவை


- அகநானூறு மூலமும் பழையவுரையும், 1935, ராஜகோபாலார்யன் (ப.ஆ.), கம்பர் விலாசம், சென்னை.
- ஐங்குறுநூறும் பழையவுரையும், (மு.ப.), சாமிநாதையர், உ.வே.(ப.ஆ.), வைஜெயந்தி அச்சுக்கூடம், சென்னை, 1903.
- ஐங்குறுநூறு மூலமும் உரையும்,1943(மு.ப.), சதாசிவ ஐயர், தி.(ப.ஆ.&உ.ஆ.), ஆரிய திராவிட பாஷாபி விருத்திச் சங்க வெளியீடு, யாழ்ப்பாணம், 1943.
- கலித்தொகை, 1925 (மு.ப.), அனந்தராமையர் (ப.ஆ.), நச்சினார்க்கினியர் (உ.ஆ.), நோபில் அச்சுக்கூடம், சென்னை.
- குறுந்தொகை, 1915 (மு.ப.), சௌரிப்பெருமாளரங்கன் (ப.ஆ.&உ.ஆ.), வித்யாரத்னாகர அச்சுக்கூடம், வேலூர்.


●


**கட்டுரையாளர்: உதவிப்பேராசிரியர்,**
**முதுகலைத் தமிழாய்வுத்துறை,**
**பச்சையப்பன் கல்லூரி, சென்னை-30.**




கட்டுரை

# பாரதியின் ஜப்பானிய தரிசனம்

பாரதியும் ஜப்பானும் | பேரா. ய. மணிகண்டன்
வெளியீடு: காலச்சுவடு | விலை: ரூ. 240

கு. முதற்பாவலர்

தமிழ் ஆய்வுலகில் யாப்பியல், சுவடிப் பதிப்பியல், பாரதியியல், பாரதிதாசனியல் ஆகிய களங்களில் குறிப்பிடத்தக்க பங்களிப்புகளைச் செய்து வருபவர் பேராசிரியர் ய. மணிகண்டன் ஆவார். பாரதியியல் தொடர்பாகத் தொடர்ந்து பல புதிய செய்திகளைத் தமிழுலகிற்கு அளித்து வருகின்றார். அந்த வகையில், மகாகவி பாரதியும் சங்க இலக்கியமும், பாரதியியல்: கவனம்பெறாத உண்மைகள், பாரதியின் இறுதிக்காலம் : கோவில் யானை சொல்லும் கதை, ஓவிய பாரதி, பாரதியும் காந்தியும், பாரதியும் குள்ளச்சாமியும், புதுவைப் புயலும் பாரதியும், பாரதியும் உ.வே. சாவும், முதலிய நூல்கள் பாரதியியலில் கவனம் பெற்றுள்ளன. கடந்த நவம்பரில் “பாரதியும் ஜப்பானும்” என்னும் தலைப்பில் அமைந்த நூலைப் படைத்துள்ளார். காலச்சுவடு பதிப்பகம் இந்நூலை வெளியிட்டுள்ளது. இந்நூலைப் பற்றிய அறிமுகமாக இப்பதிவு அமைகின்றது.

> “இந்தியாவை ‘டென்ஜிகு’, ‘தேவலோகம்’, ‘சுவர்க்கலோகம்’ எனக் கொண்டாடிய ஜப்பான் நாட்டையும் ‘ஆத்ம ஞானத்தில் சிறந்தவர் நாம், ஆனால் லௌகிக ஞானத்தில் நம்மைக் காட்டிலும் சிறந்த தேசம் ஜப்பான்’ எனப் போற்றிய பாரதியையும் இணைத்துப் பார்க்கும் முயற்சியில் மலர்கிறது இந்நூல்”

என இந்நூலின் தோற்றம் பற்றிப் பேராசிரியர் முன்னுரையில் விளக்கியுள்ளார் (ப. 11).

இந்திய விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்ட தலைவர்கள், சிந்தனையாளர்கள் எனப் பலரும் ஜப்பானை வியந்து போற்றியுள்ளனர். அந்த வகையில் இந்தியாவின் வடக்கில் தாகூரும் தெற்கில், தமிழ் மண்ணில் பாரதியாரும் ஜப்பானைக் கொண்டாடியுள்ளனர். ஜப்பானின் அரசியல், இலக்கியம், பண்பாடு, தொழில்நுட்பம் எனப் பன்முகத்தை நூறு ஆண்டுகளுக்கு முன்னரே தனித்தன்மையோடு பாரதியார் பதிவு செய்துள்ளார்.

பாரதியின் ஜப்பான் தொடர்பிலான படைப்புகளை எல்லாம் முதன்முறையாகத் திரட்டிக் கொடுத்து ஓர் அரிய ஆவணத்தை உருவாக்கியுள்ளார் பேராசிரியர். இந்த அரிய ஆவணத்தின் மூலம் பாரதியியலுக்குப் புதிய பரிமாணத்தைக் கொடுத்துள்ளார். நம் தமிழ் மண்ணில் தோன்றிய பாரதி உலகளாவிய சிந்தனையுடன் தன் படைப்புகளை வெளிப்படுத்தியுள்ளார். அவரின் பார்வை உலகம் முழுவதற்குமானதாக இருந்தது என்பதைப் பேராசிரியர் விரிவாக விளக்கியுள்ளார்.

**ஜப்பான் கவிதை**

ஜப்பானில் உள்ள கவிதை வடிவம் பற்றி பாரதியார் எழுதியிருப்பதை விளக்கியுள்ளார்.

ஜப்பானிய "ஹொக்கு" என்னும் கவிதை பற்றி பாரதியார் பதிவு செய்துள்ளார். 'மார்டன் ரிவ்யூ' என்னும் கல்கத்தா பத்திரிகையில் உயோநே நோகுச்சி என்ற ஜப்பானியப் புலவர் எழுதிய கடிதம் பற்றி விவரித்துள்ளார். மேற்கத்திய நாடுகளில் உள்ள கவிதைகளைக் காட்டிலும் ஜப்பானியக் கவிதை சிறந்து விளங்குகிறது. மேற்கத்திய கவிதைகளில் சொற்கள் மிகுதி. ஆனால் ஜப்பானியக் கவிதையில் தேவையில்லாத சொல் ஒன்றுகூடச் சேர்ப்பது கிடையாது. எனவே ஜப்பானியக் கவிதை சிறக்கிறது என்கிறார்.

பதினேழு அசைகளைக் கொண்ட கவிதை 'ஹொக்கு' என்ற பாட்டு தனிக் காவியமாக அமைந்துள்ளது. இந்த ஜப்பானியக் கவிதை வடிவம் போலவே தமிழில் திருக்குறள் இருக்கிறது. "தமிழ்நாடில் முற்காலத்திலே இத மிகவும் மதிப்பெய்தி நின்றது. ஆனாலும் ஒரேயடியாகக் கவிதை சுருங்கிப் போய்விட்டால் நல்லதன்று" என்று அவரின் மதிப்பீட்டையும் வெளிப்படுத்தியிருக்கின்றார்.

## ஜப்பான் பற்றிய பதிவுகள்

ஜப்பான் நாட்டுச் சிந்தனைகள் இந்திய சிந்தனையாளர்கள் பலரையும் ஈர்த்துள்ளது. பாரதியாரின் இதழியல் குருவாக விளங்கிய தமிழ் இதழியலின் முன்னோடியும் 'சுதேசமித்திரன்' இதழைத் தோற்றுவித்தவருமான ஜி. சுப்பிரமணிய ஐயரிடம் இருந்து இவ்வரலாறு தொடங்குகிறது. 'ஜப்பான் சரித்திரச் சுருக்கம்', 'புதிய ஜப்பான்' முதலிய நூல்களை எழுதிய ஜி. சுப்பிரமணிய ஐயர் தமிழுலகிற்கு ஜப்பானை அறிமுகப்படுத்தியுள்ளார் எனக் குறிப்பிட்டுள்ளார்.

என்றாலும் கூட நூறாண்டுகளுக்கு முன்பே அரசியல், இலக்கியம், பண்பாடு, இந்திய விடுதலை, தொழில்கல்வி முதலியவை தொடர்பாகப் பல செய்திகளை இணைத்துப் பேசிய, உணர்வூட்டி, விமர்சனங்களை முன்வைத்த முதல் தமிழ் ஆளுமை பாரதியார் எனப் பதிவு செய்துள்ளார்.

## பாரதியின் ஜப்பான் தரிசனம்

இந்திய விடுதலைப் போராட்டத்தில் புறநானூற்றின் பாடல்களை உணர்வூட்டும் விதமாகப் பாரதியார் பயன்படுத்தியுள்ளார். போரில் மகனை இழந்த வீரத்தாயின் உள்ளத்தை உ.வே.சாமிநாதரின் மூலம் அறிந்த பாரதி, "இந்திய விடுதலைக்கு இந்தத் தமிழ் மூதாட்டியைப் போன்ற பலர் பாரத நாட்டில் பிறப்பதற்கு இறைவன் அருள்புரிய வேண்டும் என்று வேண்டினார்" என்பதைக் குறிப்பிட்டு, அதைப்போலவே ரஷ்யா - ஜப்பானிய போரின்போது நிகழ்ந்த நிகழ்வொன்றையும் ஒப்பிட்டு எழுதிய செய்திகள் விளக்கப்பெற்றுள்ளன.

இவ்வாறு தொடங்கிய பாரதியின் ஜப்பானிய தரிசனம் 1921ஆம் ஆண்டு வரை நீண்டு பல பரிமாணங்களையும் விசாலங்களையும் பெறுகிறது எனப் பேராசிரியர் விளக்கியுள்ளார்.

> "ஜப்பானிய இலக்கியங்கள், ஜப்பான் மொழியின் பண்டைக் கவிஞர்தொட்டு இருபதாம் நூற்றாண்டுக் கவிஞர்வரை முக்கியமான விலரை எடுத்துக்காட்டல், ஜப்பான் நிலப்பரப்பு, வரலாறு, சமுதாய நிலை, பண்பாடு, ஜப்பானியப் பெண்களின் சிறப்பியல்புகள், மக்களிடையே இருந்த ஏற்றத்தாழ்வுகள், பண்டுதொட்டு இந்தியாவுக்கும் ஜப்பானுக்கும் இடையே இருந்துவந்த உறவுகள், பௌத்தச் செல்வாக்கு, இந்தியாவை 'சுவர்க்கலோகம்' என்றெல்லாம் ஜப்பான் கொண்டாடிய நிலை, சமகாலத்தில் ஜப்பான் பெற்றிருந்த ஏற்றம், ஆசிய நாடுகளுக்கே முன்னோடியகத் திகழ்ந்த நிலை, ஜப்பானின் தொழிற்சிறப்பு, ஜப்பானுக்குத் தொழிற்கல்வி பயிலத் தென்னிந்தியாவிலிருந்து செல்லுதல், ஜப்பானுக்கு இராமகிருஷ்ண இயக்கத்தைச் சேர்ந்தோர் சென்று சமயம் பரப்ப முயல வேட்டியமை, ஜப்பானுக்கும் உருசியாவுக்குமான போர், ஜப்பானின் வெற்றி, அமெரிக்காவுக்கும் ஜப்பானுக்கும் இடையிலான உறவுச் சிக்கல், அதனைத் தீர்க்க அமெரிக்க அதிபர் ரூஸ்வெல்ட் எடுத்த முயற்சிகள், ஜப்பானியப் பத்திரிகைகளில் வெளிவந்த இந்திய விடுதலைப் போராட்டம் தொடர்பான செய்திகள், ஜப்பானுக்கு ஹெர்பர்ட் ஸ்பென்சர் வழங்கிய ஆலோசனை, தாகூரின் ஜப்பானியப் பயணம், தாகூரின் கருத்துகள் ஜப்பானில் பெற்ற வரவேற்பு, தாகூர் ஜப்பானில் ஆற்றிய சொற்பொரிவின் மொழிபெயர்ப்பு, ஜப்பானில் சமஸ்கிருதக் கல்வி - என்றெல்லாம் பாரதியின் ஜப்பான் குறித்த எழுத்துலகம் பரந்து விரிந்து காட்சி தருகின்றது" (பக். 14,15).

எனப் பாரதியின் ஜப்பான் தரிசனம் குறித்துப் பேராசிரியர் விவரிக்கின்றார்.

ஜப்பான் பற்றிய பல்வேறு செய்திகள் பாரதியாரின் பார்வைக்கு எப்படி கிடைத்தன? என்பதையும் விளக்குகிறார். சுதேசமித்திரன்,

இந்தியா பத்திரிகைகளில் பணியாற்றிய காலங்களில் உலகளாவிய செய்தி நிறுவனங்களின் செய்திப் பதிவுகளைப் பெறுகின்ற நிலை இருந்தது எனவும் பிற காலங்களில் அத்தகைய வாய்ப்பு இல்லை எனவும் குறிப்பிட்டுள்ளார். இருப்பினும் உலகளாவிய நாடளாவிய ஆங்கில இதழ்கள் உலகளாவிய முதன்மையான நடப்புகளைக் கொண்டு வந்து சேர்த்தன. அவற்றுள், வங்காளத்திலிருந்து வெளிவந்த ‘தி மார்டன் ரிவியூ’, அமெரிக்காவிலிருந்தும் இலண்டனிலிருந்தும் வெளிவந்த ‘ரெவியூ ஆஃப் ரெவியூஸ்’, பம்பாயிலிருந்து வெளிவந்த ‘டைம் ஆஃப் இந்தியா’, இலண்டன் ‘டைம்ஸ்’ பத்திரிகை முதலியவை மூலம் உலக நடப்புகளைப் பாரதியார் அறிந்திருக்கிறார். ஆனால் ஒருபோதும் செய்திகளைப் பகிர்பவராக பாரதி இருந்ததில்லை. அதில் அவரின் பார்வையைச் செலுத்தி உரிய வகையில் மதிப்பீடு செய்திருக்கிறார் என்பதையும் குறிப்பிட்டுள்ளார்.

இந்தியாவின் விடுதலை உணர்வு பற்றிய ஜப்பானின் நிலைப்பாடு, தாகூரின் ஜப்பான் பயணம், அங்கு அவர் ஆற்றிய சொற்பொழிவு, ஜப்பானியர்கள் தாகூரைக் கொண்டாடிய விதம் முதலியவற்றைத் தக்க ஆதாரங்களோடு பதிவு செய்துள்ளார்.

### தொழிற்கல்வி

பாரதியின் காலத்திலேயே ஜப்பான் பல்வேறு வளர்ச்சிகளைக் கண்டு எழுச்சிபெற்ற நாடாகத் தோற்றம் கொண்டது. தொழில் நுட்பத்தில் சிறந்து விளங்கியது. இந்தியர்கள் ஜப்பானுக்குச் சென்று தொழில்நுட்பங்களை அறிந்துகொள்ள வேண்டும். அம்முறைகளை இந்தியாவில் பயன்படுத்தி கைத்தொழில்களும் பிற தொழில்களும் வளர்ச்சியடையச் செய்ய வேண்டுமென பாரதியார் விரும்பியுள்ளார். ஆந்திராவிலிருந்து ஜப்பானுக்குச் சென்று வந்த இளைஞரை பாரதியார் நேரடியாகச் சந்தித்து ஜப்பானியச் சூழல், தொழிற்கல்வி, இந்தியர்களைக் குறித்த ஜப்பானியர்களின் நிலைப்பாடு முதலியவற்றை அறிந்து ‘இந்தியா’ பத்திரிகையின் மூலம் தமிழ் மக்கள் அறியச் செய்ததை எல்லாம் இந்நூல் விரிவாக விளக்குகின்றது. அதேபோல் தஞ்சை மாவட்டத்திலிருந்து ஜப்பான் சென்ற இளைஞரின் கருத்துகளை வெளிப்படுத்தியுள்ளார். அப்போதைய காங்கிரஸ் சபையினர் கல்வி, கைத்தொழில், தொடர்பாகப் போதிய கவனம் செலுத்தவில்லை எனப் பதிவிட்டதையும் ஜப்பானைப் போல பல்வேறு நிலைகளில் இந்தியநாடும் உயர்வடைய வேண்டும் என்ற பாரதியின் விருப்பத்தையும் விளக்கியுள்ளார்.

> ...புஸ்தகங்களாலும், பத்திரிகைகளாலும் யாத்திரைகளாலும் நாம் ஜப்பான் விஷயங்களை நன்றாகத் தெரிந்துகொள்ளுதல் பயன்படும். கூடியவரை பிள்ளைகளை ஜப்பானுக்கு அனுப்பிப் பலவிதமான தொழில்களும் சாஸ்திரங்களும் கற்றுக்கொண்டு வரும்படி செய்வதே பிரதான உபாயமாகும். தொழிற்கல்வியிலும் லௌகிய சாஸ்திரப் பயிற்யிலும் நாம் மற்ற ஜாதியாருக்கு ஸமானமாக முயலுதல் அவஸரத்திலும் அவஸரம். (சுதேசமித்திரன், 12.2.1916, ப. 9)

எனப் பாரதி சுதேசமித்திரனில் வெளிப்படுத்திய அவர் விருப்பத்தை எடுத்துக்காட்டியுள்ளார் (ப.19). இவ்வாறு பல்வேறு செய்திகளை இந்நூல் வெளிப்படுத்துகின்றது.

அமெரிக்க - ஜப்பான் போர் (1906), ஜப்பானில் நிலவிய சாதிய நிலைப்பாடு, ஜப்பான், இங்கிலாந்து, இத்தாலி முதலிய நாடுகளில் இருந்த தாய்மொழிக் கல்வி, கலப்புத் திருமணம் பற்றிய ஸ்பென்ஸாரின் கருத்தும் பாரதியின் நிலைப்பாடும் முதலியவற்றை விரிவாக விளக்கியுள்ளார். தாகூரின் சொற்பொழிவுக் கருத்துகளை பாரதியின் மொழிபெயர்ப்பில் தந்திருப்பது எண்ணத்தக்கதாகும். அதைப்போலவே பிற்சேர்க்கையில் இடம்பெறும் பாரதியின் ஜப்பான் குறித்த கட்டுரை அரிய ஆவணமாகும்.

பாரதியாரின் ஜப்பான் பற்றிய படைப்புகள் ‘கால வரிசைப்படுத்தப்பட்ட பாரதி படைப்புகள்’ தொகுதிகளில் இடம்பெற்றுள்ளன என்றும் அவை இந்நூலாக்கத்திற்குப் பயன்பட்டன எனவும் பதிவு செய்துள்ளார். எனினும் மூன்றில் இரண்டு பங்கு கட்டுரைகள் ‘இந்தியா’, ‘சுதேசமித்திரன்’, நியூ இந்தியா’ முதலியவற்றின் மூலப் பிரதிகளின் அடிப்படையில் இடம்பெற்றிருப்பதையும் குறிப்பிட்டுள்ளார். பாரதியியலுக்குப் பேராசிரியர் ய. மணிகண்டன் அணிசேர்த்திருக்கும் “பாரதியும் ஜப்பானும்” என்னும் நூல் அரிய ஆவணமாகத் திகழ்கின்றது. அரிதின் முயன்று தமிழ் ஆய்வுலகத்திற்கு அழியா புகழ்கொண்ட நூல்களைக் கொடுத்துவரும் பேராசிரியரைத் தமிழ் ஆய்வுலகம் பயன்கொள்ள வேண்டும்.

●

**உதவிப்பேராசிரியர்,தமிழ்த்துறை (தன்நிதிப் பிரிவு),**
**சென்னைக் கிறித்தவக் கல்லூரி, சென்னை - 59.**

கட்டுரை

# தமிழர் வாழ்வில் நிகழ்த்துக் கலைகளின் பரிணாமங்கள்

(எழிலவனின் 'தமிழகத்தின் மரபுக்கலைகள்' நூலை முன் வைத்து எழுதப்பட்ட கட்டுரை)




**சி. ஆர்த்தி**
**முனைவர் நா. தனராசன்**
**முனைவர் இல. பொம்மி**

**ஆய்வுச்சுருக்கம்**

தமிழர்களின் மரபு வழியில் இன்றியமையாத ஒன்றாக உருவெடுத்து பரிணாம வளர்ச்சியில் வளர்ந்து வருவது கலையாகும். பிற உயிரினங்களில் இருந்து மனிதனைத் தனித்துக் காட்டுவது கலை நுட்பமாகும். உடல் மற்றும் உள்ளத்தின் திறன்களை ஒருங்கிணைத்து கற்பனை வளத்தை ஊக்குவிப்பது கலையாகும். தமிழர் தம் வாழ்வில் மிகப்பழமையானக் கலைகள் யாவும் காட்சிப்படங்களையும், காட்சிப்பொருட்களையும் சார்ந்த காட்சிக்கலைகளாகத் தோற்றம் பெற்றுப் படிப்படியாக வளர்ச்சி அடைந்து வருகின்றது. இத்தகைய கலைகளின் வளர்ச்சி நிலைகளை தானே நேரில் சென்று கள ஆய்வு நிகழ்த்தியுள்ளார் கவிஞர் எழிலவன் அவர்கள். இக்களவாய்வின் படிநிலைகளை ஆராய்ந்து தெளிவது இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**நிகழ்த்துக் கலைகள்**

நிகழ்த்துக் கலை என்பது அரங்கொன்றில் கலைஞர் ஒருவர் அல்லது பலர் தமது முகம், உடல் அல்லது இருப்பு கொண்டு நிகழ்த்துவதற்குரியதான கலை வடிவம் ஆகும். பல்வேறு துறைகளை உள்ளடக்கியதாயினும் பார்வையாளர்கள் முன்னிலையில் நேரடியாக நிகழ்த்திக் காட்டும் கலையாகும். நிகழ்த்துக் கலைகள் குறித்து தற்கால கவிஞர் எழிலவன் அவர்கள் தனது உரைநடை நூலான தமிழகத்தின்; மரபுக்கலைகள் என்னும் நூலில் விரிவாக விளக்கம் அளித்துள்ளார். மேலும் நிகழ்த்துக் கலைகள் பற்றிய கவிதை வரிகளையும் தன்னுடைய படைப்பாக தந்துள்ளார்.

"நிகழ்த்துவதாலே...நிகழ்த்து கலைகள்!
ஒவ்வொன்றிலுமே வெவ்வேறு நிலைகள்!
ஆடல், பாடல், அசத்தும் இசைநயம்,
ஒப்பனை, பற்பல உடையலங்காரம்,
புராணம், சமூகப் பொருண்மைகள் தேர்ந்து
ஆடவர், மகளிர் அனைவரும் காண
அரங்கம், வீதிகள் ஆயிரு தளத்திலும்
நேரம் சார்ந்து நிகழ்த்தப்படுவது.........!
மக்களின் மனத்தைச் சிக்கெனப் பிடித்துப்
பக்குவப்படுத்தும் பண்பாட்டுக் கூறு!
வழிபாட்டு மரபில் வளர்ந்து செழித்து
மொழி கடந்தெங்கும் முனைந்து பரவிய
பொழுது போக்குச் சாதனம்! இதனால்!
சமூக நலன்களும் சாத்தியம்...! சத்தியம்!2

(தமிழகத்தின் மரபுக்கலைகள் ப. 8)

இக்கவிதை வரிகள் நிகழ்த்துக் கலைகளின் வளர்ச்சி படி நிலைகளை பறைச்சாற்றுகின்றது. ஒரு கலைஞனின் நுண்கலை வடிவின் சிறப்புக் கூறுகள் பார்வையாளர்களின் மத்தியில் வெளிப்படுத்தப்படும் போது அது நிகழ்த்து கலையாக வடிவம் கொள்கிறது. நிகழ்த்து கலைகள் நெகிழ்தன்மை கொண்ட கலைகளாக அறியப்படுகின்றன. நிகழ்த்துக் கலைகளின் உள்ளடக்கத்தில் நாடகம், கூத்து, இசை, நடனம், ஒப்புவிப்பு, மாய வித்தை, மேடை நகைச்சுவை, பொம்மலாட்டம், மற்றும் கழைக்கூத்து முதலானவைகள் அடங்கும்.

## நிகழ்த்துக் கலைஞர்கள்

பார்வையாளர்கள் முன்னிலையில் கலைகளை நிகழ்த்திக் காட்டும் நடிகர் அல்லது கலைஞர் 'நிகழ்த்துக் கலைஞர்' எனப்படுகின்றனர். நடிகர், நகைச்சுவையாளர், நடனமாடுவோர், மாயவித்தைக்காரர், இசைக்கலைஞர், பாடகர், பலகுரல் கலைஞர், பேச்சாளர், போன்றவர்கள் இக்கலைகளில் பங்களிப்பவர்கள். கலை நிகழ்த்துவோர் ஏற்கும் பாத்திரத்திற்கேற்ப தனது உடல், மொழி, உடை, ஒப்பனை போன்றவற்றை அமைத்து கொண்டு கலைகளை நிகழ்த்திக்காட்டுவர். இக்கலைகளை நிகழ்த்துவோர் தனியாக இல்லாமல் பக்கத் துணையாக பாடலாசிரியர், மேடை அமைப்பாளர், துணை கதாபாத்திரங்கள், இசை கருவிகள் போன்றவையுடன் தனது கலைத்திறனை மக்களிடையே பிரதிபலிக்கின்றனர்.

## நிகழ்த்து கலைகளின் வகைகள்

பழந்தமிழ் இலக்கியங்கள் குறிப்பிடும் பொதுவியல் கூத்து நிகழ்த்து கலைகளாக வளர்ச்சி பெற்று இன்று பல்வேறு இடங்களில் நிகழ்த்தப்பட்டு வருகின்றது. இக்கலைகள் பெரும்பாலும் கிராமியம் சார்ந்தவைகளாக உருவெடுத்து வளர்ச்சி பெற்றுள்ளது. நிகழ்த்து கலைகளாக நாட்டுப்புறக் கலைகளை குறிப்பிடுகின்றனர். இக்கலையானது இரண்டு பெரும் பிரிவுகளில் உள்ளடக்கி பகுக்கப்பட்டுள்ளது.

- நாட்டுப்புற நிகழ்த்து கலைகள்
- நாட்டுப்புறக் கைவினைக் கலைகள்

## நாட்டுப்புற நிகழ்த்து கலைகள்

நாட்டுப்புற மண்ணில் முகிழ்த்து, மண்ணின் மணத்தோடு நாட்டுப்புற மக்களால், கலைஞர்களால் மரபு வழியாக நிகழ்த்திக் காட்டப்படும் கலைகள் நாட்டுப்புற நிகழ்த்து கலைகள் எனப்படும். நாட்டுப்புற நிகழ்த்து கலைகளாக வில்லுப்பாட்டு, கும்மி, சிலம்பம், மயிலாட்டம், காவடியாட்டம், மெலட்டூர் பாகவத மேளா, குடமுழவம் இசைப்பு, மன்மதன் நாட்டிய நாடகம், பூம்பூம்; மாடு கூத்து, தோற்பாவைக் கூத்து, தப்பாட்டம், பொய்க்;கால் குதிரையாட்டம், உடுக்கையாட்டம், தீச்சட்டியாட்டம், குறவன் குறத்தி நடனம், இலாவணி, காளியாட்டம் மற்றும் உடுக்கையாட்டம் முதலானவற்றை குறிப்பிடுகின்றனர்.

## நாட்டுப்புற கைவினைக் கலைகள்

தொழில் சார்ந்த கலைகள் கைவினைக் கலைகள் ஆகும். பெரும்பான்மையும் இக்கலையானது கிராமப்புறங்களில் வாழும் மக்கள் தங்களின் அன்றாடத் பொருளாதாரத் தேவைக்காக தங்களுக்கு அருகில் கிடைக்கும் மூலப் பொருள்களைக் கொண்டு பயன்பாட்டுப் பொருள்களைத்; தயாரிப்பது ஆகும். மண்பாண்டங்கள் செய்தல், மூங்கில் கூடைகள் வனைதல், பாய் முடைதல், பட்டு நெசவு செய்தல், பிரம்பு பின்னுதல், மண் பொம்மைகள் தயாரித்தல், விளக்கு தயாரித்தல், வீணை தயாரித்தல், இசைக்கருவி தயாரித்தல், ஓவியம் புனைதல், கருங்கல் சிற்பம் வடித்தல், கலைத்தட்டு உருவாக்கம், மரச்சிற்பக் கலை மற்றும் உலோக சிற்பம் வடிவமைத்தல் போன்றவற்றை கிராமப்புறக் கைவினைக் கலைகளாக குறிப்பிடுகின்றனர்.

இக்கட்டுரையின் பக்க வரையறைகளை முன்னிறுத்தி மேற்கண்ட இக்கலைகளில் சில கலைகள் குறித்து இங்கு ஆராயப்படுகின்றது.

## மெலட்டூர் பாகவத மேளா

செவ்வியல் மரபுகள், காலப்போக்கில் சிதைவுகட்கு உட்பட்டாலும், வெவ்வேறு வடிவங்களில் தமது வேர்களையும் விழுதுகளையும் நிலை நாட்டிக்கொள்ளும் நீர்மையினைப் பெற்றிருப்பன. இயல், இசை, நாடகம் எனும் முப்பரிமாணங்களுள் நாடகம் சார்ந்த நடன வெளிப்பாட்டு வடிவம் பாகவத மேளாவாகும். "இந்திய அளவிலான பழமையான நாட்டிய நாடக மரபினை இனகாட்டுவதாக இக்கலையானது அமைந்துள்ளது என்பதை முனைவர் கு. முருகேசன் அவர்கள் குறிப்பிடுகிறார்". இச்செய்திகளை கவிஞர்; எழிலவன் அவர்கள் தனது நூலில் எடுத்துரைக்கிறார்.

இரண்டாயிரம் ஆண்டுகட்கு முற்பட்ட பரத நாட்டிய சாத்திர மரபு, தமிழ்நாட்டின் பாகவத மேளாவில் பின்பற்றப்படுவதாக அறிஞர்கள் கூறுகின்றனர்;. 16 – ஆம் நூற்றாண்டில் தமிழ் மண்ணில் தழைத்தோங்கிய இந்தக் கலை

வடிவத்திற்கு மன்னர்களும் (குறிப்பாக அச்சுதராயர்) மக்களும் பேராதரவு அளித்தனர். வைணவ வழிபாட்டு மரபில் இலட்சுமி நரசிம்மருக்கு அவரது அடியார்கள் வழங்கும் கொடையாக பாகவதமேளா உருவகம் கொண்டுள்ளது. இறையன்பினை முன்னிறுத்தி திருமால் தொடர்பான மாக்கதைகளுள் ஒன்றினை வேடம் புனைந்து இசை, ஆடல், பாடல் இணையப்பெற்று இரவு முழுவதும் ஆடவர்கள் நிகழ்த்தும்; தொழில்முறையல்லாத அரங்கக் கலையாகும்.

தஞ்சை மாவட்டத்தைச் சேர்ந்த நல்லூர், மெலட்டூர், சூலமங்கலம், தேப்பெருமாநல்லூர், ஊத்துக்காடு, சாலியமங்கலம், மன்னார்குடி, காரிமங்கலம், போன்ற ஊர்களில் பெரு வழக்கிலிருந்து பெரும்பாலும் மறைந்து போய் இன்றைய நிலையில் சாலியமங்கலம், தேப்பெருமாநல்லூர், மெலட்டூர் ஆகிய ஊர்களில் மட்டும் நடைமுற்றையில் உள்ளது. அழியும் நிலையில் இருந்த இக்கலையினை மீட்டுருவாக்கம் செய்தது மெலட்டூர் என்னும் பகுதியாகும். எனவே இக்கலையை 'மெலட்டூர் பாகவத மேளா' என்ற அடைமொழியுடன் அழைக்கப்படுகின்றது. ஆண்டுதோறும் மே மாதம் அல்லது ஜுன் முதல் வாரத்தில் நரசிம்மர் செயந்தி நாளில் பாகவத மேளா மெலட்டூரில் இதிகாசம் தொடர்பான நாடகங்களை கொண்டு நிகழ்த்தப்படுகிறது. புராண கதைகளில் அதிக வரவேற்பை பெறுவது பிரகலாதன் கதையாகும். பாகவத மேளாவிற்குப் பக்க இசைக்கருவிகள் ஆர்மோனியம், தம்புரா, புல்லாங்குழல், பிடில், தாளம், வயலின், மத்தளம், போன்றவைகள் பயன்படுத்தபடுகின்றன.

பாகவத மேளா தொடக்கக் காலத்தில் தெலுங்கு மொழியில் மட்டுமே நிகழ்த்தும் கலையாக இருந்ததாகவும் இது காலப்போக்கில் மாறி 'ஆண்டாள் திருமணம்' போன்ற தமிழ் நாடகங்களை நிகழ்த்தும் நிலைக்கு பரிணாமம் கண்டுள்ளது என்பதை கவிஞர் எழிலவன் தனது கட்டுரைகளில் பதிவு செய்துள்ளார். 'பாகவத மேளா கலைஞரான மெலட்டூர் ஆர். மகாலிங்கம் என்பாரை நேர்காணல் செய்து இக்கலையின் தொய்வு இடர்ப்பாடு முதலானவைகளையும் அவற்றைக் கடந்து நிலைத்த திறனையும்' தனது ஆய்வுத்தேடல்கள் வழி வெளிப்படுத்தியுள்ளார்.

## இலாவணி

கலை நிகழ்த்துநர்கள் தமக்குள் இரு அணிகளாக பிரிந்து, அரங்கம் ஒன்றில், இரவுப் பொழுதில், கதைச் சார்ந்த ஒரு கருத்தினை ஒட்டிச் சுவையாகவும் சுறுசுறுப்பாகவும் சூடாகவும் வாதம் செய்து மக்களை மகிழ்விக்கும் புலமை தழுவிய பொழுது போக்குக் கலை இலாவணியாகும். தமிழகத்தில் மன்மதன் கதையினை மையப்படுத்திக் காமன் பண்டிகைக் காலத்தில் நடத்தப்படும் இந்தப் பாமரக்கலை ஒரு குறிப்பிட்ட பகுதியில் மட்டுமே கணிசமாக நடைமுறையில் உள்ளது. முந்நூறு ஆண்டுகளுக்கு முன்னர் மராட்டியத்திலிருந்து தஞ்சையில் தஞ்சம் புகுந்து, தமிழ் மக்களின் நெஞ்சம் புகுந்து ஒலி வழி ஊடகமாக திகழ்கிறது. எளிய இனிய கருத்துப் பரவலின் வெளிப்பாடாகும்.

## தோற்பாவைக்கூத்து

தமிழகத்தின் பல்வேறு கூத்துக் கலைகளுள் ஒன்றாக தோற்பாவைக் கூத்து பொழுதுபோக்குவதற்கு மட்டுமல்லாது புராண, இதிகாச, சமுதாய நிகழ்வுகளையும் செய்திகளையும் பார்வையாளர்களுக்கு அணுக்கமாவும் ஆர்வமூட்டும் வகையிலும் நிழற்காட்சிப்படுத்தி நெஞ்சிற்பதிக்கும் நாடகப் பாங்குடைய நல்லதொரு ஊடகமுமாகும். பதப்படுத்தபட்ட ஆட்டுத் தோலில் வரையப்பட்ட வண்ணப்படங்களை விளக்கின் ஒளி மூலம் திரைச்சீலையில் அதன் நிழல் தெரியுமாறு ஆட்டி நிகழ்த்துவது தோற்பாவைக் கூத்து.

இக்கலையினை தோல்பாவைக் கூத்து, தோல்பாவை நிழல் கூத்து, நிழலாட்டம், தோல் பொம்மலாட்டம் என் பல்வேறு பெயர்களிலும் அழைக்கப்படுகின்றனர். "நாடகப் பண்பு கொண்ட நிகழ்த்துதலில் மானுடக் கைகளால் உயிரற்ற பொருள்களை உயிருள்ளவை போல இயக்கிக் கதை சொல்லும் பாவைக்கூத்து தனித்தன்மை வாய்ந்த ஒரு கருத்துப் புலப்படுத்தத் கலையாகும் என்பார் நாட்டுப்புறவியல் அறிஞர் தே. லூர்து அவர்கள்." இக்கலையானது தமிழகத்தில் மதுரை, தூத்துக்குடி, கன்னியாகுமரி, விருதுநகர் ஆகிய மாவட்டங்களில் நிகழ்கிறது. பண்டையக் காலத்தில் மரத்தினால் செய்யப்பட்ட பாவைகளை இயக்கினர் என்பதை வள்ளுவரின் குறள்பாவில் இருந்து அறிய முடிகின்றது.

> **"இரப்பாரை இல்லாயின் ஈர்ங்கண்மா ஞாலம்**
> **மரப்பாவை சென்றுவந் தற்று."** **(குறள்: 1058)**

இரப்பவர் இல்லையானால் இப் பெரிய உலகின் இயக்கம் மரத்தால் செய்த பாவை கயிற்றினால் ஆட்டப்பட்டுச் சென்று வந்தாற் போன்றதாகும் என்று இக்குறட்பாவில் விளக்கம் அளித்துள்ளார். இக்கருத்திலிருந்து மரத்தினால் செய்யப்பட்ட பாவைகள் இருந்துள்ளமை காண முடிகின்றது. மேலும், "ஒரு கருத்தினை மக்களுக்கு எளிதில் புரிய வைப்பதற்கு ஏற்றதொரு ஊடகமாகத் தோற்பாவைக் கூத்து திகழ்வதாக அ.கா. பெருமாள்

அவர்கள் கூறியுள்ளார்". இப்பாவைக் கூத்தை பொம்மலாட்டம் என்று இன்றைய உலகினர் அழைக்கின்றனர்.

"பாவை அன்ன பலர்ஆய் வனப்பின்"

(நற். 319:7)

"நாண்அகத் தில்லார் இயக்கம் மரப்பாவை
நாணால் உயிர்மருட்டி யற்று"

(குறள். 1020)

இவ்வரிகளில் இருந்து சங்க காலம் தொட்டு பாவைக் கூத்து புழக்கத்தில் இருந்தமை தெளிவாகின்றது.

## தொகுப்புரை

- தமிழர்களின் மரபுக்கலைகள் காலப்போக்கில் மறைந்து வருவதை கவனத்தில் கொண்டு இன்றைய இளம் தலைமுறையினருக்கு அறிமுகப்படுத்தி நிலை நிறுத்தும் வகையில் கவிஞர் எழிலவன் தமிழர்களின் மரபுக்கலைகளைப் பற்றி நீண்ட ஆய்வினை நிகழ்;த்தி உள்ளார்.
- கவிஞர் எழிலவன் கலைகள் பற்றிய தனது தேடலில் இன்றைய சமூக சூழலில் இக்கலைகளைப் பாதுகாத்து வரும் கலைஞர்களின் வறுமை வாய்ப்பட்ட வாழ்க்கை நிலையினையும் வெளிக்கொணர்ந்துள்;ளார்.
- தமிழர்களின் மரபுக்கலைகள் பற்றிய கவிஞர் எழிலவனின் பணியானது மகத்தானதாக இருக்கிறது. தமிழுக்கும் தமிழர்க்கும் பெருமை அளிக்க கூடிய மரபுக்கலைகளை பாதுகாத்தல் இன்றியமையாதது என்பதை கவிஞர் எழிவனின் எழுத்துக்கள் உணர்த்துகின்றன.
- தமிழர் மரபுக்கலைகளை பற்றி கவிஞரான எழிலவன் மேற்க்கொண்ட ஆய்வுப் பார்வை அவரது எழுத்துக்களில் எழுத்து ஓவியமாக மிளிர்வதையும் நிகழ்த்து கலைகள் கண்முன் நிகழ்வது போல வாசிப்பார் மனதில் தோற்றம் அளிக்கும் வகையில் தனது மொழி நடை ஆளுமைத்திறன் கொண்டு கட்டுரைகளை கட்டமைத்துள்ளார்.

## முடிவுரை

கலைகளின் வளர்ச்சி படிநிலைகள் குறித்து ஆராய்ந்தும், தமிழர்களின் வாழ்வில் கலைகள் எந்த அளவிற்கு தோற்றம் பெற்று இன்றைய உலகில் மறைந்து வந்துள்ளது என்பதையும் இக்கட்டுரையின் வழி காண முடிகின்றது. இன்றைய காலக்கட்டத்தில் வழக்கத்தில் மிகவும் குறைந்த அளவிலே சில கலைகள் உருவாகி வருவதை வெளிப்படுத்தும் நோக்கத்திற்காகவும், அக்கலைகளை மீட்டுருவாக்கம் செய்யும் நோக்கத்திற்காகவும் வடிவமைக்கப்பட்டுள்ளது. எழிலவன் அவர்கள் தமிழக்கத்தின் மரபுக்கலைகள் என்னும் நூலின் வழியாக தமிழர்களின் கலைகளை தற்போது வாழும் இளைய தலைமுறையினருக்கு எடுத்துக்காட்டுகிறார். தமிழர்களின் மறைந்து வரும் கலைகளை அறிந்து கொள்ள பயன்படும் வகையில் இக்கட்டுரை அமைக்கப்பட்டுள்ளது.

## துணைநூற் பட்டியல்


1. கவிஞர் எழிலவன், தமிழகத்தின் மரபுக் கலைகள், மு.ப.ஆகஸ்டு 2010, பிளாக்ஹோல் மீடியா பப்ளிகேஷன் லிமிடெட், சென்னை – 600 083.
2. கீர்த்தி, திருக்குறள் மூலமும், எளிய உரையும், மு.ப. டிசம்பர் 2006, அருணா பப்ளிகேஷன்ஸ் சென்னை.
3. டாக்டர் விஜயலெட்சுமி இராமசாமி, நாட்டுப்புறவியல், மு.ப. டிசம்பர் 2004, சாந்தா பப்ளிஷர்ஸ், சென்னை – 600 014.
4. முனைவர் ஞானம், நாட்டுப்புறஇயல் தோற்றமும் வளர்ச்சியும், மு.ப 2017, சாரதா பதிப்பகம் சென்னை – 14.
5. டாக்டர் சு. சக்திவேல், நாட்டுப்புற இயல் ஆய்வு, பதினான்காம் பதிப்பு பிப்ரவரி, 2012, மணிவாசகர் பதிப்பகம், சென்னை – 600 108.
6. டாக்டர் விஜயலெட்சுமி இராமசாமி, நாட்டுப்புறக்கலை கதை இசைப் பொழிவு(கதா காலட்சேபம்), மு.ப. 2005, சாந்தா பதிப்பகம், சென்னை – 600 014.
7. தமிழக நிகழ்த்துக் கலை வரலாறு, ஜி.சேதுராமன், ஜே.ஜே. பப்ளிகேஷன்ஸ்.
8. நாட்டார் வழக்காற்றியல் - சில அடிப்படைகள், தே.லூர்து, நாட்டார் வழக்காற்றியல் ஆய்வு மையம்.
9. நாட்டுப்புறவியல் ஆய்வு முறைகள், ஆறு. இராமநாதன், தமிழ்ப் பல்கலைக் கழகம்.
10. வாழும் மரபுகள். ஆறு. இராமநாதன், தன்னனானே பதிப்பகம்.



**கட்டுரையாளர்கள்:**

**சி. ஆர்த்தி,**

தமிழ்த்துறை, முனைவர் பட்ட ஆய்வாளர், (முழு நேரம்) இராஜகோபாலசுவாமி அரசு கலைக் கல்லூரி, மன்னார்குடி – 614 001. (திருச்சி பாரதிதாசன் பல்கலைக்கழகம் இணைவுப்பெற்றது)

நெறியாளர் பெயர்: முனைவர் நா. தனராசன், கல்லூரி கல்வி இணை இயக்குனர் (ஓய்வு), தஞ்சாவூர் மண்டலம், தஞ்சாவூர்.

இணை நெறியாளர் பெயர்: முனைவர் இல. பொம்மி, தமிழ்த்துறைத் தலைவர், இராஜகோபாலசுவாமி அரசு கலைக் கல்லூரி, மன்னார்குடி – 614 001.

Article

# DESTIGMATISING DISABILITY IN FIRDAUS KANGA'S *TRYING TO GROW*




**G.Krishnaveni**
**Dr. B.Winmayil**

## INTRODUCTION

Stigmatization has its roots in the past, where one group of people discriminated against another based on their birth. In contemporary society, the most recognized forms of stigmatization include caste and race. However, there are many lesser-known factors contributing to marginalization, such as children neglected by their families or peers, children of divorced parents, physically and mentally disabled children, individuals discriminated against for their body size or appearance, those who have experienced childhood trauma or abuse, people struggling with addiction, speakers of minority languages, and those with a criminal history. Numerous studies have explored the struggles faced by ostracized groups, particularly those who are marginalized based on caste and race. Prominent works addressing these issues include Karukku by Bama, which discusses casteism, and various autobiographical writings on racism, such as those by Maya Angelou and Toni Morrison. Influenced by these writings, many activists have raised their voices, working to improve the lives of those stigmatized by race and caste, and advocating for their rehabilitation and social inclusion.

Stigmatization due to disability is often unnoticed in the society. Disability is a pervasive issue that transcends gender, nationality, and community. Individuals with disabilities are usually perceived as burdens to society or their families, viewed with either sympathy or embarrassment rather than as normal human beings. The resistance from disabled individuals, along with various civil rights movements in the late 20th century, has significantly contributed to the emergence of disability studies. This field aims to promote inclusivity for disabled individuals within an able-bodied society. "Disability studies is an interdisciplinary area of inquiry that emerged in the late twentieth century, articulating the activist dimension and simultaneously providing an academic perspective to the issue" (Mahanta, 2027, p. xiii). As an emerging academic field, disability studies have shaped societal perceptions of how disability is constructed and sustained. Its central argument posits that the oppression faced by disabled individuals is comparable to that experienced by marginalized groups based on caste, race, and gender. Historically, discussions surrounding disability have been less prominent than those focused on race, class, gender, and caste. However, contemporary literature has increasingly addressed disability, with numerous scholars and theorists exploring its implications.

## DISABILITY WRITINGS

Scholars like Stella Young, Tom Shakespeare, Linton, Heumann, Susan, and Mike Oliver have given voice for the rights of Disabled People. The disabled people, on the other hand, publish their biography as a means of showcasing their agitation as well as a call for other disabled people to come out from their shells. Helen Keller's autobiography The Story of My Life explores her experiences of being deaf and dumb. The Long Way Home by John O'Brien gives an autobiographical account of living with cerebral palsy and, My Left Foot by Christy Brown portrays a man who was suffering from cerebral palsy but learned to write and paint using his left foot. I Am Not a Mistake by Rebecca Atkinson reflects on the author's life with spina bifida. The Incredible Story by Naseema Hurzuk, presents the life of a paraplegic girl. Firdaus Kanga's semi-autobiography (which the article analyzes) depicts the life of a small boy Brit, who has Osteogenesis Imperfecta, a rare bone disease. He has shown how he was ostracized for his disability in familial as well as social context.

Firdaus Kanga's Trying to Grow is a typical example of fictional representation of disability as it captures some of the finest aspects of survival of disabled people in India. Besides, the author himself, as a person suffering from a bone disease that bound him to the limited mobility of his wheelchair, stands testimony to the attitude meted out to people of disability in the Indian context. Trying to Grow presents the anchorless position of the differently-abled that forces them to a state of seclusion and identity crisis leading to their ultimate surrender, despite their consistent efforts to overcome the stigmatic notions of the society. Their relegation to the margins and the resultant feeling of alienation are sometimes further reinforced by the well-ingrained codes of social behavior of their respective communities. (Hameed, 2018, p.60)

Firdaus Kanga employs a semi-autobiographical approach to delve into the stigma surrounding disability, exploring the impact on both the protagonist, Brit, and his family within the context of Parsi culture. Brit, born with osteogenesis imperfecta, grapples with his condition, which limits his height to just four feet and affects his mobility. Through Brit's journey from childhood to his emergence as a writer, Firdaus Kanga poignantly illustrates the dual struggle against societal perceptions of disability and the complexities of navigating his cultural identity. This article explores the process of the protagonist Brit's life from stigmatization to destigmatization by applying the Models of Disability of the renowned Disability Rights Activist Mike Oliver.

## MODELS OF DISABILITY

Mike Oliver, an author with disability, sociologist, and activist, introduced several models to understand the factors contributing to the ostracism of disabled individuals: the Moral Model, the Medical Model, and the Social Model. These models also represent the evolution of disability studies, offering a framework to understand and address disability issues throughout history. Oliver's models distinguish two paradigms of disabled individuals: one is a passive observer who experiences society's discrimination, while the other is an active agitator who resists societal notions of disability and seeks recognition for the ability of the differently-abled people to thrive despite their impairments.

### I. MORAL MODEL

The moZral model of disability has its origins in ancient history when religion played a dominant role in shaping societal views. Disabled individuals were made to feel that they were unfortunate for not having an able-bodied form, which often led to feelings of guilt and remorse. People with schizophrenia, in particular, were seen not as mentally ill, but as being possessed by evil spirits or affected by witchcraft and were subjected to exorcisms and persecution. Brit's parents despite the medical confirmation of Brit's disability, lean more towards spiritual remedies, seeking blessings from Waga Baba, a charlatan. Their faith in this figure is rooted in the moral model, which views disability as a punishment from God. Their desperation for a miracle underscores their unwillingness to accept Brit's medical reality: "It was more out of desperation than a strong faith in his magical powers that prompted Sam to take Brit to him in the hope of an early cure" (Surendran, 1998, p. 194). Brit's disability is not only perceived as a personal burden but is also regarded as a societal punishment. Conversations in the theatre reveal a pervasive belief in lessons to be learned from his condition. An old man remarks, "You have learned no lessons from your birth," while on the beach, discussions about Brit reveal a tendency to see him as "punished" rather than simply disabled (Kanga, 2008, p. 223, 253).

### II. MEDICAL MODEL

The stigmatization of disabled individuals under the moral model was eventually replaced by the intervention of the medical model. The 18th and 19th centuries are considered a period of enlightenment for the disabled, as advancements in medical knowledge and practices began to emerge. The medical model was driven by the belief that medical science and its innovations could provide solutions to the challenges faced by disabled individuals, offering not only treatment to alleviate their trauma but also rehabilitation to improve their quality of life. According to the medical model,

> Disability was explained as a physical or cognitive deficiency that needed to be addressed on the level of the individual and did not have any link with the individual's social or geographical environments. While the role of medicine in alleviating pain and discomfort and in saving lives cannot be denied, it led to the institution of a normal body in terms of an acceptable level of human functioning. (Mahanta 21).

Over time, however, medical services were increasingly seen as a profitable business. Rehabilitation became more accessible to those who were wealthy, while the treatment of disability was often evaluated based on profitability. Those deemed unproductive were seen as destined to remain disabled.

In the era of Kanga, these medical models took another transition in which many fake physicians emerged to get more profit. His narrative critiques the exploitation of disability by medical professionals, mirroring the emergence of opportunistic figures like Waga Baba. Brit's parents, eager to find solutions, resort to dubious treatments suggested by these fake physicians. They encourage Brit to consume pearls powder and goat marrow, believing these remedies will strengthen his brittle bones. Brit, however, is skeptical: "Have you ever tasted the bone marrow of a goat? It made me sick, the black and white jelly I ate by the plate. Nobody believed me when I told them that bone marrow had nothing to do with brittle bones; it produces blood cells" (Kanga, 2008, p. 34). This blind faith in unproven treatments reflects a broader critique of the medical model and its failure to provide real solutions for individuals like Brit. Sera and Sam's refusal to question the efficacy of these remedies demonstrates how societal beliefs can hinder genuine understanding and acceptance of disability. The family's quest for normalcy that eludes Brit emphasizes the stigma surrounding disability.

The desperate lengths to which they will go in search of hope ultimately highlights the profound impact of cultural beliefs on the lived experience of disabled individuals. The character of Rutty Regina, who calls herself the "breathing generator," symbolizes the dubious nature of the treatment Brit receives. Despite her claims, Brit and his sister Dolly see through her facade and successfully send her away. This reflects the overarching theme of exploitation and the false promises often associated with the medical model of disability.

### III. SOCIAL MODEL

The Social Model has a significant departure from both Moral and Medical Models, critiquing societal barriers that hinder the active participation of disabled individuals. Mike Oliver (1983) defines the Social Model as a shift in focus from individual limitations to how physical and social environments impose constraints on specific groups. This model seeks to challenge societal sympathy towards disabled people, promoting instead a sense of pride and solidarity in their existence. It emphasizes that it is the environment, rather than the disability itself, that disables individuals. In a society predominantly shaped by able-bodied perspectives, disabled individuals often find themselves marginalized and segregated. Activists within disability studies argue that society unnecessarily imposes limitations on disabled persons, perpetuating impairment and exclusion. Their goal is to reform societal structures to promote equality and inclusivity. Unlike the Medical Model, which sought to correct individuals, the Social Model aims to reshape societal perceptions of disability. According to Oliver, it is society that ultimately defines the nature and extent of disability experienced by individuals, rather than the individuals themselves. This perspective profoundly impacts the psyche of disabled individuals, often leading to feelings of inferiority influenced by intersecting factors such as race, class, and gender.

The novel also illustrates the constraints imposed by the social model of disability. Brit, while physically capable in many ways, is treated like a fragile doll by his family and society. His dependency on them is not merely a result of his condition but is exacerbated by their fear of him breaking a bone. This leads to a life where essential items are placed beyond his reach, reinforcing his status as a dependent: "'But, Brit, you just have to ask. We're always here to help'" (Kanga 2008, p. 62). This statement, while apparently supportive, underscores his lack of autonomy. Moreover, Brit faces societal perceptions that further diminish his identity. When his neighbor Jeroo refers to him in conversation with his mother, she states, "I forgot about your son. You understand, when I say men, I mean – men. No someone like you Brit" (Kanga, 2008, p. 40). This interaction starkly illustrates how society has defined masculinity in a way that excludes Brit, reducing him to a mere shadow of a person in their eyes.

### BRIT'S TRANSFORMATION

The society perceived Brit's birth as a punishment. His parents' enforced dependency on him resulted in a false consciousness, making him believe he was incapable of achieving anything Until Madame Manekshaw came into his life. Education, a critical aspect of Brit's development, occurs largely at home due to the limitations imposed by his disability. However, Madame Manekshaw steps in to help him gain an education in a school setting, which provides him a glimpse of possibility beyond his confinement. Yet,

the social model continues to haunt him. During a school test, anxiety and self-doubt overwhelm him, leading to a physical reaction rather than seeking help, which ultimately confines him to home education again, yet he manages to excel academically. Despite his achievements, Brit's experience of being awarded a special prize for overcoming his disability reinforces the social model's limitations. He reflects on this moment with a mix of pride and resentment: "For heem, there ees an Especial prize!" (Kanga, 2008, p. 57).

While the applause swells around him, Brit feels diminished, wishing he could escape the spotlight that highlights his difference rather than his merit. His teacher's comment about viewing the prize from different perspectives further complicates Brit's feelings: "He was looking at your prize from a different window. He saw it as a shining reward for your being so strong. You felt he was giving it to you for being weak and handicapped" (Kanga 2008, p. 58). This highlights the internal struggle Brit faces. While he strives for acceptance and equality, he is often celebrated for merely existing within the confines of his disability rather than for his academic accomplishments.

Madame Manekshaw's encouragement and motivation are pivotal in Brit's journey toward self-acceptance. Initially plagued by feelings of inferiority due to his disability, Brit finds clarity through her words: "'To a lot of people, you seem stupid? because you are so short and, I know it's absurd, because you can't walk... Still, you feel sad that this is one door which is shut to you. You shouldn't, you know. Feeling sad won't open it'" (Kanga 2008, p. 68). Narendra Kumar (1997) notes that her insights serve as a catalyst for Brit's blossoming sensibilities, challenging him to move beyond viewing life solely through the lens of literature (p. 122).

After Madame Manekshaw's death, Brit's life takes a transformative turn with the arrival of Cyrus, Defarge's cousin's son. Cyrus provides a fresh perspective that allows Brit to escape his previous dependency on Sera, Sam, Dolly, and Defarge. He

introduces Brit to the joys of life: beaches, literary discussions, and vibrant outings. Cyrus's love for romanticism and nighttime adventures creates a bridge to a more fulfilling adult existence. Through this friendship, Brit begins to evolve from a dependent individual into a more independent person, learning the nuances of living life to the fullest. As Dolly settles abroad after her marriage, Brit finds himself grappling with feelings of loneliness. To cope, he immerses himself in writing, producing a short story that garners him both recognition and financial success. This creative outlet not only helps him conquer his loneliness but also reinforces his sense of self-worth, allowing him to see his value beyond his disability (Kumar, 1997, p. 123).

## BRIT'S QUEST FOR SELF

The sudden loss of his father deeply affects Brit, leaving him feeling isolated and in need of the support once provided by Cyrus and Dolly. Death and separation from loved ones affected Brit's psyche and he thought that he was living in a separate world lonely like Robinson Crusoe. Their absence forces him to confront the reality of his solitude, yet it also serves as a bridge connecting his tumultuous past with a more fluid present. Despite his grief, Brit finds solace in the kindness of Amy, who helps him navigate this difficult period. In a significant moment, Sera, his mother, leaves Brit under the care of a neglectful servant while she attends to her affairs. For the first time, Brit is allowed to be alone in the library. He was always dependent on anyone for all things and did not believe that he attacked his servant with the disabled body, who gave his best when the situation demanded him to prove his violence to save his life, lifted a huge book in his left hand and crashed the servant. Brit's violent attack made him analyse the strength of his body.

> "It was so huge, I wondered how I'd ever managed to lift it with one arm," Brit reflected, grappling with a mix of emotions. "Not for the book... not for Esmero.... For myself, and what I've done. Like Hitler or someone who felt so awful about themselves, so weak, so powerless, the only way that could feel all right was by making someone else feel that way" (Kanga 2008, p. 215).

In this moment, Brit recognizes the deep-seated frustration and anger that stems from his disability, as well as the societal perceptions that marginalizes him.

Cyrus, Amy, and Esmero play key roles in Brit's journey toward self-awareness. Cyrus's adventurous approach to life and discussions about sexuality encourages Brit to explore his own identity, igniting a sense of inner strength. Meanwhile, Amy's love and budding romance offers Brit a glimpse into his capacity for love and connection, affirming his identity as a man beyond his physical limitations. Esmero's treatment of Brit, while initially dismissive, ultimately challenges him to recognize his body's capabilities and resilience, instilling a newfound courage that propels him toward embracing his individuality. Together, these relationships help Brit navigate his complex emotions and foster a sense of empowerment, allowing him to confront the realities of his existence with greater confidence.

The quintessential is, when Brit and Amy's intimacy attracts pity from onlookers, Brit boldly asserts,

I know it's no fun looking at me. Because I don't like looking at blind or lame people either. But try to believe that people live inside themselves; they aren't their bodies only. And no, I'm not rich, and this girl has nothing wrong with her. We're just happy to be together" (Kanga 2008, p. 253-254).

This courageous response marks a significant shift for Brit; the boy who once shied away from peers and felt the weight of pity now embraces his identity with confidence. Brit begins to realize he can navigate life without the constant support of Sera, Sam, Dolly, or even Cyrus. He adapts his living space to be more accessible, and determined to live independently.

The desire for self-sufficiency pushes him to start writing, and although his early attempts are challenging, he gradually develops a clear and consistent voice. Ultimately, as he struggles to exit an elevator and gets his reflection in the mirror, he shifts from longing for a conventional physique to appreciating his own four-foot-tall body. Firdaus Kanga's (Brit) remarks, "There are some things we just can't believe. I liked the way I looked" (Kanga 2008, p. 280). The man who hated his disabled body and independence now accepts and admires his body and achieves autonomy.

## DESTIGMATIZING DISABILITY

Destigmatizing disability is a complicated task that needs different approaches to help people understand, focusing on changing societal perceptions, and accepting disabilities better. According to Erving Goffman (1963), encouraging social interactions between disabled and non-disabled people is important because direct contact can "reduce fear and promote empathy". He explains that stigma arises from societal perceptions, and it can be diminished through understanding and interaction with the disabled. (Goffman, 1963). To Destigmatize disability, one must not consider it from a deficit standpoint, as it primarily focuses on barriers, problems, and difficulties. This is a very limiting perspective and can reinforce stigma and discrimination in society. This is of great importance as it does not multiply the fact that disability is an aspect of a person's self-concept, and it should not be seen as a discouragement. Instead, we can appreciate the diversity of mankind by viewing disability as such and appreciate the assets and ideas of the disabled. These activities involve the participation of disabled people, commitment to their experiences and appreciation of inclusivity. If we change the context in which issues arise about discrimination, we increase understanding, lessen stigma and create a fairer environment for all people where their contributions and background get respect.

## CONCLUSION

Brit's transformation from self-absorption to self-actualization is a powerful testament to his growth. His realization of his creative potential represents a key moment in his journey toward independence and acceptance. Firdaus Kanga's portrayal of the Parsi community's beliefs and the societal restrictions placed on disabled individuals are drawn from both imaginative and autobiographical elements. His honest depiction of the desires and erotic longings of disabled people, particularly those in wheelchairs, offers a critique of traditional beliefs and highlights the impact of superstition on his experiences. Brit doesn't resort to violence in his fight against stigma; instead, he uses his writing as a powerful tool for self-advocacy. The impetus for his destigmatization journey comes not from external forces but from his personal experiences and the self-awareness he develops about his body. Through this introspection, Brit carves a path toward breaking free from societal prejudices. Brit's life experience could be taken as a wakeup call to all differently abled people to be free from stigmatization.

## REFERENCES


1. Goffman E. (1963). Stigma. London: Penguin.
2. Hameed, Shahul A. (2018). Between Exclusion and Inclusion: Representation of Disability in Firdaus Kanga's Trying to Grow. Quest Journals. https://www.questjournals.org/jrhss/papers/vol6-issue1/K616063.pdf
3. Kanga, Firdaus. (2008). Trying to Grow. Penguin Books.
4. Kumar, N., & V.L.V.N. (1997). New perspectives on Indian writing. Prestige Books.
5. Mahanta, B. (2017). Disability studies: An introduction. Yking Books.
6. Oliver, M. (1983). Social work with disabled people. Macmillan.
7. Surendran, K. P. (1998). *Firdaus Kanga's Trying to* Grow: A tale of sensual and adorable. The fiction *ofRohinton Mistry: Critical studies (pp. 192–207). Prestige Books.*


●


**Mrs. G. Krishnaveni Ph.D. Scholar,**
Research Centre in English, V.V.Vanniaperumal
College for Women, Virudhunagar.

**Dr. B. Winmayil,**
Assistant Professor of English,
V.V.Vanniaperumal College for Women, Virudhunagar.

## நியூ செஞ்சுரியின் புதிய வெளியீடு

# தோழர் தமிழ்ஒளி ஆக்கங்கள்

## ஆறு தொகுதிகள்

### தோழர் தமிழ்ஒளி (1925 – 1965) நூற்றாண்டுச் சிறப்பு வெளியீடு




| | |
|---|---|
| தொகுதி-1 : தோழர் தமிழ்ஒளி கவிதைகள் | விலை: ரூ.390/- |
| தொகுதி-2 : தோழர் தமிழ்ஒளி காவியங்கள் (பகுதி ஒன்று): | விலை: ரூ.315/- |
| தொகுதி-3 : தோழர் தமிழ்ஒளி காவியங்கள் (பகுதி இரண்டு) | விலை: ரூ.390/- |
| தொகுதி-4 : தோழர் தமிழ்ஒளி சிறார் பாடல்கள் - கதைகள் | விலை: ரூ.315/- |
| தொகுதி-5 : தோழர் தமிழ்ஒளி சிறுகதைகள் - ஓரங்க நாடகங்கள் | விலை: ரூ.360/- |
| தொகுதி-6 : தோழர் தமிழ்ஒளி ஆய்வுகள் - கட்டுரைகள் - தன் வரலாறு | விலை: ரூ.430/- |

**நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்.,**

41-பி,சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட், அம்பத்தூர், சென்னை - 600 050.

☎ 044 - 26251968, 26258410, | www.ncbhpublisher.in | email: info@ncbh.in


நியூ செஞ்சுரி புத்தக நிறுவனத்தின் அனைத்து கிளைகளிலும் மற்றும் புத்தகக் கண்காட்சி அரங்குகளிலும் கிடைக்கும்.

Published by **Shanmugam Saravanan** on behalf of **New Century Reader's Sangam** at 16 (142), Jani Jhan Khan Road, Royapettah, Chennai - 600 014 and Printed by **A.Sivakumar** at **Pavai Printers (P) Ltd.,** 16 (142), Jani Jhan Khan Road, Royapettah, Chennai - 600 014. Editor: **T.Stalin Gunasekaran**

New Centurian Ungal Noolagam (Tamil English - Bilingual Monthly) Registered with RNI No :TNBIL/2009/28728. Postal Regn No.TN/CH(C)/601/2025-2027. WPP No: TN/PMG(CCR)WPP-673/2025-2027
Date of publication 1-7TH of every month Posted at Egmore RMS, Patrika Channel, chennai - 08
If undelivered, please return to: New Centurian Ungal Noolagam,
16 (142), Jani Jhan khan road, Royapettah, Chennai - 14.

தமிழ் வளர்ச்சித் துறை • நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்

# அண்ணல் அம்பேத்கர் ஆக்கங்கள்




தமிழ்நாடு அரசின்
**மக்கள் பதிப்பு**
**100**
தொகுதிகள்

முதற்கட்டமாக
**10**
தொகுதிகள்
தற்போது விற்பனையில்

3300 பக்கங்கள்
**ரூ 1000/–**
10 தொகுதிகளும் சேர்த்து

**நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்.,**
41-பி,சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட், அம்பத்தூர், சென்னை - 600 050.
☎ 044 - 26251968, 26258410, | www.ncbhpublisher.in | email: info@ncbh.in